# தமிழரசு

1-12-1991 ரூ.1





AIR

# இந்த இதழில்...


தமிழ்நாட்டில் மத்தியக் குழு ... 2

காவிரி: நீதிமன்றத் தீர்ப்புக்கு முதல்வர் வரவேற்பு ... 4

எல்லாத் துறைகளிலும் மகளிர் ... 7

சென்னையில் சர்வதேசக் கால்பந்துப் போட்டி ... 8

மழை பாதித்த இடங்களில் முதல்வர் ... 10

தமிழன்னையின் புதிய அணிகலன் ... 12

உலகிலேயே தலைசிறந்த செல்வம் கல்வியே! ... 17

மீன் வளர்ப்பு வினா-விடை ... 20

திண்டுக்கல்-அண்ணா மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 24

சேமிப்போம் சேமமுற வாழ்வோம் (கவிதை) ... 28

உணவே மருந்து (மருத்துவம்) ... 31

புயல் மழை வெள்ள இடர்ப்பாடுகள் — *முதல்வரின் தொலைக்காட்சி உரை* ... 33

சருகுமலைப் பழங்குடி மக்கள் ... 37

பசுக்கள் அதிகம் பால் கறக்க ... 40

புயல்-வெள்ள விளைவால் நோய்கள்: முதல்வர் நடவடிக்கை ... 41

சிறுநீரக இயல் துறை மாநாடு ... 42

காவிரி: மத்திய அரசு அறிக்கை ... 44

மதுவினால் அழிந்த சாம்ராஜ்யம் ... 45

மாணவர் பக்கம் ... 47



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

கார்த்திகைத் திங்கள் - 15

மலர்: 22 இதழ்: 11

1-12-1991


அடுத்த இதழில் — எழில்மிகு சென்னை 2000... மூர்மார்க்கெட் வளாகத் திறப்பு விழா... துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச மழைக்கோட்டு வழங்கும் விழா நிகழ்ச்சிகள் தொகுப்பு.



### ரூ.340 கோடி வெள்ளச்சேதம்

# தமிழகத்தில் மத்தியக் குழு

தமிழ்நாடு முழுவதும் பெய்த கடும் மழையினால் 340 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசின் செய்திக் குறிப்பில் இது குறித்துக் கூறப்பட்டுள்ளதாவது:

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் ஏற்பட்ட கடும் மழையினாலும், புயலினாலும் ஏற்பட்ட சேதங்கள் குறித்து 20-11-1991 அன்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவிடம் டெலிபோன் மூலம் கூறினார். மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முதல் கட்ட மதிப்பீட்டின்படி தமிழகம் முழுவதும் வெள்ளம் மற்றும் புயலால் 340 கோடி ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது. இயற்கைச் சீற்றங்களால் ஏற்படும் சேதத்துக்கான தமிழக அரசின் நிவாரண நிதி 39 கோடியில், இதுவரை ஒன்பது கோடி ரூபாய் செலவிடப்பட்டு உள்ளது.

தமிழக அரசிடம் இப்போது இதற்கான நிதியில் 30 கோடி ரூபாய் மட்டுமே உள்ளது. இந்த நிதியை மட்டும் வைத்துக் கொண்டு 340 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்பட்டுள்ள சேதத்துக்கு நிவாரணம் காண முடியாது என்பதைப் பிரதமரிடம் முதல்வர் எடுத்துக் கூறினார். பிரதமர் நரசிம்மராவ் அவர்களிடம் தமிழக வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்து, நிதி உதவி செய்ய வசதியாக மத்திய நிபுணர் குழு ஒன்றை உடனடியாக அனுப்பும்படியும் கோரிக்கை விடுத்தார். முதல்வர் அவர்களின் கோரிக்கையை ஏற்ற பிரதமர் தமிழக வெள்ள, புயல் சேதங்களைப் பார்வையிட்டு மதிப்பீடு செய்ய உடனடியாக மத்திய நிபுணர் குழுவை அனுப்புவதாக உறுதி கூறினார்.

## மத்தியக் குழு தமிழகம் வருகை

அதன்படி மாண்புமிகு மத்திய வேளாண்மைத் துறை அமைச்சர், திரு. பல்ராம் ஜாக்கர், மாண்புமிகு மத்திய பாராளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் சட்டத் துறை இணையமைச்சர், திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் மற்றும் மத்திய உயர் அலுவலர்கள், திரு. பந்த், திரு. நரசிம்மன் ஆகியோர் 24.11.1991 அன்று காலை 10 மணிக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களை, அவர்தம் இல்லத்தில் சந்தித்து வெள்ளச் சேதம் பற்றி விவாதித்தார்கள்.

தமிழகத்தில் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் பெருமழையின் காரணமாக விளைந்த வெள்ளச் சேதங்கள் குறித்தும், வெள்ள நிவாரணப் பணிகளுக்கான மத்திய அரசு உதவி குறித்தும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் அவர்கள் விவாதித்தனர். அப்பொழுது தமிழக அரசினால் தயாரிக்கப்பட்ட 'சேத-மதிப்பீட்டு அறிக்கை' ஒன்றினை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய குழுவினரிடம் கொடுத்தார்.

ஆரம்ப கட்டச் சேத மதிப்பீடு ரூ.340 கோடி என்று கணக்கிடப்பட்டது. தற்போது பெறப்பட்ட முழுமையான மாவட்ட அறிக்கைகள் அடிப்படையில் மொத்தச் சேத மதிப்பீடு ரூ.390.53 கோடி என்ற விவரமும், சமீபத்திய வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்களில் மொத்தம் 185 பேர் உயிரிழந்தனர் என்பதும் இக்குழுவிற்குத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், 2,62,287 குடிசைகள் மழை வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளன; 362 கால்நடைகள் இறந்துள்ளன; 7,048 கி.மீ. நீளம் சாலைகள் பழுதடைந்துள்ளன; 809 குளங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளன; 1,40,500 எக்டேர் பரப்பிலுள்ள நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாண்டிற்கான தமிழக அரசு துயர் துடைப்பு நிதி ரூ.39 கோடி என்று நிர்ணயிக்கப்பட்டது. ஏற்கெனவே வறட்சி நிவாரணப் பணிகளுக்கான ரூ.9 கோடி செலவிடப்பட்டுள்ளதால், தற்போது ரூ.30 கோடி மட்டுமே மாநில அரசிடம் உள்ளது. அடுத்த ஆண்டிற்கான துயர் துடைப்பு நிதியை இப்பொழுதே மத்திய அரசிடமிருந்து பெறலாம் என்ற யோசனை மத்திய அரசின் குழுவினரால் தெரிவிக்கப்பட்டது. முதல்வர் அந்த யோசனையை வரவேற்ற போதிலும், அடுத்த ஆண்டிற்கான துயர் துடைப்பு நிதியின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் குழுவினரிடம் முன்வைத்தார்.

இதைத்தவிர, தமிழ்நாடு முழுவதிலும் சாலைகள், பாலங்கள், நீர்ப்பாசன ஏரி, குளங்கள், மின் இணைப்புக் கம்பிகள், போன்ற இன்றியமையாத தேவைகள், பெருமளவில் சேதம் அடைந்திருப்பதால், இவற்றையெல்லாம் உடனடியாகச் சீரமைத்தே ஆகவேண்டும் என்ற நிலை இருக்கிறது. இத்தகைய பணிகளுக்கு மாநில அரசுக்கு வழங்கப்படும் துயர் துடைப்பு நிதிக்கு மேல் பெருமளவில் மத்திய அரசு நிதி உதவி அளித்தால்தான், தமிழகத்தின் அன்றாட வாழ்க்கையை இயல்பான நிலைக்குத் திரும்பக் கொண்டு வரமுடியும் என்பதை முதல்வர் குழுவினரிடம் எடுத்துரைத்து வலியுறுத்தினார்.

மத்திய அமைச்சர்கள் இருவரும், அவருடன் வந்த மத்திய அரசு உயர் அலுவலர்கள் குழு, இதைப்பற்றி மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் விவரங்களைத் தெரிவித்து, முடிந்த அளவிற்குத் தமிழகத்திற்கு, நிதி உதவியை அளிக்க ஆவன செய்வதாக உறுதி அளித்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்தித்த பிறகு, சென்னை விமான நிலையத்தில் இருந்து அன்று காலை 11.15 மணிக்கு, விமானப் படைக்குச் சொந்தமான ஆவ்ரோ விமானத்தில் மாண்புமிகு மத்திய வேளாண்மைத்துறை அமைச்சர் திரு பலராம் ஜாக்கர், மாண்புமிகு மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு ரங்கராஜன் குமாரமங்கலம் ஆகியோர் வெள்ளப் பகுதிகளைப் பார்வையிடச் சென்றனர். அவர்களுடன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு அழகு திருநாவுக்கரசு, மேதகு பாண்டிச்சேரி துணைநிலை ஆளுநர் ஹர்ஸ்வரூப் சிங். மாண்புமிகு பாண்டிச்சேரி முதல்வர் திரு வைத்தியலிங்கம், தமிழக அரசு நிலச் சீர்திருத்த ஆணையர் மற்றும் செயலர் திரு சி.என். ராமதாஸ், தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஜி.இ. ராமகிருஷ்ணன் ஆகியோர் சென்றனர்.

அவர்கள் கடலூர், சிதம்பரம், நாகப்பட்டினம், தஞ்சை திருச்சி, பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் காலை 11.15 மணி முதல் பிற்பகல் 1.45 மணி வரை வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டனர்.

அன்று காலை 11 மணிக்குத் தலைமைச் செயலகத்தில் மத்தியக் குழுவைச் சேர்ந்த அலுவலர்கள் திரு. பந்த், திரு. நரசிம்மன் ஆகியோர், தலைமைச் செயலர், வருவாய்த்துறைச் செயலர், சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., நாகப்பட்டினம்-காயிதே மில்லத் ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆகியோருடன் வெள்ளச் சேத விவரம் குறித்து விரிவாக விவாதம் நடத்தினார்கள்.

—என். இளங்கோ





# காவிரி நீர்ப் பிரச்சினை:

# உச்ச நீதிமன்றம் தீர்ப்பு:

## மாண்புமிகு முதல்வர் வரவேற்பு

**கா**விரித் தண்ணீரைப் பங்கிட்டுக் கொள்வது சம்பந்தமாகத் தமிழ்நாட்டுக்கும், கர்நாடக மாநிலத்துக்கும் இடையே நீண்ட நாட்களாகத் தகராறு இருந்து வந்தது. பலமுறை இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடந்தது. எனினும் எந்த முடிவும் ஏற்படவில்லை.

இதைத் தொடர்ந்து காவிரி நீரப் பிரச்சினையை விசாரிக்க, நடுவர் மன்றத்தை மத்திய அரசு அமைத்தது.

1990-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2-ஆம் தேதி இந்த நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது.

1990-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 28-ஆம் தேதி நடுவர் மன்றம் முதன் முதலாக விசாரணையைத் தொடங்கியது. 'தஞ்சையில் வறண்டு கிடக்கும் பயிர்களைக் காப்பாற்றுவதற்காகத் தண்ணீர் திறந்து விடும்படி இடைக்கால உத்தரவு பிறப்பிக்க வேண்டும்' என்று தமிழ்நாடு அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடுவர் மன்றம், தமிழ்நாட்டுக்குக் காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது.

நடுவர் மன்றம் பிறப்பித்த இந்த உத்தரவை மத்திய அரசு 'கெசட்'டில் வெளியிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் வற்புறுத்தி வந்தார். மத்திய அரசு 'கெசட்'டில் வெளியிட்டால்தான் இந்த உத்தரவை அமல்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

இது சம்பந்தமாக மத்திய அரசு பரிசீலனை செய்து வந்தது.



இதற்கிடையில் கர்நாடக அரசு திடீரென்று இந்த இடைக்கால உத்தரவுக்கு எதிராக, 'அவசரச் சட்டம்' ஒன்றைப் பிறப்பித்தது. அதாவது, 'காவிரியில் தண்ணீர் விட வேண்டும்' என்று நடுவர் மன்றம் பிறப்பித்த உத்தரவை அமல் படுத்துவதற்கு இந்த அவசரச் சட்டம் மூலம் தடை விதித்தது. நடுவர் மன்றத்துக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் கிடையாது என்று கர்நாடக அரசு வாதாடி வந்தது.

இதன் எதிரொலியாகச் 'சட்டச் சிக்கல்' ஏற்பட்டது. தமிழக அரசு இது குறித்து மீண்டும் மத்திய அரசிடம் முறையிட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்து இது பற்றி முறையிட்டார்.

இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தலைமையில் மத்திய அமைச்சரவை கூடி விவாதித்தது. கூட்டத்தில், 'சட்டச் சிக்கல்' உள்ள காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து குடியரசுத் தலைவர் மூலம் டெல்லி உச்ச நீதிமன்றத்தின் கருத்தை அறிந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

மத்திய அரசு இது சம்பந்தமாக இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்களுக்குக் கடிதம் அனுப்பியது. அவர் இது குறித்து உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்குக் கருத்துக்களைத் தெரிவிக்கும்படி கடிதம் எழுதினார்.

நடுவர் மன்றத்திற்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்க அதிகாரம் உண்டா? கர்நாடக அரசு அவசரம் அவசரமாகப் பிறப்பித்த 'அவசரச் சட்டம்' செல்லுமா? என்பதைப் போன்ற கேள்விகளுக்குப் பதில் தருமாறு அக்கடிதத்தில் அவர் கேட்டிருந்தார்.

டெல்லி உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தலைமையில் 5 பேர் கொண்ட 'பெஞ்ச்' குடியரசுத் தலைவர் கடிதம் பற்றி விசாரணை நடத்தியது.

### உலகக் குழந்தைகள் திரைப்பட விழா

7-வது உலகக் குழந்தைகள் திரைப்பட விழா 14.11.'91 அன்று திருவனந்தபுரத்தில் தொடங்கியது. 10 நாள் நடைபெற்ற இந்த விழாவில் சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர். 24 நாடுகளிலிருந்து சுமார் 75 திரைப்படங்கள் இந்த 10 நாள் விழாவில் திரையிடப்பட்டன.

தமிழக அரசின் சார்பில் பிரபல வக்கீல் பராசரன், அட்வகேட் ஜெனரல் கே. சுப்பிரமணியன் ஆகியோர் வாதித்தனர். மத்திய அரசின் சார்பில் அட்டர்னி ஜெனரல் ஜி. இராமசாமி வாதித்தார். கர்நாடக அரசு இதை எதிர்த்து மனு தாக்கல் செய்தது. அந்த மாநிலம் சார்பில் வக்கீலும் வாதாடினார்.

இந்த வழக்குச் சம்பந்தமான விவாதம் கடந்த செப்டம்பர் மாதத்துடன் முடிவடைந்தது.

தீர்ப்பு பின்னர் கூறப்படும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

22.11.1991 அன்று டெல்லி உச்ச நீதிமன்றம் 'காவிரியில் தண்ணீர் திறந்து விட வேண்டும்' என்று தீர்ப்புக் கூறியது.

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரெங்கநாத் மிஸ்ரா தலைமையில், நீதிபதி கே.என். சிங், ஏ.எம். அகமது, குல்திப் சிங், பி.பி. சாவந்த் ஆகிய 5 நீதிபதிகள் கொண்ட 'பெஞ்ச்' இந்தத் தீர்ப்பை வழங்கியது.

'கர்நாடக அரசு பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது' என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

மாநிலங்களுக்கு இடையே நதி நீர்ப் பிரச்சினை குறித்து விவாதிக்க நடுவர் மன்றத்துக்கு அதிகாரம் உண்டு. அதில் மாநில அரசு தலையிட முடியாது. எனவே, கர்நாடக அரசு அவசரச் சட்டம் மூலம் இதைத் தடுக்க முடியாது. அரசியல் சட்டத்திலும் இதற்கு இடமில்லை என்றும் நீதிபதிகள் கூறியுள்ளனர்.

அதோடு நடுவர் மன்றத்துக்கு இடைக்கால உத்தரவு பிறப்பிக்கவும் உரிமை உண்டு. எனவே, கர்நாடகம் தமிழ்நாட்டுக்கு காவிரியில் 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மத்திய அரசு உத்தரவிடலாம் என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

இந்தப் பிரச்சினையில் பாண்டிச்சேரி, தமிழ்நாட்டுக்கு ஆதரவாக வாதாடியது.

அதே நேரம் கேரளா, கர்நாடக அரசுக்குச் சற்று ஆதரவாக இருந்து வந்தது.

22.11.1991-இல் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம், தமிழ்நாட்டின் உயிர்நாடியாக உள்ள காவிரி நீர்ப் பிரச்சினையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றது முதல் பலவேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வந்த முயற்சிகளுக்கு வெற்றி கிடைத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்கள். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள முழு விவரம் வருமாறு:-

**''தமிழ்நாட்டுக்கும்,கர்நாடகமாநிலத்துக்கும் இடையேயான காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் கேட்டிருந்த கருத்துக்கு உச்ச நீதிமன்றம் அளித்திருக்கும் தீர்ப்பை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.**

**காவிரி நடுவர் மன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தீர்ப்பை மத்திய அரசு கால தாமதம் இல்லாமல் 'கெசட்'டில் வெளியிடும் என்று நான் நம்புகிறேன்.**

**உச்ச நீதிமன்றத்தின் தெளிவான இந்தத் தீர்ப்பானது இரு மாநிலங்களுக்கு இடையேயான பிரச்சினையைச் சுமுகமாகவும், நிரந்தரமாகவும் தீர்க்க வழி வகுக்கும் என்று நான் நம்புகிறேன்.**

- இவ்வாறு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார். ●

## பார்த்தோம்! படித்தோம்!

**1.11.91** இதழில், மருத்துவக் கட்டுரை என்ற தலைப்பில், குடல்புண்ணைப் பற்றி விரிவாகவும் தெளிவாகவும், புரிந்து கொள்ளும் படி எழுதியிருந்த ஆசிரியர் அவர்களுக்கு என் வாழ்த்து. இதுபோன்ற மருத்துவக் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட வேண்டுகிறேன்.

**—கு.ஜெயமுருகன்,**
**திருத்தங்கல்.**

**'பொய்** சொல்லக்கூடாது பாப்பா' என்ற தலைப்பில் இடம் பெற்ற கட்டுரை படித்தேன். பொய் சொன்னதால் என்னென்ன தீமைகள் ஏற்படும் என்பதனை விளக்கியது அது.

**—த. வசந்தராஜா,**
**வாழப்பட்டாம் பாளையம்.**

**'அறிவுச்சுடர்'** படித்தேன். அதில் நம் நாட்டைப் பற்றிய கேள்விகளையும் அதற்குத் தகுந்த பதிலையும் அளித்து, மாணவருக்குப் பாடம் புகட்டியமைக்கு எனது நன்றி.

**—த. மணி**
**கீழ்குமாரமங்கலம்.**

**'குடல்புண்'** கட்டுரை போன்று ஒவ்வொரு இதழிலும் ஒரு நோய் குறித்து மருத்துவக் கட்டுரை ஒன்றை வெளியிட்டு வரலாம்.

**—அரிமா. பூபாளம்.**
**ப.முருகேசபாண்டியன்**
**கரப்பாடி.**

**'நா**கப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம் தொடக்கவிழா', 'நாகப்பட்டினம் ஒரு வரலாற்றுப் பின்னணி'. ஆகியவை பட்டைத் தீட்டிய வைரமென ஜொலித்தன.

**—மதி. தமிழரசன்**
**திருவாரூர்-2**

**மா**ணவர் பக்கம் மற்றும் நாகை வரலாற்றுக் கட்டுரை அருமை.

**பி.ஜி.அழகிரி,**
**பெரம்பூர்**

**நா**கப்பட்டினம் - காயிதே மில்லத் மாவட்டம் உதயமான விழாவில், தமிழக முதல்வர் அவர்களின் பேச்சு மிகமிகச் சிறப்பாக இருந்தது.

**—எஸ். ஆறுமுகம்**
**தென்காசி.**

# பாடத்திட்டத்தில் விளையாட்டுப் பயிற்சி



புதுடெல்லியில் மாநில விளையாட்டு மற்றும் இளைஞர் பயிற்சித் துறை மாநில அமைச்சர்களின் 4-வது தேசிய மாநாடு இம்மாதம் 18-ஆம் தேதி நடைபெற்றது. இந்த மாநாட்டில் தமிழக அரசு பின்வரும் கோரிக்கைகளை மத்திய அரசின் பரிசீலனைக்காக விடுத்துள்ளது.

1. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் விளையாட்டுப் பயிற்சியினைத் தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும், பாடத் திட்டத்தின் ஒரு பகுதியாக வரும் கல்வி ஆண்டிலிருந்து சேர்க்கலாம் என்று அறிவித்துள்ளார். இதன் அடிப்படையில் மத்திய அரசையும் ஏனைய மாநில அரசுகளையும் இதே கொள்கையினைப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளுதல்.

2. 1993-ஆம் ஆண்டு நடைபெற உள்ள 10-வது நேரு

தங்கக் கோப்பை கால்பந்து விளையாட்டுப் போட்டித் தொடரினை சென்னையில் நேரு விளையாட்டு அரங்கத்தில் நடத்திட ஏதுவாக இந்த விளையாட்டு அரங்கினை நவீனப்படுத்தி மேம்படுத்த ஏற்படும் செலவுத் தொகையில் (ரூ.10 கோடி) 50 விழுக்காடு தொகையினை மைய அரசு ஏற்க வேண்டும்.

3. ஆதார விளையாட்டு வசதிகளைப் பெருக்கிட மைய அரசு வழங்கும் 50 விழுக்காடு அல்லது ரூபாய் 5 இலட்சம், இதில் எது குறைவோ என்ற உச்ச வரம்பினை நீக்கி மொத்த திட்ட மதிப்பீட்டுச் செலவில் 50 விழுக்காட்டுத் தொகையினை மைய அரசு ஏற்க வேண்டுதல்.

4. வீர விளையாட்டுப்பயிற்சி மையம் ஒன்றினை வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள ஏலகிரி குன்றில் அமைத்திட மைய அரசு நிதி உதவி வழங்கிட வேண்டுதல்.

5. அரசியல் சட்ட அமைப்பில் விளையாட்டு என்ற பொருளை மாநிலப் பட்டியலில் தக்க வைத்துக் கொள்ளவும், மத்திய பட்டியலில் இப்பொருளைக் கொண்டுவர வேண்டும் என்ற மைய அரசின் கொள்கையினை மாநில அரசு ஏற்காது என்பதையும் தெரிவித்தல்.

6. உதக மண்டலத்தில் உயர் மலைப் பயிற்சி உபமையம் அமைத்திட இந்திய ஸ்போர்ட்ஸ் அத்தாரிட்டியினரைக் கேட்டுக் கொள்ளல்

தமிழ்நாடு அரசின் சார்பில் இந்த 6 கோரிக்கைகள் தேசிய மாநாட்டில் வைக்கப்பட்டன. ●

# ஐ.நா. சபைக்குப் புதிய பொதுச் செயலாளர்

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய பொதுச் செயலாளராக எகிப்து நாட்டின் துணைப் பிரதமர் திரு. பொட்ரோஸ் காலியை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் கவுன்சில் தேர்ந்தெடுத்துள்ளது. தற்போதைய பொதுச் செயலாளர் திரு. சேவியர் பெரெஸ்டி கொய்யர் இவ்வாண்டின் இறுதியில் இந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால், இந்த உயர் பதவிக்குத் திரு. காலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சிறந்த நிர்வாகியும், பொருளாதார நிபுணரும், சர்வதேசச் சட்டத்தில் நிபுணருமான திரு. காலி, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலின் மொத்த வாக்குகள் பதினைந்தில் 11 வாக்குகளைப் பெற்றார்; 4 பேர் வாக்களிக்கவில்லை.

இவரை எதிர்த்து 12 பேர் போட்டியிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலக சரித்திரத்தில் மிக முக்கியமான கால கட்டத்தில் ஐ.நா. சபையின் மிக உயர்ந்த பதவிக்குத் திரு. காலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

69-வயதான திரு. பொட்ரோஸ் காலி, ஐக்கிய நாடுகள் சபையின் ஆறாவது பொதுச் செயலாளராகப் பதவி ஏற்பார். ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஒருவர் ஐ.நா. சபை பொதுச் செயலர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். இவர் 5 ஆண்டுக்காலம் இந்தப் பதவியில் இருப்பார்.

இந்தத் தேர்வு அணிசேரா இயக்கத்துக்கும் ஆப்பிரிக்க நாடுகளின் குழுவுக்கும் கிடைத்த வெற்றி என்று கருதப்படுகிறது.

# எல்லாத் துறைகளிலும் மகளிர்!

## மகளிர் நாளில் முதல்வர் செய்தி

முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் பிறந்த நாளையொட்டி அனுசரிக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டு வாரத்தில், 25.11.91 அன்று மகளிர் நாள் கொண்டாடப் பட்டது.

அந்நாளில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் வெளியிட்ட செய்தி விவரம் வருமாறு:

'ஒவ்வொரு ஆண்டும் நமது நாட்டில் தேசிய ஒருமைப்பாட்டு வாரம், மறைந்த பாரத பிரதமர் அன்னை இந்திராகாந்தி அம்மையாரின் பிறந்த நாள் விழாவில் தொடங்கி, தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு அம்சங்களைப் பற்றி சமுதாயத்தின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம், ஒவ்வொரு நாளும் ஒரு சிறப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு கொண்டாடப்படுகிறது. அந்த தேசிய ஒருமைப் பாட்டு வாரத்தில் மகளிர் தினம் 25.11.1991 அன்று அனுசரிக்கப்படுவதை நாம் அனைவரும் அறிவோம்.

'மக்கள் • தொகையில் சரிபாதியாகவுள்ள பெண்களின் பிரச்சினைகள், அவர்களின் முன்னேற்றம், மகளிர் சமுதாயத்தில் ஆற்றுகின்ற பங்கு, அவர்களுக்கு அரசு ஏற்படுத்திக் கொடுக்கின்ற வாய்ப்புகள் ஆகியவற்றை எடுத்துரைத்து மகளிருடைய நலனை மேம்படுத்துவதற்காகவே மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. நம் நாட்டில் 20-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கூட, இன்னமும் பெண்களுடைய எழுத்தறிவு என்பது முழுமை அடைந்துவிட்டது எனக் கூற முடியவில்லை. பெண் குழந்தைகள் விரும்பத்தக்கவர்களாக இருப்பது இல்லை. இவற்றையெல்லாம் களையவும், மேலும் எல்லாத் துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமாக பெண்களையும் அழைத்துச் செல்ல சமுதாயமும், அரசும் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாக உள்ளன.

'இத்தகைய சிந்தனைகளை எல்லாம் நமது நெஞ்சத்தில் தேக்கி, அவற்றிற்கு செயல் வடிவம் கொடுத்து, மகளிர் எல்லா நலன்களும் பெற வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதே மகளிர் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கமாகும். எல்லாத் துறைகளிலும், மகளிர் புதிய உயர்நிலைகளை அடையவேண்டுமென்ற, என் பெரு விருப்பத்தினை தெரிவித்து, மகளிர் தினம் கொண்டாடப்படுவதன் பயன் முழுமையாக மகளிரைச் சென்றடைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- இவ்வாறு அந்தச் செய்தியில் குறிப்பிடப் பட்டிருந்தது. ●



★

கண்ணீர் வடிக்கும்
தாய்மார்களின் முகங்களும், அழுது கதறும்
குழந்தைகளின் உருவங்களும், நலிந்துவிட்ட
குடும்பங்களும் என்னுடைய மனக் கண்முன்
காட்சியளித்தன; சிறிது நேரம் சிந்தித்தேன்;
மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் கிடைக்கும்
வருமானத்தைவிட தாய்மார்களின் மகிழ்ச்சி
பொருந்திய குடும்பங்கள்தான் தமிழக அரசுக்கு
முக்கியம்; 'இதற்கு எதிராக இந்த வருமானம்,
எந்த வகையிலும் ஈடல்ல' என்று முடிவு
கட்டினேன்; ஆகவே, மதுவிலக்குச் சட்டத்தில்
இருக்கும் ஓட்டைகளை மூடி-திட்டத்தை
இன்னும் உறுதியாக அமுலாக்கி- அத்துறையில்
வெற்றி காண முனைவோம்'.

# சென்னையில் சர்வதேசக் கால்பந்துப்போட்டி

சென்னையில் 1993 ஜனவரி மாதத்தில் நடைபெற உள்ள 10-வது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டியைச் சிறப்பாக நடத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட குழுவின் முதற் கூட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 22.11.91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இது குறித்துத் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

10-வது ஜவகர்லால் நேரு தங்கக் கோப்பை சர்வதேசக் கால்பந்துப் போட்டி 1993 ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற உள்ளது. தமிழகத்தில் விளையாட்டுப் போட்டிகளை நல்ல முறையில் நடத்துவதில் அக்கறை கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் இப்போட்டியினை மிகச் சிறப்பாக நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இக்கால்பந்து, போட்டியினைச் சிறப்பாக நடத்தும் வண்ணம், சென்னையிலுள்ள நேரு விளையாட்டரங்கத்தைச் சர்வதேசத் தரத்திற்கேற்ப மேம்படுத்தி அமைப்பது குறித்து விரிவாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இப்போட்டியினைச் சிறப்பாக நடத்துவதெற்கென ரூபாய் ஒரு கோடி அளிப்பதாக இந்தியன் வங்கியின் தலைவர் திரு எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்து, முதல் தவணையாக ரூபாய் 10 இலட்சத்திற்கான காசோலையினை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் வழங்கினார்.

தொழிலதிபர் திரு ஏ.சி. முத்தையா அவர்களும் ரூபாய் ஒரு கோடி வழங்குவதாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமைப்புக் குழுத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:

தலைவர் - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா, துணைத் தலைவர் - மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு, உறுப்பினர்கள் - தமிழக அரசின் தலைமைச் செயலாளர், திரு. டி.வி. வெங்கட்ராமன், செயலாளர், நகர்ப்புற நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, செயலாளர், கல்வித்துறை, மாநிலக் காவல்துறைத் தலைவர் (டி.ஜி.பி.), காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம்-ஒழுங்கு), நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் கழகம், திரு. எம். கோபாலகிருஷ்ணன், தலைவர் இந்தியன் வங்கி, திரு. பி. சிவந்தி ஆதித்தன், தலைவர் இந்திய ஒலிம்பிக் சங்கம், திரு. எம்.ஏ.எம். ராமசாமி, தொழிலதிபர், திரு. ஏ.சி. முத்தையா, தொழிலதிபர், திரு. ஆர். வீரமணி, ஜெம் கிரானைட்ஸ், திரு. வினு மாமென் எம்.ஆர்.எப். நிறுவனம், திரு. எல்.ஜி. ராமமூர்த்தி, தொழிலதிபர் மற்றும் தலைவர் தமிழ்நாடு கால்பந்து சங்கம், திரு ஆர். பழனியப்பன், தொழிலதிபர் மற்றும் தலைவர், தமிழ்நாடு கால்பந்து சங்க உயர்மட்டக் குழு, திரு. சி.ஆர். விஸ்வநாதன், தலைவர் தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம் மற்றும் அமைப்பாளர், தமிழ்நாடு கால்பந்து சங்க உயர்மட்டக் குழு, திரு. கே. முருகன், இணைச் செயலாளர், இந்திய ஒலிம்பிக் சங்கம் மற்றும் செயலாளர், தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம்.







# முதல்வர் கூட்டிய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பணி ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னையில் 12.11.91 அன்று பதினொரு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணிகளை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில்- கோவை, மதுரை, வடஆர்க்காடு அம்பேத்கர், பெரியார், சேலம், நீலகிரி, திருவண்ணாமலை-சம்புவராயர், தர்மபுரி, தென் ஆர்க்காடு, சிதம்பரனார் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டப் பணிகள், பொது விநியோக முறை, சட்டம் ஒழுங்கு நிலைமை, இலவச மருத்துவ முகாம்கள், குடும்பநலத் திட்டம், சிறு சேமிப்பு, சத்துணவுத் திட்டம் முதலியவைகளைச் செயல்படுத்துதல் குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்.

மறுநாள் 13.11.91-அன்று சென்னை, திண்டுக்கல்-அண்ணா, காமராஜர், கன்னியாகுமரி, புதுக்கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி-கட்டபொம்மன், நாகபட்டினம்-காயிதேமில்லத், தஞ்சாவூர், செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய பதினொரு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆய்வு செய்தார்.





சென்னை நகரில்

# மழை பாதித்த இடங்களில் முதல்வர்

சென்னை நகரில் சமீபத்தில் புயல், மழையால் பாதிக்கப்பட்ட இடங்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 16.11.1991 அன்று நேரில் சென்று பார்வையிட்டார். கொட்டும் மழையில் நனைந்தபடி வெள்ளப்பகுதிகளைச் சுற்றிப் பார்த்து, வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட மக்களிடம் குறைகளை நேரில் கேட்டறிந்தார்.

வங்கக் கடலில் உருவான புயல் காரணமாகச் சென்னை நகரிலும் தமிழ்நாட்டிலும் பல்வேறு மாவட்டங் களிலும் சமீபத்தில் பலத்த மழை பெய்தது. சென்னை நகரில் வியாசர்பாடி, கே.கே.நகர், போஜ ராஜநகர், அரும்பாக்கம், பெரம்பூர், சைதாப்பேட்டை, நுங்கம்பாக்கம் போன்ற தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இந்தப் பகுதிகளில் உள்ள குடிசைகள் பல வெள்ளத்தால் மிதந்தன. கட லோரப் பகுதிகளான இராயபுரம், பூங்காவன குப்பம் போன்ற பகுதிகள் கடல் அரிப்பால் பெரிதும் பாதிக் கப்பட்டன.

புயல், மழை சேதங்களைப் பார்வையிட்டு-பாதிக்கப்பட்ட மக் களுக்கு ஆறுதல் கூறவும் மீட்புப் பணிகளைப் பார்வையிடவும் முதல்வர் அவர்கள் 16.11.1991 அன்று காலையில் தமது இல்லத்திலிருந்து

## வெள்ளம், பெருமழையால் சேதம் — குடிசைகளுக்கு நிதியுதவி மாண்புமிகு முதல்வர் உத்தரவு

வெள்ளம், பெருமழையால் சேதம் அடைகின்ற குடிசைகளுக்கு அதைத் திரும்பவும் சீர்படுத்த அரசு நிதியுதவி அளித்துவருகிறது.

வெள்ளம், பெருமழையினால் சென்னையில் முழுமையாகச் சேத மடைந்த (Fully Damaged) குடிசை களுக்கு ரூ.500/-ம், பகுதிச் சேத மடைந்த (Partially Damaged) குடிசை களுக்கு ரூ.250/-ம் வழங்கப்பட்டு வருகிறது. இதுபோலத் தமிழகத்தின் மற்ற பகுதிகளில் முழுமையாகச் சேதமடைந்த குடிசைகளுக்கு ரூ.400/-ம், பகுதிச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.200/-ம் வழங்கப் பட்டு வருகிறது.

விலைவாசி ஏற்றத்தைக் கருத் தில் கொண்டும், தமிழக அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண் டும், சென்னையில் வெள்ளத்தால் முழுமையாகச் சேதமடைந்த குடிசை களுக்கு ரூ.600/-ம், பகுதிச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.300/-மாக அதிகரித்தும், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் முழுமையாகச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.500/-ம், பகுதிச் சேதம் அடைந்த குடிசைகளுக்கு ரூ.250/-மாக அதி கரித்து வழங்க மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வந்தது.

'ஜீப்' மூலம் புறப்பட்டார். முதல்வர் அவர்கள் இராயபுரம் வழியாகச் சென்று காசிமேடு தேசிகன் நகரில் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களிடம் சென்று குறைகளைக் கேட்டறிந்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச உணவுப் பொட்டலங்களையும், ரொட்டிகளையும் வழங்கினார். பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் குறித்துக் கொண்டு உடனடியாக மேல்நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு முதல்வர் உத்தரவிட்டார்.

பின்னர், ஸ்ரீனிவாச நகரில் கடல் அரிப்பினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்வர் பார்வையிட்டு, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினார்.

அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு திருவொற்றியூர் நெடுஞ்சாலை வழியாக போஜராஜன் நகர் சென்றார். அங்கு 400-க்கும் மேற்பட்ட குடிசைகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. இங்கு முதல்வர் அவர்கள் முழங்கால் அளவு தண்ணீரில் நடந்து சென்று குடிசை மக்களுக்கு ஆறுதல் கூறி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ரொட்டியும், உணவுப் பொட்டலங்களும் வழங்கினார்.

பிறகு வள்ளலார் பேருந்து நிலையம், மூலக்கொத்தளம், வியாசர் பாடி வழியாகச் சென்று எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் டாக்டர் அம்பேத்கர் கல்லூரி அருகே உள்ள குடிசைப்பகுதி மக்களுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

அதன்பின் அங்கிருந்து புறப்பட்டு - பேசின்பாலம், தங்கசாலை, கடற்கரை இராஜாஜி சாலை வழியாகச் சென்றபோது தலைமைச் செயலகம் அருகே உள்ள திடீர் நகர்ப் பகுதியில் சாலையோரத்தில் திரளான மக்கள் நிற்பதைப் பார்த்து, தமது ஜீப்பை நிறுத்தி அப்பகுதி மக்களிடம் முதல்வர் குறைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர், பூந்தமல்லி நெடுஞ்சாலை வழியாக அரும்பாக்கம் சென்றபொழுது, வண்டியிலிருந்து இறங்கி மழையினால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, 'தேவையான மீட்புப் பணிகள் உடனே நடைபெறும்' என்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதல்வர் உறுதி அளித்தார்.

முதல்வர் அவர்கள் பிறகு அங்கிருந்து புறப்பட்டு கோயம்பேடு 100 அடி சாலை வழியாகச் சாலிகிராமம், வடபழனி, அசோக் நகர் வழியாக - கே.கே.நகர் சென்றார். அங்கு வெள்ளத்தால்பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்வர் ரொட்டி, உணவுப் பொட்டலங்களை வழங்கி ஆறுதல் கூறினார்.

பின்னர் அங்கிருந்து புறப்பட்டு ஈக்காடுதாங்கல், கிண்டி வழியாக முதல்வர் அவர்கள் சைதாப்பேட்டைக்குச் சென்றார். சைதாப்பேட்டை மறைமலை அடிகள் பாலம் அருகே சென்றபோது, முதல்வர் வண்டியிலிருந்து இறங்கி அடையாறு ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டோடுவதைப் பார்த்து, கரையோரம் தங்கியிருக்கும் மக்களுக்குச் செய்துள்ள மீட்புப்பணிகள் குறித்து விவரம் கேட்டறிந்தார். சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அருகே உள்ள குடிசைப்பகுதி மக்களுக்கு முதல்வர் இலவச உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

முதல்வர் அவர்கள் பார்வையிடச் சென்ற பகுதிகளில் எல்லாம் சாலையின் இருமருங்கிலும் திரளான மக்கள் கூடியிருந்தனர். பிற்பகல் 2.00 மணி வரை சுமார் 4 மணிநேரம் முதல்வர் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சுற்றிப் பார்த்தார். வெள்ளம் சூழ்ந்த குடிசைப் பகுதிகளில் தேங்கிக் கிடக்கும் நீரை 'பம்ப்' செய்து உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.



மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. இ. மதுசூதனன், திரு. அழகு திருநாவுக்கரசு, திரு. டி.எம். செல்வ கணபதி, திரு. முகமது ஆசிப், திரு. எம். ஆனந்தன், திரு. டி. ஜெயக் குமார் மற்றும் முதல்வர் அவர்களின் செயலாளர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன், இ.ஆ.ப., இணைச் செயலாளர் திரு. க. கணேசன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஜெயஸ்ரீ பாலசந்தர், இ.ஆ.ப., சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. ராமு, இ.ஆ.ப., தனி அதிகாரி (பொறுப்பு) திரு. என். அரிபாஸ்கர், இ.ஆ.ப., ஆகியோர் உடன் சென்றனர்.

- நமது செய்தியாளர்.

# தமிழன்னையின் புதிய அணிகலன்!

## 'திருக்குறள் தெளிவுரை' நூல் வெளியீட்டு விழாவில் மாண்புமிகு முதல்வர் புகழாரம்

**டாக்டர் நாவலரின் 'திருக்குறள் தெளிவுரை' நூல் வெளியீட்டு விழாவின் போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை (18.11.1991).**

'நடமாடும் பல்கலைக்கழகம்' எனப் பாராட்டப் படும் டாக்டர் நாவலர் அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் தெளிவுரை' என்ற இந்த நூலைத் தமிழ் மக்கள் பயனுறும் வகையில் இன்று வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்ப் பெயராகத் தன் பெயர் விளங்க வேண்டும் என்கிற உணர்வும், தந்தை பெரியாரின் பகுத்தறிவின்பால் அவருக்கு இருந்த ஈடுபாடும்தான், நாவலரைச் சமுதாயத்திற்குத் தனித்தன்மையோடு முதலில் அடையாளம் காட்டின.

வெறும் 'நாராயணசாமியாக'த் தனது வாழ்க்கையைத் துவங்கி, 'நெடுஞ்செழியனாக' அறிமுகமாகி, 'நாவலராக'ச் சிறந்து, 'நடமாடும் பல்கலைக் கழகமாக' உயர்ந்து திகழும் நாவலர் அவர்கள், இனிவரும் தலைமுறையினர் என்றென்றும் அவரைப் போற்றும் வகையில் தமிழ்ப்பணி ஆற்றியுள்ளார்.

தனது அரசியல் வாழ்வின் ஆரம்ப நாட்களைப் 'பாதி நாள் இரயிலிலும், பாதி நாள் ஜெயிலிலும்' கழித்த தலைவர்களில் நாவலர் முன்னணி வரிசையில் இருக்கின்றார். அவரது பெருந்தன்மையும் அடக்கமும் நாம் அனைவரும் விரும்பிப் பின்பற்ற வேண்டிய உயரிய பண்புகளாகும்.

இளமைக் காலந்தொட்டுச் சமுதாயப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட நாவலர் அவர்கள் நடந்து வந்த பாதை, கல்லும் முள்ளும் நிறைந்தது; எதிர்ப்பும் ஏளனமும் கொண்டது!



அவரது இளமைக்கால ஆவேசத்தைப் பார்க்கிற சந்தர்ப்பம் நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அவரது அமைதியான மனப்போக்கையும், ஒழுக்க மான அரசியல் அணுகுமுறைகளையும் பார்க்கிற சந்தர்ப்பம், நமக்கு நிறையவே கிடைத்திருக்கிறது.

உழைப்பை மட்டுமே அவர் எப்போதும் முழுமையாக நம்பக் கூடியவர். எந்தப் பொறுப்பை யும் நாவலரிடம் நம்பி ஒப்படைக்கலாம் என்பதும் நாடறிந்த உண்மை ஆகும்.

ஏனென்றால், அவரை வளர்த்த தலைவர்கள், நமது வணக்கத்திற்குரிய பெரியவர்கள், அவற்றை நமக்கு வரலாற்றுப் பெருமைகளாக எடுத்துரைத்துச் சென்றுள்ளனர்.

'நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நல்லவரே! உம்முடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் தயாராக இருக்கிறேன்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களே 1956-இல் திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் குறிப்பிட்டார் என்றால், நமது நாவலர் அன்றே எத்தனைப் பாராட்டுதலுக்கு உரியவராக இருந்துள்ளார் என்பதை நாம் அறிய முடிகிறது.

'அறியாமை இருள் அகன்றிட, அறிவு ஒளி பரவிட, வளம் பெருகி வறுமை நீங்கிட, துன்பம் போக, இந்நாட்டு மண்ணில் இன்பம் மிக, வாட்டம் நீங்கி வாழ்வு மலர, அய்யா அவர்கள் சுயமரியாதைச் சுடர் கொளுத்திக் குரல் கொடுத்த நேரத்தில், அப்பெரியாரின் பாசறையிலே இளந்தாடி வேந்தராக - பாசமிகு நல் தொண்டராக விளங்கிய வர்தாம் நமது நாவலர் அவர்கள்!' - என்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் புகழப் பட்டவர் என்றால், அவரது உயர்ந்த நிலையை நாம் உணரமுடிகிறது.

தனக்கென்று ஓர் தனிப் பாணியை வகுத்துக் கொண்டு, அதிலிருந்து சிறிதும் மாறுபடா வண்ணம் தனது பேச்சையும் எழுத்தையும் அமைத்துக் கொண்டிருப்பவர் நாவலர் அவர்கள். நாவலரின் எழுத்துக்களிலே மென்மையான தென்றலை மட்டு மல்ல; வெப்பமான எரிமலையின் வேகத்தையும் காணலாம். எந்தக் காலகட்டத்திலும், எந்தச் சூழ் நிலையிலும், தனது கொள்கைகளையும் கோட் பாடுகளையும் விட்டுக் கொடுக்காதவர்.

'நாவலர் என் பக்கத்தில் இருக்கிறார் என்றால் அறிஞர் அண்ணாவே என் பக்கத்தில் இருப்பதாக நான் கருதுகிறேன்' - என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்.

இந்த இயக்கத்தில் எவரை இழக்கத் தயாராக இருந்தாலும் நாவலரை இழக்க மட்டும் புரட்சித் தலைவர் அவர்கள் தயாராக இருக்கவில்லை.

# டாக்டர் நாவலரின் 'திருக்குறள் தெளிவுரை' நூல் வெளியீட்டு விழா

தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் தெளிவுரை' நூல் வெளியீட்டு விழா, சென்னை கலைவாணர் அரங்கில் 18.11.1991 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும், அமைச்சர் பெருமக்களும், நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

விழாவில் 'திருக்குறள் தெளிவுரை' நூலின் முதல் பிரதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட, அதனைச் சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடப்பட்டி முத்தையா அவர்கள் பெற்றுக் கொண்டார். பின்னர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச் சர்கள் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, திரு. எஸ்.டி. சோமசுந்தரம், திரு. இராம. வீரப்பன் ஆகியோருக் கும் நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நூல் வழங்கினார்.

நினைவுப்பரிசு: முதல்வர் அவர் களுக்கு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் அண்ணாமலைப்பல்கலைக் கழகங்களின் சார்பில் முதல்வர் அவர்களுக்குக் கல்வி அமைச்சர் திரு. இராம. வீரப்பன் அவர்கள் பொன்னாடை போர்த்தினார்.

'திருக்குறள் தெளிவுரை' நூலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

விழா முடிவில் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஏற்புரையும் நன்றியுரையும் ஆற்று கையில் - 'திருவள்ளுவர் திருக் குறளை எழுதி சுமார் ஆயிரம் ஆண்டு களுக்குப் பிறகு அதற்கு உரை எழுதப்பட்டது. பல நேரங்களில் பல அறிஞர்களால் திருக்குறள் தொகுக்கப்பட்டது என்றார். மேலும் பேசுகையில் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை 1992 அல்லது 1993-இல் தமிழ்நாட்டில் சிறப்பாக நடத்த முதலமைச்சர் ஏற்பாடு செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, வருவாய்த் துறை அமைச்சர், திரு. எஸ்.டி. சோமசுந்தரம், கல்வி அமைச்சர் திரு. இராம. வீரப்பன், திருக் குறளார் திரு. வீ. முனுசாமி ஆகி யோர் விழாவில் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினார்கள்.

முன்னதாக டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் கல்வி அறக்கட்டளைத் தலைவர் டாக்டர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் வர வேற்புரை நிகழ்த்தினார்.

- நிகழ்ச்சித் தொகுப்பு:
ஜே. சந்திரன்.

## கிராமப்புற மாணவ மாணவிகளுக்கு இலவசக் கம்ப்யூட்டர் பயிற்சி

கிராமப்புற மாணவ மாணவிகள் இலவசமாகக் கம்ப்யூட்டர் பயிற்சி பெறுவதற்கு அண்ணா பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

கம்ப்யூட்டர் பயிற்சியில் நகர்ப்புற மாணவர்கள் பெற்றுள்ள வளர்ச்சியைக் கிராமப்புற மாணவர்கள் பெறவில்லை. நகரிலுள்ள மாணவ-மாணவிகள் தங்கள் பள்ளி, கல்லூரிகளில் கம்ப்யூட்டர் பயிற்சி பெறுகிறார்கள். ஆனால் கிராமப்புறங்களில் படிப்பவர்களுக்கு இந்த வாய்ப்புக் கிடைப்பதில்லை. இந்தக் குறையைப் போக்கும் பொருட்டு, தற்சமயம் அண்ணா பல்கலைக் கழகம் கிராமப்புற மாணவ மாணவிகளுக்கு இலவசமாகக் கம்ப்யூட்டர் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு அமெரிக்காவிலுள்ள 'தமிழ்நாடு பவுண்டேஷன்' என்ற அமைப்பு 2.0 ஆயிரம் அமெரிக்க டாலர்களையும், தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்பக் கவுன்சில் ரூ.1.50 இலட்சமும், நன்கொடையாக வழங்கியுள்ளன.

இந்தக் கம்ப்யூட்டர் பயிற்சி முதலில் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் 6 அரசு மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில் நடைபெறும்.

கம்ப்யூட்டர்கள் பொறுத்தப்பட்ட கம்ப்யூட்டர் வேன் மூலம் மாதத்திற்கு 9 நாட்கள் வீதம் 6 மாதத்திற்குப் பள்ளிக் கூடங்களில் இந்தப் பயிற்சி அளிக்கப்படும்.

இந்தக் கம்ப்யூட்டர் பயிற்சி தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்றுத் தரப்படும்.

---

அதனால்தான் புரட்சித் தலைவர் வழிவந்த நானும் அவரது அடியொற்றி, நாவலரை என் பக்கத்திலே வைத்திருக்கிறேன். என்றும் தொடர்ந்து வைத்திருப்பேன். அவரது நாணயத்தை மதித்துப் பெருமை வாய்ந்த நிதி அமைச்சராக்கிப் பெருமைப் படுகிறேன்.

'அமைச்சர்களிலேயே நான்தான் அதிகப் பணக்காரன்' என்று அவர் அடிக்கடி கூறுவார். அதற்குக் காரணம் - அவர் நமது அரசின் நிரந்தர நிதி அமைச்சர் என்பதால்தான்! இந்தப் பெருமையெல்லாம் அவர் ஒரே நாளில் பெற்ற அதிர்ஷ்டமல்ல; கடுமையான உழைப்பும், முயற்சியும் அவருக்கு வழங்கிய காலத்தின் பரிசுதான் இவை.

குறிப்பாகப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடல் வரிகளை இன்றைய இளைய தலைமுறையினர் கற்றுக் கொள்வதற்கும், நடுத்தர வயதினர் நினைவூட்டிக் கொள்வதற்கும், முதிய தலைமுறையினர் கேட்டு மகிழ்வதற்கும், அண்ணாவின் முதல் தம்பி, ஒரு அரிமாத் தமிழன் இப்போது தமிழகத்தில் உண்டென்றால் 'அது நாவலர் மட்டும் தான்...! நமது நாவலர் மட்டும் தான்!' என்று நான் மீண்டும் மீண்டும் கூற விரும்புகிறேன். இதனை எவரும் மறுக்க இயலாது.

பல்லாண்டுகளாகத் தாம் ஏற்றுக் கொண்ட இலட்சியக் கொள்கைகளின் அடிப்படையில், சமுதாய முன்னேற்ற மற்றும் அரசியல் மேம்பாட்டுப் பணிகளை அயராது ஆற்றிவரும் நாவலர் அவர்கள், தமது பல்வேறு பணிகளுக்கிடையே, 801 பக்கங்கள் கொண்ட, இலக்கியச் செறிவும், ஆராய்ச்சி நுணுக்கங்களும் அமையப்பெற்ற, இத்தகைய நீண்டதொரு தெளிவுரையைப் படைத்துள்ளது ஒரு மாபெரும் சாதனை என்றே நான் கருதுகிறேன்.

ஒவ்வொரு குறளுக்கும், நாவலர் அவர்கள், பொழிப்புரை, கருத்துரை என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்து, அவைகளில் தெளிவுரையை வழங்கியிருக்கிறார்.

பொழிப்புரையை ஆராய்ச்சிக் கண்ணோட்டத்தோடு, குறளில் வருகின்ற சொற்களின் பொருட்செறிவுகள், மற்ற குறள்களில் வள்ளுவர் அவற்றினைக் கையாண்டிருக்கும் பாங்கு, மற்றும் அக்குறளின் கருத்தாழம், ஆகியவற்றைத் திறனாய்வு நோக்கோடு தொகுத்து வழங்கியிருக்கிறார். மற்றொரு பகுதியான கருத்துரையை, எளிமையான தமிழில் அழகுற அமைக்கப் பெற்ற வார்த்தைகளால், எல்லோரும் எளிதில் படித்து அறிந்து கொள்ளத்தக்க வகையில் வழங்கியிருப்பது, பாராட்டிற்குரியது.

இந்நூலினைத் தாம் எழுத முற்பட்டது எதற்காக என்பதை நாவலர் அவர்களே தனது முன்னுரையில், 'குறட்பாக்களின் உண்மைப் பொருளைப் பகுத்து, ஆராய்ந்து பார்க்கும் கண்ணோட்டத்தோடு, இனிய, எளிய, நல்ல, தெளிவான தமிழ் நடையில் உணர்த்துவது' என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த நல்ல முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளார்.

நாவலர் அவர்களின் திருக்குறள் தெளிவுரையானது, இனிய, எளிய, தெளிவான நூல் என்பதில் மாறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

அதுபோன்றே 'உலகியலுக்கு ஒத்த முறையில், உலக மக்கட் சமுதாயத்தோடு பொருந்திய வகையில், இயற்கை நிகழ்வுக்கு முரண்படாத வகையில் தெளிவுரை அமையப் பெறவேண்டும்' என்று, மற்றோர் இடத்தில் அவர் தெரிவித்துள்ள விருப்பத்தையும் முழுமையாக நிறைவேற்றியுள்ளார்.

ஒவ்வொரு குறளுக்கும் அவர் தெளிவுரை வழங்கியுள்ள விதத்தினைப் பார்த்தால், நாவலர் அவர்கள் எவ்விதம் வள்ளுவப் பெருந்தகையின் எண்ண ஓட்டங்களுக்கு ஏற்ப தாமும் தமது தெளிவுரையை 'நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட கருத்துக்களுக்கு' ஆட்படாத வகையிலும், கற்பனைக் கருத்துக்களுக்கு முக்கியத்துவமில்லாத வகையிலும், 'சாதி, சமய, இன வேறுபாட்டுக் கொள்கைகளை' முற்றிலும் அந்நியப்படுத்துகின்ற வகையிலும் அமைத்திருக்கிறார் என்பது விளங்கும். மேலும்,

நாவலர் அவர்கள் தமது நோக்கத்தினைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'வள்ளுவர் வகுத்த அறநெறியின் உண்மைப் பொருளை, உள்ளது உள்ளவாறு, உலகியலுக்கு ஏற்ற முறையில், மக்களினம் உணர்ந்து செயல்படவேண்டும் என்பதுதான், இந்தக் குறள் விளக்க உரையின் தலையாய நோக்கமாகும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கருத்தினை, ஒரு அறிவுரையினை, ஒருவர் கூற முற்படும்போது, அதனை அவர் தமது வாழ்க்கையிலும் பின்பற்றுபவராக இருந்தால்தான் அது சிறப்புடையது ஆகும்.

ஒரு சிலரைப் போன்று தாங்கள் சொல்வது ஒன்றும், செய்வது மற்றொன்றுமாக இராமல், நமது நாவலர் அவர்கள் வள்ளுவப் பெருந்தகையின் நெறிமுறைகளுக்கு ஏற்ப, தமது வாழ்க்கையை அமைத்து, நடத்தி வருபவர் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

தமிழக நிதியமைச்சரான அவர், தான் அறிவித்த நிதிநிலை அறிக்கையில் -

'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு'

என்ற பொருத்தமான குறளினை மேற்கோள் காட்டி, இன்றைய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, பொருள் வரும் வழிவகை உண்டாக்கிக் கொள்ளுதல், அப்படி வரும் பொருள்களை ஒரு வழிச் சேர்த்தல், அவ்வாறு சேர்த்ததைப் பாதுகாத்தல், அப்படிக் காத்ததைப் பகுத்து, நாடு, மக்கள், கலை வாழ வளர நல்ல வழிகளில் செலவு செய்தல், என்ற நான்கு வழிகளில் வல்லதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை அழகாகவும், பொருத்தமாகவும் சட்டமன்றப் பேரவையில் எடுத்துரைத்தார். திருக்குறள் நூலின் மீது இவர் கொண்டுள்ள மோகத்தையும், வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ள குறள் நெறிகளில் இவருக்கு உள்ள ஈடுபாட்டையும் நாம் இவரிடம் தினமும் காண முடிகிறது.

வள்ளுவர் அவர்கள் மனைவி என்ற சொல்லினைக் கூற முற்படுகையில், 'வாழ்க்கைத் துணை நலம்' என்று கூறுகிறார். மனைவி என்பதற்கு 'வாழ்க்கைத் துணை நலம்' என்று வள்ளுவர் சொல்லாட்சி செய்திருப்பது, வேறெந்த மொழியிலும் காணாத, அரிய சொல்லாட்சி. நாவலர் அவர்களும், தமது வாழ்க்கைத் துணை நலத்துடன் இயைந்து, குறள் நெறிமுறைக்கு ஏற்ப வாழ்ந்து வருவது, அனைவராலும் போற்றுதற்குரியது, பாராட்டுதலுக்குரியது.

நாவலர் அவர்கள் இந்தத் திருக்குறள் தெளிவுரையை உருவாக்குவதற்கு, எத்தனை முயற்சி,

**முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாளான 19.11.91 அன்று, நாடெங்கும் தேசிய ஒருமைப்பாட்டு நாள் கொண்டாடப்பட்டது. அன்றையதினம், அரசு தலைமைச் செயலக இராணுவத் திடலில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருமதி இந்திராகாந்தி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்; அரசு ஊழியர்கள் தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டார்.**





முன்னெச்சரிக்கை, கவனம் செலுத்தியிருக்க வேண்டும் என்பதற்கு, காலத்தின் அருமை கருதி ஒரேயொரு எடுத்துக்காட்டினை மட்டும் இங்கு உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

திருக்குறளின் முதல் குறளில் வருகிற 'ஆதி பகவன்' என்ற சொல்லுக்குப் பரிமேலழகர் இலக்கணம் கூறும்பொழுது, அதனை இரு பெயரொட்டுப் பண்புத்தொகை என்று கூறு கிறார். அதனை, நமது நாவலர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், 'ஆதிபகவன்' என்ற சொல் உள்ளபடியே இருபெயரொட்டுப் பண்புத்தொகையாக இருந்திருக்குமேயானால், 'ஆடித்திங்கள்' போன்று அது 'ஆதிப்பகவன்' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 'ஆதிபகவன்' என வள்ளுவர் அச் சொல்லைப் பயன்படுத்தியுள்ளதால், அதற்குரிய உண்மைப் பொருளைக் கண்டறிய வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

அந்த முயற்சியிலும் வெற்றி பெற்று, அதற் குரிய பொருளாக, 'ஆவதற்குக் காரணமான 'பகவன்' அல்லது 'அறிவன்' என்ற பொருளைத் தான் நாம் கொள்ள வேண்டும்,' என்று சரியாகக் கூறி, ஆழ்ந்த இலக்கணச் சொல்லாராய்ச்சி செய்திருக்கிறார். நாவலர் அமைதியானவர்தான், ஆனால் அறிவுப்போர் நிகழ்த்த அவர் எந்தக் காலத்திலும் பின்வாங்கியதில்லை. அதனால்தான் பழகுவதற்கு இனிமையான நமது மூத்த தலைவர் களில் ஒருவரான டாக்டர் நாவலர், திருக் குறளுக்கு இனிமையான, எளிமையான, தெளிவுரை எழுதியிருப்பது நமக்கெல்லாம் மிக்க மகிழ்ச்சி யைத் தருகிறது.

நாவலரின் இந்தச் சீரிய இலக்கிய முயற்சி, அவரைத் திருக்குறள் உரையாசிரியர்கள் வரிசை யில் செம்மாந்து நிற்க வழிவகுத்துள்ளது. தமிழ் கற்கும் மாணவர்கள், தமிழ் நூல் திறனாய் வாளர்கள், மற்றும் வள்ளுவத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆவலோடு உள்ள அத்தனைப் பேருக்கும், இந்த நூல் சிறந்த விருந் தாக அமையும் என்று நான் உளமாற நம்புகிறேன்.

நாவலர் அவர்களின் திருக்குறள் - தெளிவுரை, திருக்குறளுக்கான புதிய தெளிபொருள் விளக்க உரையாக, சிறப்பாக எழுதப்பட்டு, இன்று என் னால் வெளியிடப்பட்டதை எண்ணிப் பெருமைப் படுகிறேன்.

நமது நாவலர் அவர்கள் இதுநாள் வரை பல தமிழ்த் தொண்டுகள் புரிந்தபோதிலும், இன்று அவர் தமிழ் அன்னைக்குச் சூட்டியுள்ள இந்தப் புதிய அணிகலன், என்றென்றும் ஒளி வீசித் தமிழ் உலகில் நிலைத்து நிற்கும் என்று கூறி, நாவலரின் இந்தத் தமிழ்ப்பணி மேலும் தொடர வேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்து, அவரை வாழ்த்துகிறேன்.

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் நூலை வெளியிட்டுச் சிறப்புரையாற்றினார்.

விழா முடிவில் - நூலாசிரியரும் மாண்புமிகு நிதியமைச்சருமான டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஏற்புரையும் நன்றியுரையும் ஆற்றினார்.

# உலகிலேயே தலைசிறந்த-எவராலும் பறிக்கமுடியாத செல்வம் கல்வியே!

## நேரு பிறந்தநாள் விழாவில் முதல்வர் உரை

**ப**ண்டித ஜவகர்லால் நேரு அவர்களின் 102-வது பிறந்தநாள் விழா, 14.11.1991 அன்று தமிழக மெங்கும் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பட்டது.

மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களும், மற்றும் அமைச்சர் பெருமக்களும் அன்றைய தினம், சென்னை-கத்திப்பாராவில் உள்ள நேரு பெருமகனார் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார்கள்.

விடாது மழை பெய்து கொண் டிருந்தபோதிலும் - அன்றைய தினம் காட்டாங்கொளத்தூர் சிவானந்தா சரஸ்வதி சேவாஸ்ரமத்தில் நடை பெற்ற குழந்தைகள் நாள் விழா விற்கு வருகை தந்தார் மாண்புமிகு முதல்வர். 1945-இல் நிறுவப்பட்ட அவ்வில்லத்தில், அவர் பாண்டு வாத்திய இன்னிசையோடு வர வேற்கப்பட்டார்.

குழந்தைகள் நலனில் பெரு நாட்டங்கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிவானந்தா குருகுலத்திற்குத் தமது சொந்தப் பொறுப்பில் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பேருந்து ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார்; அந்தக் குருகுலத்தின் நிறுவனர் திரு. எஸ்.வி. ஐயர் நூற்றாண்டு விழா நினைவாகப் புதிதாக அமைக்கப் பட்ட கலையரங்கத்தைக் குத்து விளக்கேற்றித் திறந்துவைத்தார்.

சிவானந்தா சரஸ்வதி சேவாஸ்ர மத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் தலை மையில் நடைபெற்ற இவ்விழாவில் - மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும், டில்லியில் உள்ள மாண்புமிகு தமிழக அரசுப் பிரதி நிதி திரு. தம்பித்துரை அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர்களும், செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஷீலா பிரியா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

காலை 10.30 மணியளவில் விழா தொடங்கியது. மாண்புமிகு முதல்வருக்கும், தலைமையேற்ற





படுவதிலும் பொய்மையைக் கலக்க முடியாது.

அத்தகைய உண்மையான அன்பு உங்களுக்கு இந்தச் சிவானந்தா குரு குலத்தில் முழுவதுமாகக் கிடைத் திருக்கின்றது. இங்குள்ள பெரியோர் களும், ஆசிரியப் பெருமக்களும் அன்பாக அன்றாடம் உணவூட்டி, கல்வி புகட்டி, உங்களைப் பெரிய வர்களாக வளர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அனை வருக்கும் உங்கள் சார்பாக, என் உள்ளம் கனிந்த நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இல்லத்தின் நிறுவனர் திரு. எஸ்.வி. அய்யரின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள நூற் றாண்டு விழாக் கலையரங்கினை இன்று திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்குக் குழந்தைகள் மீது அளவிடமுடியாத அன்பு உண்டு என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். தான் சிறுவயதில் பசியால் வாடி யதைப் போலத் தமிழகத்திலுள்ள எந்தக் குழந்தைக்கும் அந்தத் துன்பம் வரக்கூடாது என்பதற்காகச் சத்துண வுத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அவர்கள் தொடங்கினார். அதன் மூலம் தமிழகத்தின் இலட்சோப இலட்சம் குழந்தைகளின் பசிப் பிணியைப் போக்கினார். அவரை - குழந்தைகள் தினமான இன்று நாம் நினைவுகூருவது பொருத்தமாக அமையும். இயற்கையின் சோதனை யால் பெற்றோர்களை இழந்த ஆதர வற்ற குழந்தைகளுக்கு உதவி செய் வதைப்போல வேறு எந்தப் புண்ணி யமும் இல்லை என்று நம்புபவள் நான். என் இதயத்தில் என்றும் உங்களுக்கு ஒரு தனி இடம் உண்டு. என்னால் முடிந்த எல்லா உதவி களையும் உங்களுக்குச் செய்ய வேண்டியது எனது தலையாய கடமை என்றே கருதுகிறேன்.

ஆதரவற்ற குழந்தைகளுக்கு அரசும், இதுபோன்ற தனியார் நிறுவனங்களும் இல்லங்கள் நடத்திப் பாதுகாத்து வருகின்றன. இந்த நல்ல பணி, மென்மேலும் வளர வேண்டும், பரவ வேண்டும் என்று நான் விரும்பு கிறேன். தமிழகத்திலுள்ள அனைத்து ஆதரவற்ற குழந்தைகளும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் குருகுலக் குழந் தைகள் மாலையணிவித்தார்கள்.

சிவானந்தா குருகுலக் குழந்தைகள் தமிழ்த்தாய் வாழ்த்து, குருகுலப் பாடல் ஆகியவற்றை இசைத்தபின் - அந்நிறுவனத்தின் தாளாளர் திரு. எஸ். ராஜாராம் வரவேற்புரை யாற்றினார். அதைத் தொடர்ந்து அவ்வமைப்பின் தலைவர் திருமதி சுசீலா இந்தர்சென் வாழ்த்துரை வழங்கினார்.

அதன்பின் - மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் நேரு பிறந்தநாள் - குழந்தைகள் நாள் விழா சிறப்புரை ஆற்றினார். அப் போது அவர் குறிப்பிட்டதாவது:

'இந்த இல்லத்தில் தங்கியிருக்கும் அன்புக் குழந்தைகளுக்கு என் இனிய வாழ்த்துக்களையும், ஆசிகளையும் கூறிக்கொள்கிறேன்.

இன்று குழந்தைகள் தினம். பண்டித ஜவகர்லால் நேரு அவர் களின் பிறந்த நாளை நாம் குழந் தைகள் தினமாகக் கொண்டாடு கிறோம். இந்த ஆண்டு, நான் முதலமைச்சராகிய பிறகு நடை பெறும் இந்தக் குழந்தைகள் தினத்தை எப்படிக் கொண்டாடுவது, எங்கே கொண்டாடுவது என்று யோசித் தேன். அப்பொழுதுதான், நான் தஞ்சாவூருக்குச் செல்லும்பொழுது வழியில் உங்களைச் சந்தித்தது ஞாபகத்திற்கு வந்தது. உங்களுடனே இன்று இந்த விழாவில் கலந்து கொள்ளலாம் என்று முடிவு செய் தேன். இப்பொழுது உங்களுடன் இருக்கின்றேன்.

எனதருமைக் குழந்தைகளே, நீங்கள் அனைவரும் பொலிவோடும், புத் துணர்வோடும் அமர்ந்து விழாவினை ரசித்துக் கொண்டிருப்பதைப் பார்க் கும்போது, நானும், உங்களைப் போல் பள்ளியில் மாணவியாய்ப் பயின்ற நாட்கள் என் நினைவிற்கு வருகின்றன. ப்டிப்பு, விளையாட்டு மற்றும் புதியவற்றைக் கற்றுக் கொள் வதில் ஆர்வம், ஆகியவை மட்டுமே உள்ள குழந்தைப் பருவத்தில், உங் களைப் போன்றே நானும் பள்ளி விழாக்களில் பங்கேற்றிருக்கிறேன்; அவைகளைக் கண்டு மகிழ்ந்துமிருக் கிறேன்.

உற்சாகமான உங்கள் முகங் களையும் அவற்றில் வீற்றிருக்கும் கபடமில்லாச் சிரிப்பினையும் காணும் பொழுது, தெய்வத்தைத் தரிசித்தது போன்ற உணர்வு எனக்கு ஏற்படு கின்றது. பரந்த இவ்வுலகத்தில் மனிதராய்ப் பிறந்த ஒவ்வொரு வரும், மற்றவரை நேசிக்க வேண்டும். இவ்வுலகில் உண்மையானதும், நிலையானதும் அன்பு ஒன்றே. மற்றவற்றில் பொய்மை கலக்க வாய்ப்பு உண்டு. ஆனால், அன்பு செலுத்துவதிலும், அன்பு செலுத்தப்

அவர்களுக்கு உணவு, உடை மட்டும் வழங்கினால் போதாது. உயர் கல்வியையும் போதித்து, அவர்களை உயர்ந்த உள்ளத்தைக் கொண்டவர்களாகவும் வளர்க்க வேண்டும். அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து அரவணைக்க வேண்டும்.

ஒரு சில நல்ல உள்ளங்களினால் உங்கள் வாழ்க்கையை வழிப்படுத்த முற்பட்டுள்ள நீங்கள், உங்கள் கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். உலகத்திலேயே தலை சிறந்த செல்வம் கல்விதான். ஏனென்றால் ஒருவரிடத்தில் உள்ள உடைமைகளையும், உரிமைகளையும், பணத்தையும், பொருளையும், சொத்துக்களையும் ஏனைய பிற செல்வங்களையும் சந்தர்ப்பச் சூழ்நிலையால் இழக்க நேரிடலாம். அல்லது பிறர் பறிக்க நேரிடலாம். ஆனால் எவராலும் பறிக்கமுடியாத செல்வம், உங்களால் இழக்க முடியாத செல்வம் ஒன்று உண்டென்றால், அது உங்களின் கல்விச் செல்வம்தான்.

எனவே நீங்கள் நன்றாகப் படிக்க வேண்டும். உங்கள் கல்வி அறிவைப் பெருக்க வேண்டும். உங்கள் வாழ்க்கையை உயர்ந்ததாக அமைத்துக் கொள்ள எல்லா முயற்சிகளும் மேற்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் உங்களுக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒரு தொழிற்பயிற்சி நிறுவனமும், மகளிர் கல்லூரியும் இங்கே அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது; அது பற்றிப் பரிசீலித்து, நல்ல முடிவெடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் உங்களைச் சந்திக்கும் இந்த நேரத்தில் உங்களுக்கு என் சார்பாக, முதலமைச்சர் என்ற முறையில் அல்ல, ஜெயலலிதா என்ற தனிப்பட்ட முறையில், என்னால் சிறு உதவிகளைச் செய்ய நினைத்தேன். அதன்படி உங்கள் ஒவ்வொருவருக்கும் என் அன்புப் பரிசாகப் புத்தாடை வழங்க உள்ளேன். இந்த இனிய நிகழ்ச்சியில் உங்களுக்கு இனிப்புகளும் வழங்க உள்ளேன். எனது இந்த அன்புப் பரிசுகளை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று பாசத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.



• மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு *11.11.91*-இல் வருகை தந்தபோது உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. ஏ.எஸ். ஆனந்த் அவர்கள் பொன்னாடை அணிவித்து வரவேற்றார்.

மேலும் சிவானந்தா குருகுலத்தின் முக்கியத் தேவையான பேருந்து ஒன்றையும், இன்று அன்பளிப்பாக நான் வழங்க உள்ளேன். அதனையும் குருகுல நிர்வாகத்தினர் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உங்கள் அனைவரையும் சந்தித்தது எனக்கு மிக்க மனநிறைவினை அளித்துள்ளது. சிவானந்த சரஸ்வதி குருகுலத்தின் பாதுகாப்பில் வளரும் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டுமென்றும், உங்கள் வாழ்வு உயர்ந்து சிறந்திட வேண்டும் என்றும் என் அன்பு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

- இவ்வாறு உரையாற்றிய பின், சிவானந்தா சரஸ்வதி குருகுலத்தைச் சேர்ந்த 300 குழந்தைகளுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமது திருக்கரத்தாலேயே இனிப்புகளும், புத்தாடைகளும் வழங்கி மகிழ்வித்தார். தனக்கு மாலையணிவித்த இரண்டரை வயதுச் சிறுமிக்கு அன்பு முத்தமிட்டு ஆசி வழங்கினார்.

திரு. காஞ்சி பன்னீர் செல்வம், எம்.எல்.ஏ., திரு. ஈ.வி. பெருமாள் இருவருமாகக் குருகுலத்திற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மூலம் பத்தாயிரம் ரூபாய் நிதி வழங்கினார்கள்.

அதற்குப்பிறகு - குருகுலக் குழந்தைகள் பங்கு கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடைசிவரை இருந்து அந்நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்.

விழா நிறைவாக அக்குருகுலத்தைச் சேர்ந்த செல்வி வேலாயி நன்றி கூறினார்.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**பி.எல்.ஆர்.**

# மீன்வளர்ப்பு வினா-விடை

இ. நல்லு சின்னப்பன்,
முதன்மை நிர்வாக அலுவலர்
மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை,
திருச்சி.

**மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை குறித்தும்- நவீன முறையில் மீன் வளர்க்கும் வகை பற்றியும்- நன்னீர் இரால் என்பதென்ன என்றும் - இவைகளால் என்ன பலன் என்பது குறித்தும் வினா-விடைகள் மூலம் இந்தக் கட்டுரையில் விளக்கப் படுகிறது:**

**★ மீன் சிறந்த உணவு. ஏன்?**

எளிதாகச் செரிக்கக் கூடிய புரதச் சத்து அதில் மிகுந்து இருப்பதால்.

**★ மாமிச உணவுகளில் இரண்டு வகைக் கொழுப்புச் சத்துக்கள் உள்ளன. அவற்றில் மீன் மாமிசத்தில் இருப்பது பூரிதக் கொழுப்புச் சத்தா? அபூரிதக் கொழுப்புச் சத்தா?**

அபூரிதக் கொழுப்புச் சத்து.

**★ தமிழ்நாட்டில் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் எத்தனை மாவட்டங்களில் செயல்படுகின்றன?**

13 மாவட்டங்களில் செயல்படுகின்றன.

**★ மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளில் இடுபொருள் கடன் ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகின்றது. அதில் எவ்வளவு விழுக்காடு மானியமாக வழங்கப்படுகின்றது?**

25 விழுக்காடு.

**★ நாற்றங்கால் தயார் செய்யும் போது அடிஉரம் போடுவதற்கு முன் சுண்ணாம்பு எதற்காக உபயோகப் படுத்தப்படுகிறது?**

கார அமிலத் தன்மையைச் சரி செய்யவும், நுண் கிருமிகளை அழிக்கவும்.

**★ குளங்கள் தயார் செய்யும்போது குளத்தில் தப்பியுள்ள எதிரி இன மீன்களை அழிக்கப் பயன்படுத்தப் படும் பிண்ணாக்கு எது?**

இலுப்பைப் பிண்ணாக்கு.

**★ நாற்றங்கால் குளங்களில் ''நோட்டோ நெக்டிடா'' என்ற ஒருவகை பூச்சி அதிகமுள்ளது. இது நாற்றங்கால் குளங்களில் இருப்புச் செய்யப்படும் நுண் மீன் குஞ்சுகளுக்குச் சேதம் ஏற்படுத்துகின்றது. அதனால் அவற்றை அழிக்க என்னென்ன பொருட்கள் உபயோகிக்க வேண்டும்?**

சோப்பு எண்ணெய் கலந்த கரைசல் பயன்படுத்தினால் போதும்.

**★ நாற்றங்கால்களில் இருப்புச் செய்யப்படும் நுண் மீன் குஞ்சின் எடை எவ்வளவு?**

0.0014 கிராம்.

**★ இருப்புச் செய்யப்படும் இள மீன் குஞ்சுகள் எடையில் தினந்தோறும் எத்தனை விழுக்காடு அளவு உணவு கொடுக்கப்படுகின்றது?**

ஐந்து விழுக்காடு

**★ நுண் மீன் குஞ்சுகளுக்கு உணவாகத் தவிடு, கடலைப் பிண்ணாக்கு கொடுக்கின்றோம். இதனை எந்த விகிதத்தில் கலந்து கொடுக்க வேண்டும்?**

ஒரு பங்கு தவிடு, ஒரு பங்கு கடலைப் பிண்ணாக்கு என்ற விகிதத்தில் கலந்துகொடுத்தல் வேண்டும்



**★ நாற்றங்கால்களுக்கு இயற்கை உரம், செயற்கை உரமிட்டு மீன் குஞ்சுகள் இருப்புச் செய்கிறோம். எதற்காக?**

நுண் உயிர்களை உற்பத்தி செய்திட

**★ தாவர நுண்ணுயிர்களை உண்ணும் மீன் எது?**

வெள்ளிக் கெண்டை.

**★ வெள்ளிக்கெண்டை மீன் எந்த நாட்டினைச் சார்ந்தது?**

சீன நாட்டைச் சார்ந்தது.

**★ தமிழ்நாட்டிலுள்ள ஆற்றுப்பகுதியில் கல்பாசு, சேல் கெண்டை, கோழி மீன் போன்றவைகள் இருக்கின்றன. இவற்றைவிட அதிவிரைவில் வளரக்கூடிய 3 மீன்களை வட இந்திய ஆற்றுப்பகுதியிலிருந்து கொண்டு வந்து இருப்புச் செய்து தீவிர முறையில் வளர்க்கப்பட்டு வருகின்றன. அவை யாவை?**

கட்லா, ரோகு, மிர்கால் எனும் கெண்டை இன மீன்கள்.

**★ இந்த மூன்று மீன்களில் மிதக்கும் விலங்கின நுண்ணுயிர்களை உண்டு வளரும் மீன் எது?**

கட்லா.

**★ ரோகு மீன் மீன் குளத்தில் எந்த மட்டத்தில் வாழக்கூடியது?**

இடை மட்டம்.



★ குளத்திலுள்ள புல்லைத் தின்னக் கூடிய மீன் இனம் எது? இது எந்த நாட்டைச் சார்ந்தது?

புல்கெண்டை. இது சீன தேசத்தைச் சார்ந்தது.

★ குளத்தின் அடிமட்டத்திலுள்ள அழுகிய தாவர, விலங்கு மற்றும் புழுப்பூச்சிகளைத் தின்று வளரக் கூடிய இரண்டு மீன்கள் வளர்ப்பில் இருப்புச் செய்யப்படுகின்றது. இதில் ஒரு மீன் வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டது, எது?

சாதாக்கெண்டை. இது ஐரோப்பா கண்டத்தினைச் சார்ந்தது.

★ குளங்களில் விரலிகள் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்கின்றோம். அதன் சராசரி நீளம் 5 செ.மீ. இருக்கும். அப்படி இருப்புச் செய்யப் படும் விரலிகளின் எடை எவ்வளவு?

1.5 கிராம்.

★ நுண் மீன் குஞ்சுகள் வளர்ந்து, இள மீன் குஞ்சுகளாக எடுக்கச் சுமார் எத்தனை நாட்கள் ஆகும்?

15 நாட்கள் ஆகும்.

★ நாற்றங்கால் தொட்டிகளுக்குப் பதிலாக நுண் மீன் குஞ்சுகளை வேறு ஏதேனும் முறையில் வளர்க்க லாமா? எப்படி?

வளர்க்கலாம். வெலான் வலைக் கூண்டுகளை நீரில் மிதக்க வைத்து அதனுள் வளர்க்கலாம்.

★ சாதாரணமாகத் தமிழ்நாட்டில் நைலான் வலைக்கூண்டுகள் நிறைய மீன் வளர்ப்பாளர்களுக்குக் கொடுக் கப்பட்டு மீன் குஞ்சுகள் வளர்க்கப் பட்டு விநியோகம் செய்யப்படுகின் றன. அவற்றின் சராசரி நீள அகல மென்ன?

10 மீட்டர் நீளம், 4 மீட்டர் அகலம்.

★ மேலே கூறியுள்ள அளவுள்ள 40 பி நைலான் வலைக் கூண்டில் எவ்வளவு நுண் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப் படுகின்றன?

ஒரு இலட்சம்.

★ 40 பி வெலான் வலைக்கூண் டில் நுண் மீன் குஞ்சுகளை எத்தனை நாட்கள் வைத்திருக்கலாம்?

15 முதல் 20 நாட்கள் வரை வைத்திருக்காலம்.

★ 16 பி வெலான் வலைக் கூண் டில் எவ்வளவு இள மீன் குஞ்சுகள் இருப்பு செய்யலாம்?

25 ஆயிரம்.

★ இள மீன் குஞ்சுகளின் சராசரி எடை என்ன?

1 கிராம்.

★ மீன் வளர்ப்புக்குக் குளங்கள் தேர்வு செய்யப்படும் போது மண் ணின் தன்மை எவ்வாறு இருக்க வேண்டும்?

களிமண் கலந்த மண் பகுதியாக இருத்தல் வேண்டும்.

★ குளங்களில் மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யுமுன் சுண்ணாம்பு இட வேண்டும். ஒரு எக்டேர் பரப் பிற்கு எவ்வளவு சுண்ணாம்பு இட வேண்டும்?

200 கிலோ கிராம்.

★ அமிலத் தன்மை அதிகமுள்ள நீர்மண் பகுதியில் காரத்தன்மைக்கு மாற்றப்பயன்படுத்தப்படும் பொருள் எது?

சுண்ணாம்பு.

★ குளங்களில் நீர் ஏற்றும் போது சல்லடை பயன்படுத்தி வடிகட்டி நீரை ஏற்ற வேண்டுமா? ஏன்?

ஆம்; ஏற்ற வேண்டும். ஏனென் றால் இயற்கையிலுள்ள எதிரி இன மீன்களும், முட்டைகளும் குளத் திற்கு வருவதைத் தவிர்த்திட.

★ விரோதி இன மீன்களை அழிப் பதற்கு எக்டேருக்கு எவ்வளவு இலுப்பைப் பிண்ணாக்குப் பயன் படுத்த வேண்டும்?

200 கிலோ இலுப்பைப் பிண் ணாக்கு.

★ இலுப்பைப் பிண்ணாக்கைப் பயன்படுத்தி விரோதி இன மீன் களை அழித்த உடன் மீன் குஞ்சு களை இருப்புச் செய்யலாமா?

நச்சுத் தன்மை இருப்பதால மீன் குஞ்சுகள் இறந்துவிடும். எனவே, இருப்புச் செய்யக்கூடாது.

★ அப்படி எனில் எத்தனை நாட் களுக்குப் பிறகு இருப்புச் செய் யலாம்?

15 நாட்களுக்குப் பிறகு இருப்புச் செய்யலாம்.

★ மீன் குஞ்சுகள் இருப்புச் செய்யப் பட்டுள்ள குளங்களில் ஆடுமாடு களைக் குளிப்பாட்டலாமா?

குளிப்பாட்டாலாம்; தவறில்லை.

★ அப்படிக் குளிப்பாட்டுவதால் மீன் வளர்ப்புக்கு என்ன நன்மை?

மீன்களின் உணவான நுண் ணுயிர்களின் உற்பத்தி அதன் மூலம் அதிகமாகும்.

★ ''பிளாங்டான்'' என்பது என்ன? அது எப்படி மீன் வளர்ப்பில் முக் கியப் பங்கு வகிக்கிறது?

தாவர மற்றும் விலங்கு நுண்ணு யிர்களை ''பிளாங்டான்'' என்று அழைக்கிறோம்; அவற்றை உண்டு தான் மீன்கள் வளர்கின்றன.

**★ வெவ்வேறு உணவுப் பழக்க முள்ள வெவ்வேறு மட்டங்களில் வாழக்கூடிய மீன்களை ஒன்றாகச் சேர்த்து மீன் வளர்ப்புச் செய்கி றோம். இம்முறைக்கு என்ன பெயர்?**

கலப்பின மீன் வளர்ப்பு முறை என்று பெயர்.

**★ கலப்பின மீன் வளர்ப்பில் குளங் களில் எத்தனை வகையான மீன் களை இருப்புச் செய்யலாம்? அவை யாவை?**

ஆறு வகை, அவை கட்லா, ரோகு, மிர்கர்ல், புல்கெண்டை, வெள்ளிக்கெண்டை, சாதாக் கெண்டை.

**★ முகமைக் குளங்களில் கலப்பின மீன் வளர்ப்பில் ஒரு எக்டேருக்கு இருப்புச் செய்யப்படும் மீன் குஞ்சு களின் எண்ணிக்கை எவ்வளவு?**

5,000 மீன் குஞ்சுகள்.

**★ இனத்திற்கு எத்தனை இருப்புச் செய்ய வேண்டும்.**

| | |
|---|---|
| கட்லா | 1,250 |
| ரோகு | 1,000ரு |
| மிர்கால் | 1,000 |
| வெள்ளிக்கெண்டை | 750 |
| புல்கெண்டை | 250 |
| சாதாக்கெண்டை | 750 |

குளத்தின் உற்பத்தித் திறனை அனுசரித்து இதனை மாற்றம் செய்து கொள்ளலாம்.

**★ தமிழ்நாட்டில் மக்களால் மிகவும் விரும்பப்படும் மீன் எது? அதனைக் கலப்பின மீன் வளர்ப்பிற் சேர்த்து வளர்க்கலாமா?**

அதிகம் விரும்பப்படுவது விரால். அதைக் கலப்பின மீன் வளர்ப்பில் சேர்த்து வளர்க்கக் கூடாது.

**★ ஏன் அப்படி?**

விரால் மீன்கள் தன் இனத்தைச் சாப்பிடுவதோடன்றி மற்ற இன மீன்களையும் சாப்பிட்டு விடும்.



ஆகவே, இருப்புச் செய்யப்படும் மீன்கள் விரால் மீன்களால் அழிக்கப் பட்டுவிடும்.

**★ கலப்பின மீன் வளர்ப்பில் நன்னீர் இராலைச் சேர்த்து வளர்க் கலாமா?**

வளர்க்கலாம்.

**★ நம் நாட்டில் கிடைக்கக்கூடிய நன்னீர் இரால்களில் வளர்ப்புக்குத் தகுதியுடைய வகைகள் எத்தனை? அவை யாவை?**

அவை இரண்டு வகைப்படும்.

1. மேகீரோ பிராக்கியம் மால்கம்சோனி
2. மேகீரோ பிராக்கியம் ரோசன்பர்கி

**★ கெண்டை இன மீன்களுடன் நன்னீர் இரால் மீன்களைச் சேர்த்து வளர்த்தால் கெண்டை இன மீன் குஞ்சுகளைத் தின்று விடாதா?**

அப்படித் தின்று விடாது.

**★ நன்னீர் இரால் மீன்கள் நீரின் எந்த மட்டத்தில் வாழக் கூடியவை?**

நீரின் அடிமட்டத்தில் வாழக் கூடியவை.

**★ ஏன் நன்னீர் இராலைக் கெண்டை இன மீன்களுடன் சேர்த்து வளர்க்க வேண்டும்?**

நன்னீர் இரால் வளர்ப்பதால் அதிக இலாபம் கிடைக்கிறது.

**★ நன்னீர் இரால் வளர்ந்து மகசூல் தர எவ்வளவு மாதங்கள் போதும்?**

நான்கு மாதங்கள் போதும்.

**★ உயர்ரகக் கெண்டை இன மீன்க ளான கட்லா, ரோகு, மிர்கால் பெண் மீன்கள் வளர்ச்சி பெற்ற பின் பருவமடையும் ஆண்டுகள் எத்தனை?**

இரண்டு ஆண்டுகள்.

**★ உயர்தரக் கெண்டை இன மீன் களாகிய கட்லா, ரோகு, மிர்கால் குளங்களில் தானாக முட்டையிடும் தன்மையற்றவை. அவற்றை இனப் பெருக்கம் செய்ய மீன் பிட்யூட்டரி யின் கரைசல் தயார் செய்து அதை ஊசி மூலம் ஆண், பெண் மீன் களுக்கு ஏற்றி இனப் பெருக்கம் செய்யப்படுகின்றன. இதற்குப் பதி லாகத் தற்போது ஒரு இரசாயனப் பொருள் பயன்படுத்தப்படுகிறது. என்ன?**

ஓவாபிரிம்.

**★ மருத்துவர்கள், இரத்த அழுத்த நோயாளிகள், வயதானவர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய் மார்கள் மீனை அதிகம் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்களே, ஏன்?**

மீன் மாமிசத்தில் புரதச் சத்து மிகுந்து இருப்பதால் தான் அப்படி மருத்துவர்களே கூறுவார்கள். ●

**இயக்கத்தின் வெற்றியை அமைக்கப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிடக் கூடாது. ஆனால், கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருப்பவர்களின் தார்மீக நிலை யைக் கொண்டே அளவிட வேண்டும்.**

**—அண்ணல் காந்தியடிகள்**

# மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்

**இரா. பூரணலிங்கம் இ.ஆ.ப.**
**ஆணையாளர், மீன்துறை.**

தமிழகத்தில் 648 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. தமிழ்நாட்டில் 1,000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்பகுதியும், ஆறுகள், குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் உள்ளன. இவை யாவும் நல்ல மீன்வளம் பெற்றுள்ளவையாகும். 442 மீனவர் குப்பங்கள் கடற்கரை யோரப் பகுதிகளிலும், 463 மீனவர் குடியிருப்புகள் உள்நாட்டுப் பகுதியிலும் உள்ளன. மீனவர் சங்கங்கள் இந்தக் குப்பங்களிலும், குடியிருப்புகளிலும் செயல்படுகின்றன. இச் சங்கங்கள் மீனவர் சமுதாயத்திற்காகவும் அவர்களின் மேம்பாட்டிற்காகவும் பல வகைகளில் கீழ்க்கண்ட பிரிவுகளின்படி உள்ளன.

| | |
|---|---|
| உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் | ... 246 |
| கடலோர மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் | ... 316 |
| மீனவர் கூட்டுறவு இணையங்கள் | ... 10 |
| மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கம் | ... 54 |
| விற்பனை மற்றும் இதர சங்கங்கள் | ... 22 |

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் 1,85,128 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் பங்குத்தொகை ரூ.247.49 இலட்சம் செலுத்தியுள்ளனர். அரசும் ரூ.98 இலட்சம் பங்குத்தொகை செலுத்தி சங்கங்களில் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது. முழுநேர மீன்பிடி தொழிலில் ஈடுபட்ட எல்லா மீன்வர்களும், 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் சங்கத்தில் குறைந்தபட்சம் ஒரு பங்குத்தொகை ரூ.10 செலுத்தி அங்கத்தினர் ஆகலாம்.

சங்க உறுப்பினர்களுக்குச் சங்கத்தின் மூலம் கடன் உதவி, அவர்களின் தொழிலை மேம்படுத்தப் பல வகைகளில் நேரடியாக அரசு, வங்கிகள் மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வழங்கப்படுகிறது. முக்கியமாகத் தொழில் உபகரணங்கள் ஆகிய கட்டுமரம், விசைப்படகு மற்றும் வலைகள் வாங்கவே கடன் வழங்கப்படுகிறது.

சங்கங்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கப் பங்குத்தொகை கடனாக ரூ.5,000 முதல் அதிக பட்சத் தொகையாக ரூ.25,000 வழங்கப்படுகிறது. இதனைப் பெற்ற சங்கம், உறுப்பினர்களுக்குவேண்டிய கட்டுமரம் வலை மற்றும் நுகர் பொருட்கள் வாங்கி விநியோகம் செய்கிறது. 1990-91-ஆம் ஆண்டில் ரூ.5 இலட்சம் 24 கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியுள்ளது.

தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் 31.3.91 முடிய 98 சங்கங்களுக்கு ரூ.468 இலட்சம் விசைப் படகுகள், வலைகள், கட்டுமரம் முதலியன வாங்க நிதி வழங்கியுள்ளது.

இதன் மூலம் 15,653 பேர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**மீனவர்களுக்கான திட்டங்கள்**

தமிழ்நாடு கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இத்திட்டம் கடுமையான பருவமழை காரணமாகக் கடலுக்கு மீன்பிடி தொழிலுக்குப் போக் முடியாத நிலையினால் ஆண்டில் 3 மாத காலம் நிரந்தர வேலை இல்லாமல் இருக்கும் காலத்தில், மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.60 வீதம் 3 மாதங்களுக்கு வழங்குகிறது. இதற்கு மீனவர்கள் ரூ.10 வீதம் 9 மாதங்கள் ரூ.90/- செலுத்தினால் அரசு ரூ.90 சேர்த்து ரூ.180/- என்று 3 தவணைகளில் ரூ.60 வழங்குகிறது.

**தமிழ்நாட்டில் 648 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் 1,85,128 உறுப்பினர்கள் உள்ளனர்.**

**புயல் மற்றும் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ், தமிழக அரசு 1990-92-ஆம் ஆண்டில், 3,300 மீனவர்களுக்கு ரூ.28,38,750 வழங்கியுள்ளது.**

1990-91-ஆம் ஆண்டில் ரூ.50,42,130 இத்திட்டத்தின்கீழ் 57,777 மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**மீனவர் விபத்துக் காப்புறுதி**

மீனவர்களுக்கான முக்கியத் திட்டங்களில் இதுவும் ஒன்று. இத் திட்டத்தின் கீழ், உள்நாட்டு மற்றும் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள யாவரும் பயன் அடைகிறார்கள். இத்திட்டத்தின் கீழ், உறுப்பினர்கள் எந்தவிதமான தொகையும் செலுத்த வேண்டியது இல்லை. இன்சூரன்ஸ் நிறுவனங்களுக்குத் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகை முழுவதும் இந்திய மற்றும் மாநில அரசுகளே செலுத்தி விடுகிறது.

1990-91-ஆம் ஆண்டில் 116 மீனவர்கள் குடும்பங்களுக்கு இன்சூரன்ஸ் நிறுவனம் ரூ.16.95 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்கியுள்ளது.

**நிவாரணத் திட்டங்கள்**

இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் துன்ப விளைவுகளுக்கு அரசு உடனடி நிவாரணம் மீனவர்களுக்கு வழங்குகிறது. இதன்படி மீனவர்கள், தங்கள் தொழில் புரியும்போது காணாமல்போன மற்றும் தொலைந்து போன கட்டுமரம், வலைகள் முதலியன வாங்க அரசு மானியமாக நிவாரணம் அளிக்கிறது. 1990-91-ஆம் ஆண்டு 3,300 மீனவர்களுக்கு ரூ.28,38,750/-ஐ அரசு வழங்கியுள்ளது.

**நுகர்பொருள் விநியோகம்**

தமிழகத்தில் 53 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களுக்கு வேண்டிய அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் முதலிய பொருட்கள் 56 கடைகளின் மூலம் விநியோகம் செய்கின்றன. இதனால் கடலோர மற்றும் சிறிய கிராமங்களில் உள்ள மீனவர்கள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர்.

# வளர்ச்சிப் பணிகள்

### வேளாண்மைத் துறை

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 1991-92-ஆம் ஆண்டில் கூடுதல் சோள உற்பத்திக்கு அரசு மானியத்துடன் சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 7.5 ஆயிரம் எக்டேர் சோளம் சாகுபடி பரப்பிலிருந்து ஒரு இலட்சத்து 7 ஆயிரம் டன் சோள தானியம் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குச் சான்று விதைகள், விதை நேர்த்தி, பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள், பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், களைக் கொல்லி மருந்துகள் போன்றவற்றிற்கு ரூ.3.78 இலட்சம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

விதை ஒரு கிலோவிற்கு 2 ரூபாய் வீதம் 80 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்கு 37.500 டன் சோள விதை மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. இதில் 10 டன் சோள விதை ரூ.20 ஆயிரம் மானியத்தில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி இன விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

50 சதவிகித மானிய விலையில் ரூ.50 ஆயிரம் மானியத்தில் 500 எக்டேருக்கு களைக் கொல்லி மருந்தும், விதை நேர்த்தி மருந்துகள் 2 ஆயிரம் எக்டேருக்கு ரூ.16 ஆயிரம் மானியமாக வழங்கப்படும். பூச்சி பூஞ்சாள நோய்கள் பொருளாதாரச் சேத நிலையைத் தாண்டிய நிலையில், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத்தில் ஆயிரம் எக்டேருக்கு ரூ.25 ஆயிரம் மானியமாக வழங்கப்படும்.



பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும், வேளாண்மைக் கருவிகளும் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்படும். பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் ஒரு விவசாயிக்கு ரூ.500 வரை மானியத்திலும், விவசாயப் பண்ணைக்குக் கருவிகள் ஒரு விவசாயிக்கு ரூபாய் ஆயிரம் வரை மானியமாகவும் வழங்கப்படும்.

இம்மாவட்டத்தில் கொடைக்கானல் நீங்கலாக உள்ள 13 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 5 எக்டேர் தொடர்ச்சியாக உள்ளவாறு கூட்டுச் செயல் விளக்கங்கள் அமைக்க ஒரு எக்டேருக்கு ரூ.500-க்கான இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்படும். மேலும் ஒவ்வொரு வட்டாரத்திலும் 50 விவசாயிகளுக்குச் சோளம் சாகுபடி பற்றிய தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கப்படும். இதற்கு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ஒவ்வொரு வட்டாரத்திலும் ரூ.2 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இச்சிறப்புத் திட்டத்தில் ரூ.99 ஆயிரம் அளவில் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

மானாவாரிப் பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்க ஒருங்கிணைந்த மானாவாரி நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 100 எக்டேர் செயல் விளக்க மையங்கள் 17 இடங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. இச்செயல் விளக்கம் ஒவ்வொன்றிற்கும் ரூ.42 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது.

வேளாண் காடுகள் திட்டத்தின் கீழ் 4 இலட்சத்து 60 ஆயிரம் மரக் கன்றுகள் சிறு, குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு இம்மாவட்டத்தில் 95 விவசாயிகளின் நாற்றங்கால்களில் இலவம், புளி, வேம்பு போன்ற கன்றுகள்



வளர்த்து வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 3.5 இலட்சத்திற்குப் பழமரக் கன்றுகள் வழங்கப்படுகிறது.

தேசிய மானாவாரி நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 8 வட்டாரங்களில் தீவனப் பயிராக சுபா புல் மற்றும் இதர வகை மரக் கன்றுகளும் 80,000 எண்ணிக்கையில் வளர்க்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உழவர் நண்பர்களுக்கு மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு மற்றும் மானாவாரி சாகுபடி தொழில்நுட்பங்களைப் பற்றிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

எண்ணெய் வித்துக்கள் பயிற்சி செய்யும் விவசாயிகளுக்கு அரசின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திட்டத்தின்கீழ் 33.83 இலட்சம் பல்வேறு திட்டங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.

## தோட்டக்கலைத் துறை

மலையடிவாரத் தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இதுவரையில் 2000 எக்டேர் பரப்பு, பழ மரங்கள் சாகுபடியில் புதிதாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 450 எக்டேர் பரப்பு சாகுபடிக்குக் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மலைப் பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும் 8,900 எக்டேர் பரப்பு காய்கறிப் பயிர்கள் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 3,000 எக்டேர் ஆண்டுப் பயிர்களாகக் காய்கறிப் பயிர்களிலும், 300 எக்டேர் பழ மரங்கள் பரப்பிலும் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறுமலைப் பகுதிக்கான தோட்டக்கலை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டில் 247 எக்டேர் பரப்பு நிரந்தரப் பலன் தரும் தோட்டக்கலைப் பயிர்களின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்காக ரூ.2.15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் 300 எக்டேர் பரப்பு ரூ.2.955 இலட்சம் செலவில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொடைக்கானல், தாண்டிக்குடி, சிறுமலை தோட்டக்கலைப் பண்ணையின் மூலம் இதுவரை 19.3 இலட்சம் பழச்செடிகள், செடிகள் மற்றும் நாற்றுகள் உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 3.78 இலட்சம் அளவில் பழச் செடிகள், காப்பி, ஆரஞ்சு, மிளகு, எலுமிச்சை மற்றும் ஒக் மர நாற்றுகள் உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

கொடைக்கானல் வட்டத்தில் மேல் பழனிமலைப் பகுதியில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த தேயிலை சாகுபடியை அறிமுகப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நிபுணர்கள் குழு தேயிலைச் சாகுபடிக்கு ஏற்ற பகுதிகளைப் பார்வையிட்டுச் சென்றுள்ளது. இதன் தொடர்பாகத் தேயிலை அறிமுகப்படுத்தும் திட்டம் ரூ.17.82 இலட்சம் செலவில் தீட்டி அரசின் ஒப்புதலுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மலர்க் கண்காட்சி கொடைக்கானலில் நடத்துவதற்கு, ஊட்டியில் இருப்பதுபோல நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்க ரூ.3.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

## ஐ.ஆர்.டி.பி., ஜே.வி.வி.டி. திட்டப் பணிகள்

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கடன் வழங்கவும், ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கும் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்திற்கு ரூபாய் 11 கோடி நடப்பு ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## கடல் நீரில் மின்சாரம்

**சென்னையிலுள்ள இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் (I.I.T.) கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகிலுள்ள விழிஞ்சம் என்ற கிராமத்தில் கடல் சக்தியிலிருந்து மின்சக்தி தயாரிக்கும் திட்டத்தை விரைவில் தொடங்கவிருக்கிறது. மொத்த நிலப்பரப்பில் சுமார் 71 சதவிகிதம் கொண்ட கடல் நீர் சுத்தமான மின்சக்தி பெற ஒரு முக்கிய ஆதாரமாகக் கருதப்படுகிறது. சுமார் ஒன்று முதல் ஐந்து சதவிகித சூரிய சக்தி காற்றுச் சக்தியாக மாற்றப்பட்டு, இந்தக் காற்றுச் சக்தியின் மூலம் கடலில் அலைகள் உண்டாக்கப்பட்டு, அந்த அலைகள் மூலம் மின்சக்தி தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.**

—நன்றி 'ஹிந்து'

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடப்பு ஆண்டிற்கு இம்மாவட்டத்திற்கு ரூ.172.164 இலட்சம் கடன் வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 5,509 நபர்கள் பயன்பெறுவார்கள் இத்திட்டத்தில் இதுவரை ரூ.49.05 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இதுவரை 2,240 பேர்கள் கடன் பெற்றுள்ளார்கள். இதில் 16.35 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இதில் 1,161 பேர்கள் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர். 1,042 பெண்கள், 68 உடல் ஊனமுற்றோர் அடங்குவர்.

கிராமப்புற இளைஞர்களுக்குச் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 490 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இதற்காக ரூ.4.80 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 48 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. 123 பேர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

இதில் இரண்டு சக்கர வண்டி பழுதுபார்த்தல், வயரிங், கணிப்பொறி, தேனீ வளர்த்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டி பழுதுபார்த்தல், பட்டுத் தொழில், தச்சுச் தொழில் ஆகிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்திற்கு ரூ.920.860 இலட்சம் நடப்பு ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தொகையைக் கொண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 2,240 தொகுப்பு வீடுகள் கட்டப்படும். இதுதவிர, 22 பள்ளிக் கட்டடங்களும், 48 ஊராட்சி அலுவலகக் கட்டடங்களும், 87 கிலோ மீட்டர் தார்ச் சாலைகளும், 172 கி.மீ. கல் சாலைகளும், 27 சத்துணவுக் கூடங்களும் கட்டப்படும்.

இதன்மூலம் நடப்பு ஆண்டில் 35.52 இலட்சம் மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட உள்ளது.

மேலும் இத்திட்டத்தின் மூலம் இந்த ஆண்டில் ரூ.26.930 இலட்சம் செலவில் சமூகக் காடு வளர்க்கப்பட உள்ளது. இத்திட்டத்திற்காக இதுவரை 14.82 இலட்சம் நாற்றுகள் வளர்க்கப்பட்டு 1.45 இலட்சம் நாற்றுகள் நடப்பட்டுள்ளன.

## பல்லவன் பேருந்துகளில் அனைத்து வழித்தடங்களிலும் பயணம் செய்ய 10 ரூபாய் டிக்கெட்!

**சென்னை நகரில் விடுமுறை நாட்களில் பல்லவன் பேருந்துகளில் விருப்பம் போலப் பயணம் செய்ய ரூ.10/- மதிப்புள்ள பயணச் சீட்டுக்கள் 5.11.'91 முதல் (தீபாவளித் திருநாள்) விற்பனை செய்யப்படுகின்றன. இந்தப் பயணச் சீட்டு வைத்திருப்பவர்கள் பயணச் சீட்டு வாங்கப்பட்ட விடுமுறை நாளில் காலை முதல் இரவு 11.00 மணிவரை பல்லவன் போக்குவரத்துக் கழக இரவு மற்றும் விரைவு பேருந்துகள் தவிர அனைத்து வழித்தட பேருந்துகளிலும் பயணம் செய்யலாம்.**

**இந்தப்பயணச் சீட்டுக்கள் பணிமனையுடன் இணைந்த பேருந்து நிலையங்களில் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையிலும் நேரக்காப்பாளர் அறைகளில் காலை 6.00 மணியிலிருந்து பகல் 12.00 மணி வரையிலும் விற்கப்படும். அனைத்து அரசு விடுமுறை நாட்களிலும் (சனி, ஞாயிறு உட்பட) இந்த விடுமுறை நாள் பயணச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படும்.**

சாண எரிவாயுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டிற்கு 350 கலன்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு 104 கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சூளா அடுப்பு திட்டத்தின்கீழ், 5,500 அடுப்புகள் அமைக்கத் திட்டமிடப்பட்டு இதுவரை 654 அடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

### குடிநீர் திட்டப் பணிகள்

கொடைக்கானல் நகரியத்தில் ரூ.275.93 இலட்சம் மதிப்பில் குடிநீர்த் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் ரூ.215 இலட்சத்திற்குப் பொதுப் பணித் துறையும், ரூ.60.93 இலட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியத்தால் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

பழனி நகராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.420 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, அரசு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

பாளையம் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ், ரூ.36.91 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, தலைமைப் பொறியாளர் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஸ்ரீராமபுரம் கிராமப் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.16.20 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டு, பகுதிப் பணி முடிவுற்று ஊராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன.

சேவுகம்பட்டி கிராமப் பேரூராட்சிக்கு ரூ.23.63 இலட்சம் மதிப்பில் குடிநீர் வழங்கத் திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

வடமதுரை கிராமப் பேரூராட்சிக்கு ரூ.19.07 இலட்சம் மதிப்பில் திட்டம் தீட்டப்பட்டு, கிராமக் குடிநீர்க் கோட்டம் மூலம் செயலாக்கத்தில் உள்ளது. அய்யலூர், கன்னிவாடி, தாடிக்கொம்பு, அகரம் மற்றும் எரியோடு ஆகிய கிராமப்புறப் பேரூராட்சிகளுக்குக் குடிநீர் வழங்கும் பணிக்காகத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கலின் பொருட்டு, திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் கிராமக் குடியிருப்புகள் பற்றிய மறு ஆய்வு எடுக்கப்பட்டது. இதில் மொத்தம் 2,543 கிராமக் குடியிருப்புகள் உள்ளன. குடிநீர் வழங்கலில் கிராமங்கள் தனித்தனியாகப் பகுக்கப்பட்டதில் 1,005 கிராமங்கள் முழுமையாகக் குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள், 1,489 பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்புகள், 52 குடிநீர் வசதி பெறாத குடியிருப்புகள் எனப் பகுக்கப்பட்டன.

1991-92-ஆம் ஆண்டில் 205 குடியிருப்புகளுக்கு ரூ.200 இலட்சம்



மதிப்பில் குடிநீர் வழங்கத் திட்டம் தீட்டி, செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 49 குடியிருப்புகளுக்கு ரூ.57.31 இலட்சம் மதிப்பில் குடிநீர் வழங்கும் பணி முடிவுற்றது. மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின்கீழ், குடிநீர்க் குழாய் அமைக்கும் பொருட்டு 120 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ.45 இலட்சம் செலவில் அனைத்து இடங்களிலும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் இத்திட்டத்தின்கீழ் ரூ.15 இலட்சம் செலவில் 40 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தண்ணீர் இன்றி வறண்டு போன 50 ஆழ்துளை கிணறுகளுக்குப் பதிலாகப் புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க ரூ.17 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில், இவ்வாறாகக் குடிநீர் தட்டுப்பாடற்ற நிலை காணும் முயற்சி முடுக்கி விடப்பட்டுள்ளது.

—மு.பிச்சையா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
திண்டுக்கல் அண்ணா மாவட்டம்.

# நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றினார் முதல்வர்

**திரு. வி.சி. சுப்பிரமணியன் என்பவர் பொதுப்பணித்துறையில் கட்டட மேஸ்திரியாக 1934 முதல் 1951 வரை 17 ஆண்டுகள் தற்காலிக ஊழியராகவும், அதன்பிறகு 17 ஆண்டுகள் நிரந்தரப் பணியாளராகவும் பணிபுரிந்து 30.9.68 அன்று ஓய்வு பெற்றார். அவர் ஓய்வுபெற்ற நாளில் வகித்த பதவிக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு அப்போதைய விதிமுறைகளில் இடமில்லை.**

**தமிழக அரசு 1974-ஆம் ஆண்டில் அவர் வகித்த பதவியான அரசு கட்டட மேஸ்திரி பதவியையும் 30.6.69-ஆம் நாள் முதல் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையது என அறிவித்தது. திரு வி.சி. சுப்பிரமணியன் அவர்கள் 30.9.68 அன்று பணியிலிருந்து ஓய்வுபெற்றதால் அவருக்கு மேற்படி ஆணைகளின்படியும் ஓய்வூதியம் கிடைக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது.**

**திரு. வி.சி. சுப்பிரமணியம், தமக்கு 30.9.68 முதல் ஓய்வூதியம் வழங்கவேண்டுமெனத் தமிழக முதல்வருக்குக் கருணை மனு ஒன்றினை அனுப்பியிருந்தார். அவருடைய வேண்டுகோளைப் பரிவுடன் பரிசீலித்து மாண்புமிகு தமிழக முதல்வர் செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் 30.6.69 முதல் அவருக்கு ஓய்வூதியம் வழங்கப்படவேண்டும் என ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி- அவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.375/- வீதம் ஓய்வூதியம் வழங்கப்பெறும். நிலுவைத்தொகை ரூ.40,625/-ம் அவருக்குக் கிடைக்கும்.**

# சேமிப்போம் சேமமுற வாழ்வோம்!



ஆல மரம்போல் உறுதியுடன்
அடங்காச் செலவைக் குறைத்திடுவோம்;
சீல முடனே வாழ்வதற்குச்
சீரிய முறையில் சேமிப்போம்;
காலம் கருதிச் சிற்றெறும்பும்
கவன மாகச் சேமிக்கும்;
ஞாலம் சிறக்க வேண்டுமெனில்
நாமும் இங்கே சேமிப்போம்!

வறுமை நிலையை ஒழிப்பதற்கும்
வளமாய் நாடு திகழ்வதற்கும்
பொருளா தாரம் உயர்வதற்கும்
பொன்னும் மணியும் நிறைவதற்கும்
இருண்ட வாழ்வின் ஒளிவிளக்காய்
இலங்கும் திட்டம் சேமிப்பு;
சிறுசே மிப்பில் முதலீடு
செய்து வந்தால் சிறந்திடுவோம்!

சிறுவர் கல்வி வளர்ச்சிக்கும்;
சிறப்பாய் நாளை வருவதற்கும்;
சிறுசே மிப்பைப் போற்றிடுவோம்;
சிறந்த பயனை அடைந்திடுவோம்;
சிறுகச் சிறுக எதையும்நாம்
சேர்த்து வைத்தால் பெருகிடுமே!
சிறுசே மிப்புத் திட்டம்நம்
தேசம் செழிக்க அவசியமே!

சிந்து கின்ற சிறுதுளியும்,
சேர்ந்தே பெருவெள்ளம் ஆதல்போல்,
ஐந்தும், பத்தும் இருபதென்றே
ஆன வரைக்கும் சேமித்தால்,
பிந்திய ஓய்வு காலத்தில்,
பிறர்தய வின்றி வாழ்ந்திடலாம்;
சந்ததி யர்க்கும் உதவிடலாம்;
சஞ்சல மின்றி இருந்திடலாம்!



கவிஞர் பூங்கோவன்



# தமிழ்நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்.

தமிழகத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழாக வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன் நலிவுற்ற பிரிவைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தவும், சுயமாகவே வருமானத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் மத்திய மாநில அரசு பல சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது.

இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவது, கால்நடை வளர்ச்சிக்கும் இத்துறையின் மூலம் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், வாத்து வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள், நாய் வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் போன்ற கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கி பராமரித்துப் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதும் இத்துறையின் நோக்கமாகும்.

வெண்மைப் புரட்சிக்கு வித்திட்டு அரிய பல ஆக்கபூர்வமான

**தமிழ்நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் ஆடு, கோழி, நாய் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன.**

**தமிழ்நாட்டில் 22 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், 1,653 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களும், உள்ளன.**

**ஐரோப்பிய சமூக பொருளாதாரக் குழு நிதி உதவியுடன் ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர், வட ஆர்க்காடு-அம்பேத்கர், தென் ஆர்க்காடு, சேலம், தருமபுரி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

திட்டங்களை அரசு ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மானிய விலையில் கறவைப் பசுக்கள், கோழிகள் வாத்து மற்றும் பன்றி இனங்கள் விநியோகிக்கப்படுவதுடன் அரசின் அங்கமான மகளிர் மேம்பாட்டுக் கழகம், பிற்பட்டோர் நல மேம்பாட்டுக் கழகம், ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிதி வசதி பெறவும் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

கால்நடைத் தீவனம், பயிர் வளர்ப்பு, கன்றுகள் வளர்ப்பு போன்ற இதரப் பணிகளுக்கும் அரசு மானியங்கள் வழங்கி வருகின்றது.

இத்திட்டங்களின் மூலமாகப் பழங்குடியினர், மலைவாழ் மக்கள் மற்றும் வறட்சிப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்கள் மூலம் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு நன்கு பயன் அடைந்துள்ளனர்.

### கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழகத்தில் 31.3.91 முடிய 22 கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவற்றில் ஒரு கோழி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கம் மட்டும் விருதுநகரில் நல்ல முறையில் செயல்படுகின்றது. கால் நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் 2 கோழிக்குஞ்சு பொரிக்கும் நிலையங்கள் மற்றும் கோழியின விரிவாக்க நிலையங்கள் மூலம் இனவிருத்திக்கான முட்டைகளும் கோழிகளும் தொடர்ந்து வழங்கப் பட்டு வருகின்றன. பல்வேறு சிறப்புத் திட்டங்கள் மூலமாக மாநில உதவி யுடன் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 1981-ஆம் ஆண்டு முதல் கோழிகளுக்கான நோய்கள் கண்டறியும் ஆய்வுக் கூடம் ஒன்று ஈரோட்டில் செயல் பட்டு வருகின்றது.

1990-91-இல் மாநில மாதிரி வரைவுத் திட்டப் புள்ளிவிவர அறிக்கைகள் மூலம் தமிழகத்தின் கோழி முட்டை உற்பத்தி 2,551 மில்லியன் ஆக உயர்ந்துள்ளது.

### பயன்பெற்ற உறுப்பினர்கள்

31.8.91 முடிய கோழி வளர்ப் புக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் தமிழகத்தில் 6,888 உறுப்பினர் களும் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 1,06,674 உறுப்பினர்களும் பயன்பெற்று வரு கின்றனர்.

### ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்

1971-72 முதல் தமிழகத்தின் ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங் கங்கள் சிறந்த வளர்ச்சி பெற்று வருகின்றன. 31.3.91 முடிய உள்ள காலத்தில் 1,653 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் சங்க உறுப்பினர்கள் கடனுதவி பெற்றுத் தரமான ஆடு களை வாங்கிப் பராமரித்துப் பயன் அடைந்து வருகின்றனர்.

உறுப்பினர்களின் கால்நடை களுக்கு மருத்துவ வசதிகளான குடற் புழு நீக்கம், உண்ணி நீக்கம் மற்றும் நோய்த் தடுப்பு ஊசிகள் போன்ற பணிகளைக் கால்நடைப் பராமரிப்புத் துறை அலுவலர்கள் கவனித்து வரு கின்றனர்.



ஆடுகளுக்கு இறப்பின் மூலம் அதிக நட்டம் அடையாவண்ணம் காப்பீடு செய்வதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இது தவிர, ஆடுகள் மரண நிதி என்ற நிதி யினையும் ஒவ்வொரு சங்கமும் பராமரித்து வருகின்றது. சிறப்பு மத்திய உதவித் திட்டததின் கீழ், 1990-91-ஆம் ஆண்டு முடிய 6,249 ஆடு அலகுகள் விநியோகிக் கப்பட்டு சிறந்த முறையில் பராமரிக் கப்படுகின்றன. மேற்கூறிய காலம் முடிய 171.04 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மறுநிதிக் கழகத் திட்டத்தின் கீழ், 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென ரூ.83 இலட்சம் செலவு செய்யப் பட்டுள்ளது. அவற்றில் ரூ.38.21 இலட்சம் இக்கழகம் வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசின் மூலம் ரூ.12.7 இலட்சம் அரசுப் பங்குத் தொகை யாக முதலீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புக் கால்நடைப் பராமரிப் புத் திட்டம் மத்திய அரசால் உரு வாக்கப்பட்டு 1976-77 முதல் 1990-91 முடிய 28,791 யூனிட் டுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒரு யூனிட்டு என்பது (அலகு) 20 பெட்டை ஆடுகளும் ஒரு கிடாவும் ஆகும். 1990-91-இல் யூனிட் ஒன் றுக்கு ரூ.8,000 வீதம் சேலம் மற்றும் வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத் திலும் ரூ.7,500 வீதம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலும் யூனிட் மதிப்பாக வழங்கப்படுகிறது. அதில் சிறு விவசாயிக்கு 25 சத விகிதமும் நடுத்தர விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழி லாளர்கட்கு 33⅓ சதவிகிதமும் மானியமாக வழங்கப்படுகிறது. மீதி உள்ள தொகை அரசுடைமையாக்கப் பட்ட வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படுகிறது. 1990-91 முடிய இத்திட்டத்தில் 364.44 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. 1990-91 ஆண்டிற்கு 2,102 யூனிட்டுகள் வழங்கப்பெற்று ரூ.54.37 இலட்சம் மானியமாக வழங்கப் பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், திருவண்ணாமலை-சம்புவராயர், வட ஆர்க்காடு- அம்பேத்கர், தென் னார்க்காடு, தர்மபுரி, சேலம், திருச்சி ஆகிய 6 மாவட்டங்களில் வாழும் 17,173 பழங்குடி மக்கள் பயன் அடைந்துள்ளனர். 1976-77 முதல் 1990-91 வரை இத்திட்டத் தின் கீழ், அரசு மானியமாக 290.31 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

மேச்சேரி இன ஆடுகள் சின்ன சேலம் ஆட்டுப் பண்ணையிலும் இராமநாதபுரம், வேம்பூர் இனம் சாத்தூர் ஆட்டுப் பண்ணையிலும் வளர்க்கப்படுகின்றன. ஓசூர் பண் ணையில் மாண்டியா, கொரிடல் கலப்பு இன ஆடுகள் வளர்க்கப்படு கின்றன. செட்டிநாடு, திருநெல்வேலி மாவட்டக் கால்நடைப் பண்ணை களில் 'கீழக்கரைசல்' இன ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. புதுக் கோட்டை மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தலைச்சேரி இன வெள்ளாடுகளும், சின்னசேலம் ஆட்டுப் பண்ணையில் ஜமுனாபாரி இன வெள்ளாடுகளும் வளர்க்கப் படுகின்றன.

ஐரோப்பிய சமூக பொருளா தாரக் குழு நிதி உதவியுடன் ஒரு ஆடு வளர்ப்புத் திட்டம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., வட ஆர்க்காடு-அம்பேத்கர், தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்த அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ.13.67 கோடி ஆகும்.

இத்திட்டத்தில் 60 உயிரின டார்செட் பெட்டை ஆடுகளும் 10 கிடாக்களும் வெளிநாட்டிலிருந்து அமெரிக்கா (டெக்ஸாஸ்) அல்லது ஆஸ்திரேலியா இறக்குமதி செய்து ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண் ணையில் வைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

# உணவே மருந்து







## டாக்டர் மோகனமாலா

**நாம்** எல்லோரும் எப்போதும் ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்றே விரும்புவோம். நோயின்றி வாழ்ந்தால்தான் வாழ்வை நன்கு சுவைக்க முடியும். நோய் தோன்றிய பின், அதைப் போக்கப் பல வழி களிலும் முயன்று சிரமம் அடை வதைக் காட்டிலும், வருமுன் காப் போராக இருப்பதே நல்லது.

நம் உடலை இயற்கையாகவே வலிவுள்ளதாக வைத்துக்கொண்டால், நம்மை நோய் அணுகாது. சிறந்த உணவை உட்கொள்வதன் மூலம் உடலை வலிவுள்ளதாக வைத்துக் கொள்ள முடியும். உணவுக்குப் பயன்படும் பொருள்களின் மருத் துவக் குணங்களை அறிந்து பயன் படுத்தினால் சிறந்த வாழ்வு வாழலாம்.

**கீரை வகை**

கீரை வகைகளின் மருத்துவக் குணங்களை நம் முன்னோர் தெளிவு பட உரைத்துச் சென்றுள்ளனர்.

தூது பத்திரியூண் சுவை யாக்கும் பூ
தாது வைத்தழைப் பித்திடும் காயது
வாத பித்த கபத்தையும் மாற்றும் வே
ரோதும் வல்லிபன் னோயு
மொழிக்குமே
- தேரையர் குணபாடம்

**தூதுளை**

தூதுளை, கொடியினத்தைச் சேர்ந்த மூலிகைகளில் ஒன்று. நமது தமிழ்நாட்டில் வேலிகளிலும், வேலியை அடுத்துள்ள மரங்களின் அருகிலும் வளர்ந்து, வேலியையோ, மரத்தையோ ஆதாரமாகப் பற்றி நிற்கும். வளைந்த முட்கள் அடர்ந்து இருப்பதுடன் அதன் இலைகளின் மத்தியிலும் முட்கள் இருக்கும். இதனை முட்கள் நீக்கித்தான் உப யோகிக்க வேண்டும். சுக்ல நஷ்டம், சுவாச காசம் முதலிய நோய்களை நீக்க, தூதுளை இலை உணவில் சுவையுடன் பயன்படுகிறது. தூதுளைப் பூ தாதுவை விருத்தி செய்வதுடன், வாத, பித்த, கப தோஷங்களை நீக்கி, உடலைச் சம நிலையில் வைத்துக் கொள்ளவும், உதவுகிறது. இதன்மூலம் (கொடி, காய், பூ) கபம், க்ஷயம், சுவாசகாசம் முதலிய கொடிய நோய்களைப் போக்கும் தன்மை கொண்டது.

நமது கிராமங்களில் இந்தத் தூதுளையை அன்றாட உணவுடன் சேர்க்கும் பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. தூதுளை இலையை (கீரையை) கூட்டு, பச்சடி, துவையல் முதலான வகைகள் செய்து உண் ணலாம்.

தூதுளையில் ஒரு பிடியை நன்கு ஆய்ந்து, சிறிது பசு நெய் விட்டு வதக்கிச் சாப்பிட்டால், நெஞ்சு வலி, இருமல், நீர்க்கோவை, உடல் வலி, புளியேப்பம் முதலிய நோய்கள் நீங்கும்.

### ரிப்பன் கட்டடத்தில் 24 மணி நேரமும் புகார்களைப் பெற புதுத் தொலைபேசி

**சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டடத்தில் குப்பையகற்றுதல், எரி யாத தெரு விளக்குகள், சாலைப் பராமரிப்பு இவை குறித்த பொது மக்கள் புகார்களை 24 மணி நேரமும் பெறுவதற்கு வசதியாக 584670 என்ற புதிய தொலைபேசி அமைக்கப்பட்டுள்ளது. பெறப்படும் புகார்கள் முறையாகப் பதிவு செய்யப் பட்டு உடனடியாக அவற்றைப் போக்க முயற்சி மேற்கொள்ளப் படும். பொதுமக்கள் இந்த வசதி யைப் பயன்படுத்தித் தங்கள் குறை களுக்குத் தீர்வு காணுமாறு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. அழகு திருநாவுக்கரசு அவர்களின் ஆணைக்கிணங்க, மாநகராட்சி ஆணையர் திரு. மா.இராமு கேட்டுக் கொள்கிறார்.**

ஐயமுடன் பித்தமகலுமரோசகம் போந்
தையலே வாதந் தணியுங்காண் -
வையமிசை
யோதுங் குடல் வாதமோடு
மலமொழியுந்
தூதுளங் காயுண்ணச் சொல்.

**உடல் உறுதி பெற**

தூதுளம் பூவில் 200 பூக்கள் எடுத்து, அதில் 350 மி.லிட்டர் பசுவின் பால் விட்டு, 60 கிராம் சர்க்கரை சேர்த்து, நன்றாய் பாலில் சுண்ட வேகவைத்து, லேகியப் பதமுடன் வந்தவுடன், (கையில் ஒட்டாமல் இருக்கும் பதத்திற்கு) பசு நெய் விட்டு லேகியமாகத் தயாரித்து, நெல்லிக்காயளவு காலை, மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டு வரலாம்.

நெஞ்சில் தயிர் போன்ற இறுகிய கபம், இரத்தத்தில் சேர்ந்துள்ள நாள்பட்ட விஷம், நாள்பட்ட நீர்க் கோவை ஆகியவை நீங்குவதுடன், உடல் உறுதியும், சரீர வனப்பும் இதனால் உண்டாகும். இதனை உண்டால் ஆச்சரியம் அடையும் படியான பல மாற்றங்களைக் காணலாம்.

**பசலைக் கீரை**

பசலை இலைகளில் இயற்கை யின் அதி அற்புதமான சக்திகள் பொதிந்துள்ளன. மனித வாழ்வின் ஆயுட்காலத்தை நீடிக்கச் செய்வதற் குப் பசலைக் கீரை பெரிதும் உதவும். இதில் இரும்புச் சத்து உள்ளது. இரத்த சோகையுள்ளவர்களுக்கு

இது மிகச் சிறந்த மருந்தாகும். வைட்டமின் சத்துக்களும், கால்சியம், ஹிமோ குளோபின், புரதப் பொருள் சம்மந்தமான அமினோ திரவங்கள் முதலியனவும் இக்கீரையில் அடங்கியுள்ளன. தொற்று வியாதிகள் உடலை அணுகா வண்ணம் பசலைக்கீரை பாது காக்கும் பலம் படைத்தது. உடம்பின் உஷ்ணத்தை அடக்கக் கூடிய தன்மை வாய்ந்தது.

நீர்க்கடுப்பு நீரடைப்பு நீங்காத
மேகமும் இவ்
ஊர்க்கடுத்து வாராமல் ஓடும்காண்-
பார்க்கவொண்ணா
அற்பஇடை மாதே அரோசி
வாந்தியும் தொலையும்
நற்பசலைக் கீரையத னால்.

கொடிப் பசலை உண்பதால் வயிற்றுக் கடுப்பும், சிறுநீரக அடைப்பும், மேக ரோகமும் அண்டாமல் நீங்கும். அரோசிகமும் வாந்தியும் தொலையும்,

**பொன்னாங்காணிக் கீரை**

கற்ப மூலிகைகளில் ஒன்றாகிய பொன்னாங்காணி மக்களுக்கு உணவு வகையாகவும், மருந்து வகையாகவும் நோய்களை எளிதில் நீக்கவல்லது. இதில் இரண்டு வகை உண்டு. 1. நாட்டுப்பொன்னாங்காணி 2. சீமைப் பொன்னாங்காணி, நாட்டுப் பொன்னாங்காணி பசுமை நிறமுள்ளதாக இருக்கும். சீமைப் பொன்னாங்காணி சிவப்பு நிறமுடையது.

நாட்டுப் பொன்னாங்காணியே சிறந்தது. இக்கீரையில் பொன் சத்து உண்டு. இதைக் கிரமப்படி பாகம் செய்து தினந்தோறும் உண்டு வருபவர்களது உடல் பொன் போன்று பிரகாசிக்கும் என்பது சித்தர்களின் வாக்கு. பொன் + ஆம் + காண் + நீ = பொன்னாங்காணி. அதாவது இதை உண்டால் உடல் வண்ணம் பொன்னாகக் காண்பாய் என்னும் பொருள் குறிப்பிடத்தக்கது.

பொன்னாங்காணிக் கீரையைத் துவரம் பருப்புடன் மிளகு சேர்த்துச் சமைத்து உண்டுவந்தால், மூன்று மாதங்களில் ஸ்தூல சரீரம் கரைந்து பருமன் குறைந்து வருவதைக் காணலாம்.

**மூல நோய் நீங்க**

பொன்னாங்காணிக் கீரையைப் பூண்டுடன் சேர்த்துச் சமைத்து உண்டால், ஆரம்ப காலத்து மூலம் நீங்கும். மூன்று மாதங்கள் விடாமல் உண்டால், மூல வியாதி முற்றிலும் நீங்கிவிடும்.

பொன்னாங் காணிக் கீரையைக் கொண்டு தைலம் காய்ச்சி, வாரம் ஒருமுறை தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால், பித்த ரோகம், சிரோ ரோகம், நேத்திர ரோகம் முதலியன நிவர்த்தியாகி, தோல் குளிர்ச்சி அடையும். மூன்று மாத காலத்தில் கண்ணொளி அதிகரித்துப் பிரகாசிக்கும்.

**பித்த சம்பந்தமான கண் மங்கல் நீங்க**

பொன்னாங்காணியின் பழுத்த இலைகளைப் போக்கி, நல்ல இலைகளை எடுத்து அரைத்து, சிறு வில்லைகளாகச் செய்து, தண்ணீர் நிறைந்த புதுப்பானை மீது அப்பி, மறுநாட் காலையில் அதனை எடுத்துக் கண்கள் மீது வைத்துக் கட்டினாலும், பற்று இட்டாலும், பித்த சம்பந்தமான கண் ரோகங்கள் எல்லாம் தீரும்.

மிகினுங் குறையினு நோய்செய்யு
நூலோர்
வளி முதலா வெண்ணிய மூன்று

- என்பது திருவள்ளுவர் வாக்கு.

ஒருவன்தான் உண்ணும் உணவும், செய்யும் செயல்களும் அவன் தகுதிக்கு ஏற்ற அளவில் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல், அதனில் மிகுமானாலும், குறையுமானாலும் வைத்திய நூலோரால் சொல்லப்படும் வாதம், பித்தம், கபம் என்னும் மூன்றும் அவனுக்கு நோயை உண்டாக்கும் என்கிற உண்மையை நாம் ஒருபோதும் மறத்தலாகாது. ●

## மாரடைப்பை முன்கூட்டி அறிவது எப்படி?

மாரடைப்பினால் திடீர் மரணம் ஏற்படும் அபாயம் உள்ளதா என்று முன்கூட்டியே கண்டறிய உதவும் பரிசோதனை முறை ஒன்றை, அமெரிக்காவில் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழக மருத்துவ மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

மாரடைப்பினால் தாக்கப்படுவோரில் பாதிப்பேருக்குத் திடீர் மரணம் நேருகிறது. மாரடைப்பினால் மட்டும் அமெரிக்காவில் ஆண்டுதோறும் 4 இலட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய பரிசோதனை முறையானது ஒருவருக்கு மாரடைப்பு ஏற்படுமா என்பதை முன்கூட்டியே கண்டறிந்து தக்க சிகிச்சை அளிக்க உதவும் என்று மதிக்கப்படுகிறது.

மாரடைப்பு ஏற்படுவதற்கு முன்னதாக, ஒருவரது இதயத்தில் குறிப்பிடத்தக்க மின்சார மாற்றங்கள் ஏற்படுகின்றன. இந்த மின்மாற்றங்களைக் கண்டறிந்து நாம் இ.ஸி.ஜி. எடுப்பதுபோல - ஆனால் இதயத்தின் உள்ளேயே நுண்ணிய ஊசியைச் செருகி கடும் மாரடைப்பு ஏற்படக்கூடுமா என்பதை டாக்டர்கள் முன்கூட்டியே மதிப்பிட முடியும் என்கிறார்கள் ஜார்ஜ்டவுன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

மாரடைப்பு ஏற்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன என்கிறார் டாக்டர் வெர்ரியர். இதயத்தின் இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதும், அந்தக் குழாய்கள் பாதிக்கப்படுவதும்தான் மாரடைப்புக்கு முக்கியக் காரணம் எனமருத்துவர்கள் வெகுகாலமாகவே கூறி வருகின்றனர். ஆனால், உடலின் நரம்பு இயக்கம் பாதிக்கப்படுவதும் மாரடைப்புக்கு முக்கிய காரணம் என்கிறார் டாக்டர் வெர்ரியர். கோபம், மன அழற்சி ஆகியவை காரணமாக நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு, அதன் விளைவாக மாரடைப்பு திடீர் மரணம் நேரிடுகிறது என்று அவர் குறிப்பிடுகிறார்.

இதய நோயாளிக்கு மட்டுமல்ல; இரத்த அழுத்த நோயாளிகளுக்கு வழக்கமாக அளிக்கப்பட்டு வரும் மருந்துகள் அவர்களுக்கு எந்த அளவுக்கு ஒத்துக் கொள்கின்றன என்பதைக் கண்டறியவும் இந்தப் புதிய முறை துணை புரியும் என்று அவர் கூறினார்.

-அமெரிக்கத் தகவல் நிலையம்.

# புயல்-மழை-வெள்ள இடர்ப்பாடுகள் : அரசு நிவாரணமும் வேண்டுகோளும்!

## வானொலி - தொலைக்காட்சியில் முதல்வர் உரை

"பாசத்திற்குரிய தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு வணக்கம்!

வங்கக் கடலில் அண்மையில் உருவான புயல் காரணமாகத் தமிழ்நாட்டில் பெய்த பெருமழை, வெள்ளப் பெருக்கு மற்றும் சூறைக்காற்று ஆகியவைகளின் மூலம் ஏற்பட்டுள்ள இன்னல்களுக்கும் பாதிப்புகளுக்கும் நீங்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறீர்கள்.

இந்த நேரத்தில் வங்கக் கடலில் புதிதாக இன்னொரு காற்றழுத்த மண்டலம் உருவாகிற அறிவிப்பு வந்திருக்கிற காரணத்தினால் உங்களோடு சில கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

### ரூ.340 கோடி சேதம்

இதுவரை எடுக்கப்பட்ட கணக்குகளின்படி ரூபாய் 340 கோடி அளவில் தமிழ்நாட்டில் இந்தப் புயலின் மூலம் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக, விளை பயிர்களை இழந்த வகையில் மட்டும் ரூ.72 கோடி நட்டம் ஏற்பட்டுள்ளது. 53 நபர்கள் உயிரிழந்து இருக்கிறார்கள். 833 நீர் நிலைகளில் உடைப்புகள் ஏற்பட்டுள்ளன. 95,000 குடிசைகள் சேதமடைந்துள்ளன.

7,048 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 416 பாலங்கள் பழுதடைந்துள்ளன. சுமார் 1,50,000 எக்டேர் அளவுக்குப் பயிர்கள் தண்ணீரில் மூழ்கி இருக்கின்றன.

புயல் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சீர் செய்யவும், இழப்புகளை ஈடுகட்டவும், உயிர், உடைமை மற்றும் குடிசை ஆகியவற்றை இழந்தவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்கவும், போர்க்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நான் சென்னை நகரில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று நேரடியாகப் பாதிப்புக்குள்ளான இடங்களைப் பார்வையிட்டு, உடனடியாகச் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்த அந்த இடங்களிலேயே ஆணையிட்டு வந்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

நான் சென்னை நகர மக்களைக் கொட்டும் மழையில் சந்தித்து ஆறுதல் கூறியதுபோல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்தப் புயலாலும் மழையாலும் பாதிக்கப்பட்ட மக்களை நேரடியாகச் சந்திக்க விரும்பினேன். ஆனால், காவல் துறையினருக்குக் கிடைத்த சில தகவல்களின் அடிப்படையில், பாதுகாப்புக் கருதி, இந்தச் சுற்றுப் பயணத்தை நான் மேற்கொள்ளக் கூடாது என்று தடுத்துவிட்டனர். எனவேதான், என் சார்பில் சில அமைச்சர்களை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

இருந்தாலும்- தமிழகத்திலுள்ள ஏழை எளியவர்களுக்கு உடனடியாக உதவுகிற வகையில்,

வெள்ளத்தால், பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை- விலைவாசி உயர்வினைக் கருத்தில் கொண்டு- உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்துள்ளேன். அந்த வகையில் சென்னைக்கு ரூ.500/-லிருந்து ரூ.600/-ஆகவும், மாவட்டங்களுக்கு ரூ.400/-லிருந்து ரூ.500/-ஆகவும் உதவித் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. உயிர் இழந்தோர் குடும்பத்திற்கு அரசின் சார்பில் ரூ.2,000/- வீதம் வழங்கப்பட்டுள்ளது. மழை வெள்ளத்தால் உயிர் இழந்தவர்களின் குடும்பத் தார்க்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு முழுவதும் 500 வெள்ள நிவாரண மையங்கள் உடன் திறக்கப்பட்டு, மருத்துவ வசதி, தங்கும் வசதி ஆகியவற்றோடு மக்களுக்கு உணவும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் புயல் மூலம் ஏற்பட்டுள்ள இழப்புகளை மத்திய இரயில் துறை அமைச்சர் திரு. ஜாபர் ஷெரீப் அவர்கள் தனது நேரடி வருகை மூலம் கண்டறிந்துள்ளார். அதுபோலவே, மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஷரத்பவார் அவர்கள் என்னோடு தொலைபேசி யில் தொடர்பு கொண்டு, மீட்புப் பணிகளுக்குத் தேவையான உதவிகளை உடனடியாக வழங்கு வதாகத் தெரிவித்துள்ளார்.

**பிரதமருடன் பேசினேன்**

இன்று காலை மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்களுடன் தொலைபேசி யில் நான் தொடர்புகொண்டு மழையாலும், புயலாலும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சேதத்தைக் கண்டறிந்து அறிக்கை கொடுக்க மத்திய அரசு அதிகாரிகளின் குழுவை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இதுவரை சமர்ப்பித்த அறிக்கைகளின்படி, மொத்தம் ரூபாய்

**இரசாயனத் துறையில் உயர் பட்டப்படிப்பு**

அண்ணா பல்கலைக் கழகத் துடன் இணைந்து சென்னை எண் ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் பெட் ரோலிய இரசாயனத் துறையில் புதிய முதுகலை பட்டபடிப்பை (எம்.டெக்) தொடங்குகிறது. இந்தப் பட்டப்படிப்பைத் தொடங்க அண்ணா பல்கலைக் கழகத்துக்கு சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் சார்பில் ரூ.5 இலட்சம் வழங்கப் பட்டது.

இந்த முதுகலை பட்டப்படிப்பு 1992 ஜனவரி மாதம் தொடங்கப் படும். ஒன்றரை ஆண்டுப் படிப் பான இந்தப் பட்டப்படிப்பில் 10 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

பெட்ரோலியம் மற்றும் பெட் ரோலிய இரசாயனத்துறை தொடர் பான படிப்பு இந்தியாவில் 6 இடங் களில் மட்டுமே உள்ளன. இவை அனைத்தும் வட இந்தியாவில் தான் இருக்கின்றன.



340 கோடி அளவிற்குச் சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது என்பதையும் பிரதமர் அவர்களுக்குத் தெரிவித்தேன்.

மாநில அரசின் வறட்சி மற்றும் புயல் நிவாரண நிதியில் ரூபாய் 39 கோடி இருந்தது. அதில் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஏற்கெனவே ரூ.9 கோடி செலவிடப்பட்டுள்ளது.

தற்சமயம் நிவாரணப் பணிகளுக்கு என ரூ.30 கோடி மட்டுமே இருக்கிறது. ஏற்கெனவே தமிழக அரசு சந்தித்து வரும் மிக நெருக்கடியான நிதி நிலைப் பற்றாக்குறையின் காரணமாக ரூ.340 கோடி அளவிற்குப் புயல் நிவாரணப் பணிகளுக் காக மாநில அரசே செலவிடுவது என்பது இயலாத காரியம் என்பதையும் பிரதமர் அவர்களுக்கு விளக்கிக் கூறினேன்.

எனவே, மத்திய அரசு தமிழ்நாட்டிற்குத் தேவையான உதவிகளைச் செய்யவேண்டும் என்று பிரதமர் அவர்களிடம் கோரினேன்.

### மத்திய அரசுக் குழு

பிரதமர் அவர்களும் நான் கேட்டுக் கொண்ட படி புயலால் விளைந்துள்ள சேதங்களைக் கணக் கிட மத்திய அரசு குழு ஒன்றினை உடனடியாக அனுப்புவதாக உறுதி அளித்தார்.

தஞ்சை, நாகப்பட்டினம்-காயிதே மில்லத், தென்னார்க்காடு, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மற்றும் சென்னை ஆகிய மாவட்டங்களில் பெரு மழையும், வட ஆர்க்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர், தர்மபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் கனத்த மழையும் பெய்திருக்கின்றது. நான் வருகை தர முடியாத பகுதிகளில் வாழும் என்னருமைத் தமிழக மக்களாகிய உங்களது துன்பங்களை, நானும் பகிர்ந்து கொள்ளவே வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் உங்களோடு இப்போது தொடர்பு கொள்கிறேன்.

ஏழை, எளிய மக்களின் நல்வாழ்விலும், நலனி லும் மிகுந்த அக்கறை கொண்ட உங்கள் அரசு, உங்களது இன்னல்களைய, துயர் துடைக்க, எப் போதும் ஓடி வந்து அரவணைப்புத் தரும் என் பதை இந்த நேரத்தில் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே மழை, புயல், வெள்ளம் ஆகிய இடர்ப்பாடுகள் ஏற்படும்போது, அரசு வழங்கும் நிவாரணப் பணிகளுக்கும், புயல் மற்றும் வெள்ளத் தடுப்புச் செயல்பாடுகளுக்கும், உங்கள் ஒத் துழைப்பை நல்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித்தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.''

—மாண்புமிகு முதல்வர் அவர்கள் 21.11.'91 அன்று வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஆற்றிய உரை.


# தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலை லிட்., பேட்டை, திருநெல்வேலி - 627 010.

தந்தி: "COOPSPIN"
டெலக்ஸ்: 0433-232 SPIN-IN

S.I.CS.MILLS

தொலைபேசி எண்:
ஆட்சியர் (தனி): 23610
ஆட்சியர் (இல்லம்): 72899
அலுவலகம்: 23284, 85, 86

## நிறுவப்பட்ட கதிர்கள் - 50,080

எங்களது ஆலை தமிழகத்திலேயே கூட்டுறவுத் துறையில் முதன் முதலில் துவங்கப்பட்டது. தமிழகத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் இதுவே பெரிய ஆலையாகும்.

20ஸ், 26ஸ், 40ஸ், 100ஸ், 2/17ஸ், 2/40ஸ், 2/60ஸ், 2/80ஸ் கார்டட் நூல் ரகங்களும் 60ஸ், 80ஸ் கோம்புடு நூல் ரகங்களும் மற்றும் கார்டட் ரகங்களில் கோன் நூல்களும் இங்கு உற்பத்தியாகி இந்தியா முழுவதும் விற்பனையாகின்றன.

ஆலை நவீனப்படுத்தப்பட்டு நூதன மின் சோதனைக் கருவிகளைக் கொண்டு ஒவ்வொரு நிலையிலும் மிகச் சிறந்த முறையில் தரக்கட்டுப்பாடு செய்யப்பட்டு நூல் விற்பனை செய்யப்படுகின்றன.

ஆட்சியர்

# நூல் நயம்

## பாரதிதாசன் நாடகங்கள் - ஓர் ஆய்வு

**ஆசிரியர்:**
டாக்டர் ச.சு. இராமர் இளங்கோ,

**வெளியீடு:**
ஐந்திணைப் பதிப்பகம்,
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

பக்கம்:1012 விலை:ரூ.170/-

"பாரதிதாசன் நாடகங்கள் - ஓர் ஆய்வு'' என்னும் நூல் தமிழ் இனம் விழிப்புற்றெழுந்து வீறு நடைபோட்டு தனது பழம் புகழை மீட்கப் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நாடகங்கள் எவ்வாறெல்லாம் பயன்படத் தக்கவை என்பதைப் பற்றி ஆழ்ந்து அகன்ற 1,012 பக்கங்கள் கொண்டதோர் ஒப்பற்ற ஆய்வுப் படைப்பாக அமைந்துள்ளது.

இந்நூல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் நாடகங்களை மட்டுமல்ல, தமிழக நாடக வரலாறு, திராவிட இயக்கத்தால் தமிழ் மொழியும், நாடகமும், கலைகளும் பெற்ற மாற்றங்கள் நாடக உலகம் பெற்ற ஏற்றங்கள் போன்றவற்றை விரிவாகவும் தெளிவாகவும் காட்டுகின்ற ஓர் ஒளிப்படச் சுருளாகவும் அமைந்துள்ளது.

பாவேந்தரோடு நூலாசிரியர் ஒன்றித் தோய்ந்துவிட்ட நிலையைத்தான் இந்நூல் காட்டுகிறது. பாவேந்தர் பற்றி யாருக்கும் தெரியாத பல அரிய செய்திகளைத் தேடி பலரை நாடி ஆசிரியர் தொகுத்துள்ளார்.

பாரதிதாசன் நாடகங்கள் நாற்பத்தேழு என்பதும், அவற்றுள் நூல் வடிவம் பெற்றவை, நூல் வடிவம் பெறாதவை, அச்சு வடிவம் பெறாதவை எவை எவை என்பதும் பட்டியலிட்டுக் குறிப்பிடப் பட்டுள்ளது. அச்சு வடிவம் பெறாத கையெழுத்துப் படிவப் படைப்புகளும்கூட இவ்வாய்விற்கு உள்ளாக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

''பாரதிதாசன் நாடக மாந்தர்களில் இரணியன், பிசிராந்தையார் போன்ற ஆள் பாத்திரங்கள் மரபு நோக்கிப் பீடுள்ளவர்களாகப் படைக்கப்பட்டுள்ள போதிலும், பொதுவாக அவருடைய படைப்பு உத்தியின்படி பெண் பாத்திரங்களே அழுத்தமும் உயர்வும் பெற்றிருப்பது'' குறிப்பிடத்தக்க ஒன்றென ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

பாவேந்தரின் தனித் தமிழ்ப் பற்றிற்கு அரிய சான்று ஒன்றும் தரப்பட்டுள்ளது. காதலா? கடமையா? என்ற காப்பியம் பல்லாண்டுகளுக்கு முன்னர் 'ஏழை உழவன்' என்ற தலைப்பில் எழுதப்பட்டிருந்தது. அதில் வட சொற்கள் கலந்திருந்ததால், பின்னர் அதனைத் தனித் தமிழ்ச் சொல்லோவியமாக்கி 'காதலா? கடமையா? என்ற தலைப்பில் பாவேந்தர் வெளியிட்டார்.

பாரதிதாசன் நாடகங்கள் கால வரிசை, அகரவரிசை, என்று பகுக்கப் பட்டுள்ளதோடு பாரதிதாசன் நூல்கள் அனைத்துமே அகர வரிசையில் தரப் பட்டுள்ளது பலருக்கும் பல்வேறு வகையில் பயன்படும்.

— சீ.ந

## சுந்தரப் பெருமாள் கோயில் இராமலிங்கம் கவிதைகள்

**வெளியீடு:**
எஸ்.பி.என். இராமலிங்கம்
388, 5-வது முதன்மைச் சாலை,
மகாகவி பாரதிநகர், வியாசர்பாடி,
சென்னை-39.

பக்கம்:96 விலை:ரூ.14/-

மரபுக் கவிதை மலர் மாலை எனத் திகழும் இந்நூலில் முப்பத்தைந்து மலர்கள் காட்சி தருகின்றன. கவிதைகளில் நயம் உண்டு; நன்னோக்கம் உண்டு; நல்ல வாதம் உண்டு; நல்ல தீர்ப்பும் உண்டு. இவற்றில் தென்றலும் வீசுகிறது; புயலும் மோதுகிறது. அருளுள்ளமும் தெரிகிறது; அடுபோர்த் திறனும் புலப்படுகிறது. அகப்பொருளும் உறைந்துள்ளது; புறப் பொருட்சுவையும் பொருந்தியுள்ளது. நகைச்சுவை உணர்வும் ஆங்காங்கே தலை காட்டுகிறது.

'தொன்னையிலே வீடுகட்டி அதற்குள் மாட்டுத்
தொழுவத்தை யும்கட்டும் வித்தை கற்றீர்'

—சென்னை நகர் குறித்து 'நகரமும் நரகமும்' என்னும் தலைப்பில் உள்ள கவிதையில் காணப்படும் இந்த வரிகள் நகைச்சுவை உணர்வையும், யதார்த்த நிலையையும் எடுத்துரைக்கிறது.

ஓரிரு கவிதைகளில் கவியரசர் கண்ணதாசனின் தாக்கம் காணப்படுகிறது. அதைத் தவிர்த்திருக்கலாம்.

—தமிழ்ப்பித்தன்

## டாக்டர் தயாவின் இசைப் பாடல்கள்

**ஆசிரியர்:**
அருள்மிகு
டாக்டர் தி.தயானந்தன் பிரான்சிஸ்

**வெளியீடு:**
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
சென்னை-3

பக்கம்:76 விலை:ரூ.15/-

இந்நூலாசிரியர், கால் நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலக் கட்டத்தில் எழுதப் பெற்ற பாடல்களின் தொகுப்பே இந்நூல்.

இந்நூலில் 63 இசைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவையனைத்தும் ஆண்டவருக்கு நன்றி மணி மாலையாக ஒளி விடுகின்றன. 'மீட்பர் சிலுவை சுமப்பேன்' என்பதிலிருந்து 'இல்லற வாழ்வினிலே' வரை இனிய கருத்துக்களின் சிதறல்களாகச் சிறகு விரிக்கின்றன. படிக்கவும், பாடவும் ஏற்ற பைந்தமிழ்ப் பாடல்கள்.

—பி.வி.கிரி

## சிறுநீரக நோய்களுக்குச் சித்த மருத்துவம்

**ஆசிரியர்: சீதாராம் சுப்ரமணியம்**

**வெளியிட்டோர்:**
பல்கலைப் பதிப்பகம்,
36, தெற்குச் சிவன்கோயில் தெரு,
கோடம்பாக்கம், சென்னை-600024.

பக்கம்:96 விலை:ரூ.10/-

சிறுநீர், சிறுநீர் சோதனை, நோயும்-மருந்தும் தாவரப் பொருட்கள், நவீன மருத்துவத்தில் சிறுநீரகச் சிகிச்சை, சிறுநீரும் மருந்து செய்யப் பயன்படுகின்றது. சிறுநீரே மருந்து, நோய்நீக்க இன்னும் சில மருந்துகள் ஆகிய தலைப்புகளிலான கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

கல்லடைப்பு, நீர்ச் சுருக்கு போன்ற வைகளுக்கான எளிய மருத்துவ முறைகளும் சொல்லப்பட்டுள்ளன.

நூலாசிரியரே வைத்தியர் எனினும்-சாமான்யர்களுக்கும் புரியும்படி கட்டுரைகள் எழுதப்பட்டிருக்கின்றன. —பி.எல்.ஆர்.

## வாழ வழி காட்டிய வள்ளல்

**ஆசிரியர்: ஓவியப்பாவலர் மு. வலவன்**

**வெளியீடு:**
முத்தையன் பதிப்பகம்
65, பெரிய தெரு, சென்னை-5

பக்கம்:188 விலை:ரூ.25/-

வள்ளலார் பெருமானின் வரலாற்றையும், தத்துவங்களையும் புதிய முறையில் எடுத்துக் கூறும் நூல். வடலூர் அடிகளைப் பற்றிய கலைக் களஞ்சியமாக இந்நூல் விளங்குகிறது. —சுகுமாரன்



## சேலம் மாவட்டம்

# சருகு மலைப் பழங்குடி மக்கள்

**சேலம்** மாவட்டம் மலைகளுக்குப் பெயர் பெற்றது. 'சேலம்' என்ற பெயர் இம்மாவட்டத்திற்கு வரக் காரணமாக இருந்ததே மலைகள் தான் என்பது ஒரு சாரார் கூற்று. 'சைலம்' என்றால் வடமொழியில் மலைகள் என்று பொருள். இதுவே காலப்போக்கில் சேலம் என்று மாறுதலடைந்தது என்றும் கருதப்படுகிறது.

சேலம் மாவட்டத்தில் சேர்வராயன் மலை, கொல்லி மலை, கல்ராயன் மலை, பச்சை மலை, போத மலை, சருகு மலை என்று பல்வேறு மலைகள் காணப்படுகின்றன. இம்மலைகளில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கும் இம்மாவட்டம் சிறப்புப்பெற்று விளங்குகிறது. மலைகளில் வசிக்கும் இம் மக்களை 'மலையாளிகள்' என்றே அழைக்கின்றனர். மலையாளிகள் என்ற இப்பழங்குடி வகை தமிழ்நாட்டில் காணப்படும் மொத்தப் பழங்குடி வகைகளில் 54 சதவிகிதத்தை வகிக்கிறது. அதிலும் சேலம் மாவட்டத்தில் இப்பழங்குடி மக்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றனர். சேர்வராயன் மற்றும் கல்ராயன் மலைகளில் காணப்படும் மலையாளிகளைப் பெரிய மலையாளிகள் என்றும், கொல்லி மலையில் காணப்படுபவர்களைக் கொல்லி மலையாளிகள் என்றும், பச்சை மலையினரைப் பச்சை மலையாளிகள் என்றும் அழைக்கின்றனர்.

சேலம் நகரத்தை அடுத்துக் காணப்படும் மலைகளில் மிகவும் அருகிலுள்ளது சருகு மலையாகும். கிழக்கு மேற்காக அமைந்துள்ள இம்மலை சுமார் 10 கிலோ மீட்டர் நீளமும் 3,500 அடி உயரமும் கொண்டுள்ளது. இம் மலைக்கு இப்பெயர் வருவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஒரு காலத்தில் மரங்கள் நிறைந்து காணப்பட்ட இம்மலை தற்காலத்தில் ஒரு சில மரங்களையே கொண்டு காய்ந்து காணப்படுவதால் சருகு மலை என்று பெயர் பெற்றதாகக் கூறுவர்.

**- ஜா.ரா. அசோகன்**
**காப்பாட்சியர்**
**அரசு அருங்காட்சியகம்**
**சேலம்**

மேலும் வட மொழியில் 'ஜர' (Jara) என்றால் புராணக் கதைகளில் வரும் 'ஜரசந்தன்' (Jarasandhan) என்ற உருவகத்தைக் குறிப்பதாகும். இவ்வுருவம் வயதான தோற்றத்தையும், அழிவையும் காண்பிப்பதாக அமைவதால் இப்பெயர் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. இதேபோல் சமண, புத்த மதங்களைக் குறிக்கும் வகையில் 'அருகு மலை' என்ற பெயரிலிருந்து (Arugan being a Tamil word for Arhat a Jain Hierophant) இப்பெயர் வந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. இதை உறுதிப்படுத்தும் வகையில் போதமலை என்ற பெயர் கொண்ட மலை அருகிலிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இம்மலை கிழக்கிலிருந்து தொடங்கும் இடத்தில் சேலத்தில் புகழ் பெற்ற 'கந்தாஸ்ரமம்' அமைந்துள்ளது. அதற்குச் சற்று வடக்குத் திசையில் குமரகிரி முருகன் கோவில் காணப்படுகிறது. அதையொட்டி சருகு மலையின் ஒரு பகுதியான 'நாம மலை' அமைந்துள்ளது. நாம மலையின் பின்புறமாகத் 'தேங்கல் மலை' என்ற மிகப்பெரிய தனித்து நிற்கும் பாறை அமைப்பு காணப்

படுகிறது. இம்மலையில் ஒரு காலத்தில் தேன் கூடுகள் மிகுந்து காணப்பட்டு, தேன் சேகரிக்கப்பட்டதால் தேன் மலை என்று பெயரைப் பெற்று தற்பொழுது தேங்கல் மலை என்று பெயர் மருவி அழைக்கப்படுகிறது. சருகு மலையின் உயரமான பகுதியில் பெருமாள் மலையும் அமைந்துள்ளது. சருகு மலையின் தென்புறம் தனியாகப் பிரிந்து காணப்படும் கூரான மலைப்பகுதிக்குக் 'கத்தி மலை' என்று பெயர்.

மொத்தத்தில் இவ்வமைப்புகளைக் கொண்ட இம் மலையில் மலையாளிப் பழங்குடிகளின் குக்கிராமங்களான கீழூர், மேலூர், ஒட்டப்பள்ளிக்காடு என்ற மூன்று ஊர்கள் காணப்படுகின்றன. இம்மலையை அடைவதற்குச் சேலம் நகரை ஒட்டி அமைந்துள்ள சன்னியாசி குண்டை அடைந்து ஒற்றையடி மலைப்பாதையில் நடக்க வேண்டும். இம்மலைக்குச் செல்வதற்குப் போக்குவரத்துப் பாதைகள் ஏதும் கிடையாது. மலையில் மிகச் சிறிய மூன்று குக்கிராமங்களே உள்ளதால் பாதைகள் போடும் பணி மேற்கொள்ளப்படவில்லை.

சன்னியாசிகுண்டு என்ற சிற்றூர் தேங்கல் மலையின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. சன்னியாசிகுண்டு என்ற பெயர் இவ்வூருக்கு வந்ததற்கான காரணம் புதிராக உள்ளது. சருகு மலையின் அடிவாரத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த முஸ்லீம் மத ஞானி ஒருவர் தேங்கல் மலையில் இருந்து உருண்டோடி வந்த மிகப்பெரிய பாறையைத் தம் வெறும் கைகளாலும் கால்களாலேயுமே தடுத்து நிறுத்தியதாகவும் பின்பு அப்பாறையின் அடியிலேயே குழி தோண்டி ஆசிரமம் அமைத்து இருந்தார் என்றும் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக அப்பாறையில் காணப்படும் கை மற்றும் கால்களின் பதிவுகளாகச் சில பகுதிகளையும் காண்பிக்கின்றனர். மேற்கூறிய காரணங்களால் இப்பகுதி சன்னியாசிக் குண்டு என்ற பெயரைப் பெற்றதாகக் கூறுவர். சன்னியாசிக்குண்டிலிருந்து மலைப்பாதையில் சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்றால் மேலூரைச் சென்றடையலாம். செல்லும் வழி ஒரே ஏற்றமாக இல்லாமல் இரண்டு பகுதிகளில் உயரமான பீடபூமியாய்ச் சமதளம் காணப்படுகிறது. இவ்விடங்களில் இருந்து தேங்கல் மலையைப் பார்த்தால் கண்கொள்ளாக் காட்சியாய்த் தேங்கல் மலை தனிப் பாறையாக உயர்ந்து நிற்கிறது. மேலூரை அடையும் உயரத்தில் நின்று பார்த்தால் கந்தாஸ்ரமும், குமரகிரி கோவிலும் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. இவ்வழிகள் மட்டுமின்றி பனைமரத்துப்பட்டி பக்கம் வந்து, குரால் நத்தம் வழியாகவும்; ராசிபுரம் அடைந்து நிலவார்ப்பட்டி வழியாகவும் மலை மேல் நடந்து மேலூரை அடையலாம்.

ஒட்டப்பள்ளிக் காடு என்ற கிராமம் மேலூரின் ஒரு பகுதியாகவே தனித்து வீடுகளைக் கொண்டு விளங்குகிறது. இதில் சுமார் 25 வீடுகள் காணப்படுகின்றன. மேலூரில் சுமார் 70 வீடுகள் காணப்படுகின்றன. மேலூரிலிருந்து ஒற்றையடிப் பாதையின் வழியாக அரை கிலோ மீட்டர் தூரம் மலையின் மறுபக்கச் சரிவில் இறங்கி நடந்தால் கீழூரை அடையலாம். இதில் சுமார் 40 முதல் 50 வீடுகள் காணப்படுகின்றன. மூன்று கிராமங்களிலும் சேர்ந்து மொத்தமாகச் சுமார் 800 மலைவாசிகள் சருகு மலையில் வாழ்கின்றனர்.

இக்குக்கிராமங்களில் அமைந்த வீடுகளில் பெரும்பாலானவை மண்ணால் சுவர் எழுப்பி கூரை வேயப்பட்டவையாகும். காட்டுப்புறங்களிலிருந்து சேகரிக்கும் 'கணாங்கு' என்ற புல்லை கூரை வேயப் பயன்படுகின்றனர். மேலூரில் சில வீடுகள் கருங்கற்களால் கட்டப்பட்டு கூரை வேயப்பட்டுள்ளன. மேலூரில் இவ்வகை வீடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இன்னும் சில வீடுகள் ஓடுகளால் வேயப்பட்டுள்ளன. சருகு மலையில் பாறைகள் நிறைந்து காணப்படுவதால் கல்லால் அமைக்கப்படும் வீடுகள் எண்ணிக்கையில் அதிகரித்திருக்கின்றன.

இம்மக்களின் முக்கியத் தொழில் விவசாயமாகும். விவசாயத்திற்கான பட்டா நிலங்கள் பெரும்பாலோர் வசம் உள்ளன. பட்டா நிலமற்றோர் புறம்போக்கு நிலத்திலும், ஏனையோர் மற்றோர் நிலத்தில் தொழிலாளிகளாகவும் வேலை செய்கின்றனர். விவசாய முறை இங்கு படிக்கட்டுப் பாசன முறையாகச் (Terrace cultivation) செய்யப்பட்டு வருகிறது. இம்முறையில் கேழ்வரகு, தினை, சாமை, நெல் ஆகியவை பயிரிடப்படுகின்றன. மழையை நம்பியே



## தலைமை நீதிபதி

டெல்லி உச்ச நீதிமன்றத்துக்குப் புதிய தலைமை நீதிபதியாகத் திரு. கே.என். சிங் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தற்போதைய தலைமை நீதிபதி திரு. ரங்கநாத் மிஸ்ரா சென்ற மாதம் 24-ஆம் தேதி ஓய்வு பெற்றதையடுத்து அந்தப் பதவிக்குத் திரு.கே.என். சிங் நியமிக்கப்பட்டுள்ளார். நீதிபதி திரு. கே.என். சிங் இம்மாதம் 25-ஆம் தேதி தலைமை நீதிபதியாகப் பதவி ஏற்றார். நீதிபதி டாக்டர் ஏ.எஸ். ஆனந்த் உச்ச நீதி மன்ற நீதிபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. வைகாசி மாதத்தில் பயிரிடப்படும் பயிர்கள் தை அல்லது மாசி மாதங்களில் அறுவடை செய்யப்படுகின்றன. மழையின்றிப் பயிர்கள் வாடி காய்ந்து போவதும் உண்டு. பொதுக் கிணறுகள் இரண்டைத் தவிர சுமார் 10 தனியார் கிணறுகளும் உள்ளன. எண்ணெய் இயந்திரத்தை வைத்து வசதியான மலையாளிகள் நீர்ப் பாசனம் செய்து பயிர் செய்கின்றனர். விவசாயத்திற்கான கடன் வசதிகள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பெறப்படுகின்றன. இப்பயிர் தானியங்களிலிருந்து சமைக்கப்படும் கஞ்சி, கூழ், களி முதலயவற்றையே பெரும்பாலும் உணவாக இம்மக்கள் உட்கொள்கின்றனர். மண்வாகு காரணமாக இங்கு அவரையும் அதிக அளவில் பயிரிடப்படுகின்றது. சேகரிக்கப்படும் அவரையும், நிலங்களின் ஓரங்களில் காணப்படும் புளியமரங்களில் இருந்து சேகரிக்கப்படும் புளியும் சேலம் நகருக்குத் தலைச் சுமையாகக் கொண்டு செல்லப்பட்டு விற்கப்படுகின்றது. பெண்கள் சுள்ளி சேகரிப்பதையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளனர். இவை பெரும்பாலும் வீட்டு உபயோகத்திற்கே பயன்படுத்தப் படுகின்றன. இது மட்டுமின்றி, காடுகளில் சேகரிக்கப்படும் பாலை, ஊஞ்சை, நமை, புருஷம் ஆகிய மரச் சுள்ளிகள் விறகுக் கட்டுகளாக எடுத்துச் செல்லப்பட்டு சேலத்தில் விற்கப்படுகின்றன.

இதரத் தொழிலாக ஆடு வளர்ப்பு, மாடு வளர்ப்பு ஆகியவையும் காணப் படுகிறது. ஆடுகள் கீழே ஓட்டிச் செல்லப்பட்டு சேலத்தில் விற்கப் படுகின்றன. இதர மலைகளில் சாதாரணமாக வளர்க்கப்படும் பன்றி வளர்ப்பு இங்கு காணப்படவில்லை. விவசாயப் பயிர்களைப் பன்றிகள் சேதப்படுத்துவதே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்று கருதப் படுகிறது. மாடுகளின் சாணத்தை உரத்திற்காகச் சேகரிப்பதும் பெண்களின் வேலையாக அமைகிறது. கிராமத்திலிருந்து 4 அல்லது 5 கிலோ மீட்டர் தூரத்திலேயே சேலம் அமைந்துள்ளதால், இவர்கள் உணவுப் பொருட்கள் வாங்குவதற்கும், விற்பதற்கும் வாரத்தில் மூன்று அல்லது நான்கு நாட்கள் சேலத்திற்கு இறங்கி ஏறுகின்றனர். கிராமத்திற்கு அருகில் மலையின் உச்சியில் மட்டும் சிறு காடுகளாக மரங்கள் காணப்படுகின்றன. இவற்றில் மா, பலா, புளி, தேக்கு, தென்னை, சீத்தா ஆகிய மரங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பரவிக் காணப்படுகின்றன.



எளிய வாழ்க்கை முறையை மேற்கொண்டுள்ள இவர்கள் எங்கிருந்து இம்மலையில் குடியேறினார்கள் என்பதற்குச் சரிவர ஆதாரங்கள் காணப்படவில்லை. ஒரு கூற்றார், கொல்லி மலையில் இருந்து வந்தனர் என்றும், மற்றொரு பிரிவினர் பால மலையிலிருந்து இடம் பெயர்ந்தனர் என்றும் கூறுகின்றனர். இவர்களின் உறவினர்கள் கொல்லிமலை, போத மலைகளில் காணப்படுவதிலிருந்து வெளி மலைகளிலும் இவர்கள் திருமண உறவை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

இதர மலையாளிப் பிரிவினரைப் போலவே இக்கிராமங்களும் ஊர்த் தலைவனைக் கொண்டுள்ளன. ஒட்டப்பள்ளிக் காடு, மேலூர் ஆகிய இரு ஊர்களுக்கும் சேர்த்து ஓர் ஊர்க்கவுண்டரும், கீழூருக்கு ஓர் ஊர்க்கவுண்டரும் தனித்துக் காணப் படுகின்றனர். இரு கிராமங்களுமே தனித்தனியாக 5 பேர் கொண்ட ஊர்க் கவுண்டர்கள் குழு இயங்குகிறது. ஊரில் ஏற்படும் பிரச்சினைகளைப் பஞ்சாயத்து கூட்டி இக் குழுவே நீதி வழங்குகிறது. திருமணங்கள் பெற்றோர்களால் முறை பார்த்து முடிவு செய்யப்படுகிறது. தானே துணையைத் தேடிக் கொள்பவர்கள் இணைந்து வாழ்ந்தால் பிரச்சினை ஏதும் ஏற்படுவதில்லை. அவ்வாறு இல்லையெனில் ஆண் மகனுக்கு அதிகத் தொகை அபராதமாக விதிக்கப்படுகிறது. இத்தொகை சேகரிக்கப்பட்டு கைவிடப்பட்ட பெண்ணிற்கு இனாமாகக் கொடுக்கப்படுகிறது.

மேலூரில் ஓர் அரசுப்பள்ளி உள்ளது. இதில் 5-வது வரை மாணவர்கள் படிக்க வசதி செய்யப் பட்டுள்ளது. இங்கு இலவசமாகப் புத்தகங்களும், சீருடையும், உணவும் அளிக்கப்படுகின்றன. இருந்தும் அனைத்துக் குழந்தைகளும் பள்ளி செல்வதில்லை. ஐந்தாவது படிப்பதற்கு மேல் படிக்கும் குழந்தைகள் சேலத்தில் பெற்றோரால் படிக்க வைக்கப்படுகின்றன. ஊரில் பிரதானமாகக் கண்ணில் படுவது சூரிய வெளிச்சத்தினால் ஒளிவிடும் குழல் விளக்காகும். ஊரில் மின்சார வசதி இல்லாததால் இவ்விளக்குப் பேருதவியாய் இருக்கிறது. இவ்விளக்கு மூன்று ஊர்களிலும் ஊரின் நடுவே நிறுவப்பட்டுள்ளது. குடிநீர் வசதிக்காக மேலூரிலும், கீழூரிலும் துளைக் கிணறுகள் நிறுவப்பட்டுள்ளன. ஒன்றில் நீர் வற்றிப் போனதால் தற்பொழுது குடிநீருக்குச் சற்றுச் சிரமம் ஏற்பட்டு உள்ளது. மருத்துவ வசதிகளுக்குப் பெரும்பாலும், சேலம் வந்து செல்கின்றனர். ஊர் முழுவதும் ஏதும் நோயால் தாக்கப் பட்டால் பனைமரத்துப்பட்டி வந்து தகவல் தெரிவிக்கின்றனர். மருத்துவர்கள் மலையேறிச்சென்று மருத்துவம் பார்க்கின்றனர். இருந்தும் கிராம மக்கள் பிரசவ உதவிக்குச் சிரமப்படுகின்றனர். பிரசவங்கள் பெரும்பாலும் ஊர் மருத்துவச்சி அல்லது கிராமப் பெண்களால் பார்க்கப்படுகிறது. குழந்தை பிறப்பதில் சிரமம் ஏற்பட்டால் உடனடியாகக் கட்டிலில் படுக்க வைத்துத் தூக்கிக் கொண்டு சேலம் வந்து விடுகின்றனர். இடையில் கோளாறு ஏற்பட்டு இறப்பவர்களும் உண்டு. இறந்தவர்களைப் பொதுவாகப் புதைக்கும் பழக்கம் உள்ளது. அசாதாரணமாக இறந்தவர்களை எரித்து விடுகின்றனர். ●

# பசுக்கள் அதிகம் பால் கறக்க உதவும் 'ஹார்மோன்'

**பசுக்கள்** அதிக அளவில் பால் கறப்பதற்கு ஊக்குவிக்கக்கூடிய 'ஹார்மோன்' ஒன்று செயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயற்கை ஹார்மோன் மிகவும் பாதுகாப்பானது. பசுக்களுக்கோ அல்லது அவற்றின் பாலை அருந்துபவர்களுக்கோ எந்தவிதமான தீய விளைவையும் இது ஏற்படுத்தாது.

'பொவைன் சொமடோட்ரோபின்' (Bovine Somatotropin) என்னும் பெயர்கொண்ட இந்த ஹார்மோன் மரபியல் முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

அமெரிக்க நாடாளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'திருப்புமுனைக் கட்டத்தில் அமெரிக்கப் பால்பண்ணைத் தொழில். உயிரியல் தொழில் நுட்பமும், புதிய கொள்கை வாய்ப்புகளும்' என்பது இந்த அறிக்கையின் தலைப்பாகும். அமெரிக்க அரசின் தொழில்நுட்ப மதிப்பீட்டு அலுவலகம் இந்த அறிக்கையைத் தயாரித்துள்ளது.

பசுக்களின் பால் சுரக்கும் திறனை ஊக்குவிக்கக்கூடிய ஹார்மோன், பசுக்களின் 'பிட்யூட்டரி' சுரப்பிகளில் இயற்கையாகவே உற்பத்தி ஆகிறது. 'பொவைன் சொமடோட்ரோபின்' என்னும் இச் செயற்கை ஹார்மோனைப் பசுக்களுக்குச் செலுத்தும்போது இந்தத் திறன் மேலும் அதிகமாகிறது.

'பொவைன் சொமடோட்ரோபின் மிகவும் நூதனமானது. பசுக்களுக்கு இதனைச் செலுத்துவதன் மூலம் ஒரு பசுவின் பால் சுரப்புத் திறனை 12 சதவிகிதம் அளவுக்குப் பெருக்க முடியும். தற்போது பயன்படுத்தப்படும் இதர முறைகள் மூலம் இந்த அளவை எட்டுவதற்குப் பத்து முதல் இருபது ஆண்டுக்காலம் வரையில் பிடிக்கும்' என்று இந்த அறிக்கையைத் தயாரித்துள்ள மைக்கேல் பிலிப்ஸ் குறிப்பிடுகிறார்.

இந்தப் புதிய ஹார்மோன் பாதுகாப்பானதாக இருக்குமோ என்று அச்சம் எழுப்பப்பட்டது. இதற்கு அவசியமே இல்லை. இந்த ஹார்மோன் எந்தவிதமான தீய விளைவையும் ஏற்படுத்துவதில்லை. இந்த ஹார்மோன் அளிக்கப்பட்ட பசுக்களிடமிருந்து பெறப்பட்ட பாலிலோ அல்லது இறைச்சியிலோ விரும்பத்தகாத மாறுதல்கள் ஏதும் இல்லை. முதல் சில வாரங்களில், சில பசுக்கள் அளித்த பாலின் கொழுப்புச் சக்தி அளவில் சொற்ப மாறுதல்கள் இருந்தனவே தவிர, அவைகூட தற்காலிகமானவையே. பசுக்களின் ஆரோக்கியத்தை இது எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. இவ்வாறு பிலிப்ஸ் கூறினார்.

இந்தச் செயற்கை ஹார்மோனைக் கூடப் பழையதாக்கி விடக்கூடிய அளவுக்குத் தொழில்நுட்பம் மிகவும் வேகமாக முன்னேறி வருவதாக பிலிப்ஸ் குறிப்பிட்டார். பொவைன் சொமடோட்ரோபின் பசுக்களின் உடலில் இயற்கையாகவே பெருமளவுக்குச் சுரக்கும் வகையில், பசுக்களின் உடலில் சில மரபுக்கூறுகள் மாற்றப்படும் காலம் வந்தாலும் வரலாம் என்றார் அவர்.

- அமெரிக்கத் தகவல் நிலையம்





## ஜவகர்லால் நேரு விருது

சர்வதேச நல்லிணக்கத்துக்கான 1989-ஆம் ஆண்டு ஜவகர்லால் நேரு விருது ஜிம்பாப்வே அதிபர் திரு. ராபர்ட் முகாபே அவர்களுக்கு 14.11.'91 அன்று புதுடெல்லியில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வெங்கட்ராமன் அவர்கள் வழங்கினார்.

1990-ஆம் ஆண்டுக்கான ஜவகர்லால் நேரு விருதைப் பெற ஜெர்மனி பிரதமர் டாக்டர் ஹெல்மெட்கோல் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1982-ஆம் ஆண்டு முதல் மேற்கு ஜெர்மனியின் பிரதமராக இருந்துவந்த திரு. ஹெல்மெட்கோல் இரண்டு ஜெர்மனிகள் இணைந்த பின் ஒன்றுபட்ட ஜெர்மனியின் முதல் பிரதமராக இருக்கிறார்.

கிழக்கு மற்றும் மேற்கு ஜெர்மனிகள் இணைவதில் முக்கியப் பங்காற்றியவர் திரு. ஹெல்மெட்கோல் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்பு ஜவகர்லால் நேரு விருதைப் பெற்றவர்கள்- பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் திரு. யாசர் அராபட் (1987), சுவீடன் நாட்டு முன்னாள் பிரதமர் ஒலப் பாமே (1985) ஆகியோராவர்.

# புயல்-வெள்ளம் விளைவாக ஏற்படும் நோய்களைத் தடுக்க முதல்வர் நடவடிக்கை



**மா**ண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்கள், புயல் மற்றும் வெள்ளத்தால் ஏற்பட்ட சுகாதாரக் கேடுகள் காரணமாக-பின் விளைவாக ஏற்படும் காலரா போன்ற நோய்களைத் தடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று உத்தர. விட்டுள்ளார்.

இது குறித்து, தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ள விவரம் வருமாறு:-

தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணைக்கு இணங்க, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சு. முத்துசாமி அவர்களின் தலைமையில் மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளின் கூட்டம், 19.11.91 அன்று காலை 11 மணிக்குத் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் கீழ்க்கண்ட ஆயத்த ஏற்பாடுகளையும், மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் பற்றியும் விவாதித்துப் பொதுமக்களின் தகவலுக்காக அறிவிக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் தங்களின் நலன் கருதிப் பின் கண்டவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. குடிநீரைக் காய்ச்சி ஆற வைத்த பிறகே பருக வேண்டும்.

2. சூடிய மட்டும் சூடான உணவையே உண்ணுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட உணவைச் சாப்பிடுவதாக இருந்தால், அதை மீண்டும் சூடாக்கி உண்ண வேண்டும்.

3. பள்ளிகளிலும், வீடுகளிலும் அவ்வப்போது போடப்படும் காலரா மற்றும் டைபாய்டு தடுப்பூசி வசதிகளைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாவட்டங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் மற்றும் சென்னையிலுள்ள பொதுச் சுகாதார நிலையங்களிலும் தடுப்பூசி போட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

4. மக்களின் பாதுகாப்பைக் கருதி தண்ணீர் வழங்கும் நிலையங்களுக்கு குளோரினேஷன் செய்வதற்காக வரும்போது சுகாதாரப் பணியாளர்களுக்குப் பொதுமக்கள் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டும். குளோரினேஷனால் உண்டாகும் விரும்பத்தகாத வாசனையைக் கருதி, குளோரினேஷனைத் தடை செய்யக் கூடாது.

• நான் தமிழினிடத்து அன்பு வைத்திருக்கிறேன் என்றால், அதன் மூலம் நான் எதிர்பார்க்கும் நன்மையையும், அது மறைய நேர்ந்தால் அதனால் இழப்பு ஏற்படும் அளவையும் உத்தேசித்தே நான் தமிழினிடத்து அன்பு செலுத்துகிறேன்.

-தந்தை பெரியார்

5. வெள்ளத்தால் அடித்துக் கொண்டு வரப்படும் இறந்த பிராணிகளின் இறைச்சி விஷத்தன்மை உடையதாக இருக்கலாம் எனக் கருதி அதை உண்ணக் கூடாது என்று பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. வீட்டில் உள்ள ஈக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். உணவுப் பண்டங்களைச் சரியான முறையில் மூடி வைக்க வேண்டும். வீட்டின் அருகில் உள்ள குப்பைத் தொட்டிகளில்தான் பயன்படாத பொருட்களைப் போட வேண்டும்.

தண்ணீர் காரணமாக ஏற்படும் நோய்கள் பரவாமலிருக்க சுகாதாரத்துறை மற்றும் சென்னை மாநகராட்சி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கீழ்க்காணும் தீவிர நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசு ஆணையிட்டிருக்கிறது.

1. பாதிக்கப்பட்ட இடங்களில் காலரா மற்றும் டைபாய்டு தடுப்பூசி வெளியிடங்களில் போடுவதற்கான வசதிகள் செய்தல்.

2. தெருக்களில் உள்ள குப்பைகளை அவ்வப்போது எடுப்பதற்கான தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

3. எல்லாத் தண்ணீர் வழங்கும் நிலையங்களிலும் குளோரினேஷன் செய்வதற்கான நடவடிக்கைகள்.

4. உணவு விடுதிகள் மற்றும் டீ கடைகளில் ஈக்கள் மொய்க்காத நல்ல தரமான பொருட்கள் துப்புரவான முறையில் தரப்படுகின்றனவா என்பதைச் சென்று பார்த்து ஆய்வு செய்தல். மற்றும் உணவு விடுதிகளில் காய்ச்சப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறதா என்பதைச் சரிபார்த்துக் கொள்ளல்.

- இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. •

# சிறுநீரக இயல் துறை மாநாடு

இந்திய சிறுநீரக இயல்துறைக் கழகம் 1970-ஆம் ஆண்டு முதல் செயலாற்றி வருகிறது. இந்தியாவிலுள்ள அனைத்துச் சிறுநீரக இயல் துறை நிபுணர்களும் சிறப்புப் பயிற்சியாளர்களும் இதன் அங்கத்தினர்கள். தவிர, சில அயல்நாட்டு நிபுணர்களும் கூட இதன் உறுப்பினர்களாகச் செயல்படுகின்றனர்.

இக்கழகத்தின் 22-வது ஆண்டு மாநாடு சென்னையில் நவம்பர் மாதம் 22-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. தமிழக அரசின் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைச் செயலாளர் திரு. கே.இன்பசாகரன், இ.ஆ.ப., அவர்கள் 22.11.1991 அன்று குத்து விளக்கேற்றி மாநாட்டினைத் துவக்கி வைத்தார். மாநாட்டிற்குத் தலைமையேற்று அவர் பேசுகையில் 'தமிழ்நாட்டில் இளம்பிள்ளை வாதம் (போலியோ) நோய் பற்றி மக்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். இந்த நோயைக் கட்டுப்படுத்துவதில் தமிழ்நாடு 100 சதவிகிதம் வெற்றி அடைந்து, நாட்டிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. அது போலச் சிறுநீரகக் கோளாறுகள் பற்றியும் ஓரளவு தெரிந்துவைத்திருக்கிறார்கள். இதன் அறிகுறிகள் குறித்து மக்களுக்கு விளக்க வேண்டும். இதற்குச் சிறுநீரகச் சிகிச்சை நிபுணர்களின் ஒத்துழைப்புத் தேவை. மக்களுக்குச் சுகாதாரக் கல்வி அளிப்பது மிகவும் இன்றியமையாதது. சுகாதாரக் கல்வியின் மூலம்தான் நாம் 'கி.பி. 2000-ஆம் ஆண்டில் அனைவருக்கும் சுகாதாரம்' என்ற நிலையை அடைய முடியும்' என்றார்.

பிரபல நரம்பியல் நிபுணர் பேராசிரியர் டாக்டர் பி. இராமமூர்த்தி அவர்கள் மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் 'தற்போது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு நெருங்கிய உறவினர்களின் சிறுநீரகம் மட்டுமே அரசு மருத்துவமனைகளில் பொருத்தப்படுகிறது. இதில் பல பிரச்சினைகள் உள்ளன. ஆனால், இந்தியாவில், சிறுநீரகக் கோளாறினால் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்குத் தற்போது சிறுநீரகம் தேவைப்படுகிறது. இவர்கள் எல்லோருக்கும் உறவினர்களின் சிறுநீரகம் கிடைப்பது கடினம். எனவே, உறவினர் அல்லாதவர்களின் சிறுநீரகத்தைப் பயன்படுத்துவது பற்றி இம்மாநாட்டில் நிபுணர்கள் விவாதிக்க வேண்டும்.

### சட்டத் திருத்தம்

இறந்தவர்களின் உடலிலிருந்து சிறுநீரகத்தை எடுத்து, தேவையானவர்களுக்குப் பொருத்த நடப்பு மக்களவைக் கூட்டத்தில் சட்டத் திருத்தம் கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. சட்டத் திருத்தம் கொண்டுவந்தால் மட்டுமே போதாது. அதை மாநில அரசுகளும் அமல்படுத்தச் சிறுநீரக இயல்துறை நிபுணர்கள் உயர்மட்டக் குழு ஒன்றை அமைத்துச் செயல்பட வேண்டும்.

அதுமட்டுமின்றிச் செயற்கை இதயவால்வு கண்டு பிடிக்கப்பட்டுள்





● மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களை, மாண்புமிகு மத்திய விமானப் போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. மாதவராவ் சிந்தியா அவர்கள் (9.11.91) சென்னையில் சந்தித்தார்.

ளதைப் போல மின்னணுவினால் இயங்கக்கூடிய சிறிய அளவிலான செயற்கைச் சிறுநீரகத்தைக் கண்டு பிடிக்கச் சிறுநீரக நிபுணர்கள் ஆய்வு செய்ய வேண்டும்'. என்று கேட்டுக் கொண்டார்.

முன்னதாக, மாநாட்டிற்கு வந் திருந்தவர்களை வேலூர் கிறித்துவ மருத்துவக் கல்லூரியின் சிறுநீரக இயல்துறைப் பேராசிரியரும் இம் மாநாட்டின் அமைப்புச் செயலாளரு மான டாக்டர் ஜே.சி.எம். சாஸ்திரி அவர்கள் வரவேற்றுப் பேசினார். டாக்டர் சி.கே. ஜேகப் நன்றியுரை ஆற்றினார்.

மாநாட்டில் பிரபல ரஷியச் சிறு நீரக இயல்துறை நிபுணர் டாக்டர் மாயா இக்னதோவா, சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசு பொது மருத்துவமனையின் சிறுநீரக இயல்துறை தலைமைப் பேராசிரியர் டாக்டர் எம்.ஏ. முத்துசேதுபதி உட்பட இந்திய, வெளிநாட்டு நிபு ணர்கள் சுமார் 137 பேர் கலந்து கொண்டனர்., இம்மாநாட்டில் சிறு நீரக இயல் சார்ந்த சுமார் 70-க்கும் மேற்பட்ட பல்வேறு ஆராய்ச்சிக் கட்டுரைகள், கருத்தரங்கங்கள் மற்றும் நவீன முன்னேற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன.

**சிறுநீரக இயலில் சென்னை அரசு பொது மருத்துவமனையின் சாதனை:**

சென்னை அரசு பொது மருத்துவ மனையின் சிறுநீரக இயல்துறையில் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை 1987-ஆம் ஆண்டு முதல், முறை யாகத் தொடர்ந்து நடைபெற்று வரு கிறது. இந்தியாவிலேயே இலவச மாகச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யும் ஒரே அரசு மருத்துவமனை சென்னை அரசு பொது மருத்துவமனை என்பது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு, அறுவைச் சிகிச்சைக்கு முன்பு நோயாளியைக் கவனித்தல், டயா லிசிஸ், அறுவைச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் நோயாளிக்கு வழங்கப்படும் மருந் துகள் உட்பட அனைத்தும் இலவச மாகவே வழங்கப்படுகின்றன. சிறு நீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு இங்கு உறவினர்களின் சிறுநீரகமே பயன்படுத்தப்படுகிறது. நாட்டில் மற்ற மருத்துவமனைகளுடன் ஒப் பிடும்போது இங்கு நடைபெறும் சிறு நீரக மாற்று அறுவைச் சிகிச்சை முழு வெற்றியை அடைந்திருப்பதாக இந்தத் துறையின் தலைமைப் பேராசிரியர் டாக்டர் எம்.ஏ. முத்து சேதுபதி குறிப்பிட்டார்.

சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனையின் சிறுநீரக இயல் துறை, இதுவரை 171 சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய் துள்ளது. தமிழ்நாடு தவிர அண்டை மாநிலங்கள், மேற்கு வங்காளம், அந்தமான் தீவுகள் போன்ற தொலை தூர இடங்களிலிருந்தும் இங்கு வந்து சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்துகொண்டுள்ளனர். இது தவிர, அண்டை நாடுகளான இலங்கை, நேபாளம் போன்ற நாடு களிலிருந்தும் வந்த நோயாளிகளுக்கு இங்கு வெற்றிகரமாகச் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும். இந்தத் துறையில் தற்சமயம் வாரத்திற்கு ஆறு மாற்று அறுவைச் சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. சிறு நீரகக் கோளாறினால் இங்கு வரும் நோயாளிகளின் எண்ணிக்கை அதி கரிக்கவே, இந்த அறுவைச் சிகிச் சையை வாரத்திற்கு எட்டாக உயர்த் தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இங்கு ஆண்டிற்குச் சுமார் 9,000 புற நோயாளிகளும், 2,000 நோயாளிகள் மருத்துவமனையில் தங்கியும் சிகிச்சை பெறுகிறார்கள். இங்கு அறுவைச் சிகிச்சை பெற்ற அனைத்து நோயாளிகளின் முன் னேற்றம் குறித்து ஒவ்வொரு வார மும் தொடர்ந்து கண்காணிக்கப் பட்டு வருவது மகிழ்ச்சியூட்டுவதாக இருக்கிறது.

**- நிகழ்ச்சித் தொகுப்பு: ஜே. சந்திரன்.**



# காவேரி

## மத்திய அரசின் அறிக்கை

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புக் குறித்து நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை மத்திய அரசு தாக்கல் செய்தது. அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது:-

'தமிழ்நாட்டிற்கும், கர்நாடக மாநிலத்துக்கும் இடையே காவிரித் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வதுபற்றி எழுந்துள்ள பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை வழங்கியுள்ளது. அந்தத் தீர்ப்பை, மத்திய அரசு நிச்சயம் அமலபடுத்தும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை.

'காவிரித் தகராறு பற்றிய வழக்கில் உச்ச நீதிமன்றம் 2 அம்சங்களை மிகத் தெளிவாகத் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

முதலாவதாக- தன்னிச்சையாகப் புதிதாக அவசரச் சட்டம் பிறப்பித்துக் கொள்ள கர்நாடக மாநில அரசுக்கு எந்த அதிகாரமும் அரசியல் சட்டப்படி இல்லை. எனவே, கர்நாடக மாநில ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டம் செல்லாது.

இரண்டாவதாக, உச்ச நீதிமன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட டிரிபியூனல் அமைப்பிடம், இடைக்கால உத்தரவு வழங்க வேண்டும் என்று பரிசீலிக்கப்பட்ட அல்லது வழக்கில் உள்ள ஏதாவது ஒரு மாநிலம் கேட்டுக் கொள்ளும்போது, அது பற்றி விசாரித்து இடைக்காலத் தீர்ப்பு வழங்க டிரிபியூனலுக்கு முழு அதிகாரம் உள்ளது.

இதற்கு 1956-ஆம் ஆண்டு தண்ணீர்த் தகராறு சட்டம் பிரிவு 5 உட்பிரிவு 2-இன் படி அரசியல் சட்டத்தின் மூலம் அதிகாரம் உள்ளது.

மேற்கண்ட இரு அம்சங்களும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் மிக முக்கியமானவை.

**அட்டைப்பட விளக்கம்:**

**முதல் அட்டை**

மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னையில் மழை வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள மக்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறி உதவிகள் வழங்கிய காட்சி (16.11.91).

**இரண்டாம் பக்க அட்டை:**

அரசு தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பங்கேற்ற தேசிய ஒருமைப்பாடு நாள் உறுதிமொழி ஏற்கும் விழா நிகழ்ச்சி (19.11.91).

**கடைசிப்பக்க அட்டை:**

தமிழகத்தின் வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு இந்தியப் பிரதமரால் அனுப்பப் பட்ட மத்திய அரசு குழுவின் தலைவர் மாண்புமிகு மத்திய அரசு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. பல்ராம் ஜாக்கர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர் களைச் சந்தித்தார் (24.11.91).

ஒரு புராணக் கதை

# மதுவினால் அழிந்த சாம்ராஜ்யம்

எம்.ஏ. வேங்கடகிருஷ்ணன்



எத்தனையோ சாம்ராஜ்யங்களைக் குடிப்பழக்கம் அழித்திருக்கிறது என்பது அனைவரும் அறிந்தது. ஆனால், கிருஷ்ண பரமாத்மாவின் குலமே குடிப்பழக்கத்தால்தான் அழிந்தது என்பது ஓர் ஆச்சரியமான செய்தி.

ஒரு சமயம் துவாரகையில் ஏதோ ஒரு விழா. அப்போது அவ்வூரிலிருந்தவர்கள் பலர் குடித்துவிட்டுத் தன்னிலை மறந்திருந்தனர். அப்போது விஸ்வாமித்ரர், கண்வர், நாரதர் ஆகிய மூவரும் துவாரகைக்கு வந்தனர். குடிபோதையிலிருந்த வீரர்கள் சிலர், ஸாம்பன் என்பவனுக்குக் கர்ப்பிணிப்பெண் வேடமிட்டு, அம்முனிவர்கள் முன்னால் அழைத்துச் சென்றனர். 'முனிவர்களே! இவளுக்கு என்ன குழந்தை பிறக்கும்?' என்று வினவினர். உண்மையை உணர்ந்தவர்களான முனிவர்கள் 'இவனுக்கு ஓர் உலக்கை தான் பிறக்கும். குடிபோதையால் மதிமயங்கிக் கிடக்கும் உங்கள் குலத்தவர்கள் அனைவரும் அந்த உலக்கையால் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு சாகப் போகிறீர்கள்; அதனால் உங்கள் விருஷ்ணி குலமே நாசமாகப் போகிறது' என்று சாபம் அளித்துவிட்டனர். கண்ணபிரானுடைய குலம் விருஷ்ணி குலம். அதைப்போலவே ஸாம்பனுக்கு ஓர் உலக்கை பிறந்தது!

இச்செய்தி அரசனுக்குத் தெரிவிக்கப்பட்டது. உடனே அரசன் 'இன்று முதல் யாரும் கள்ளையோ, சாராயத்தையோ குடிக்கக் கூடாது; அப்படி யாராவது குடித்ததாகத் தெரிந்தால் குடும்பத்துடன் அவர்கள் கழுவில் ஏற்றப்படுவார்கள்' என்று முரசு அறைவித்தான். ஸாம்பன் பெற்ற இரும்பு உலக்கையைப் பொடிப் பொடியாக்கிக் கடலில் கரைத்துவிடுமாறும் செய்தான். மகாபாரத யுத்தம் முடிந்து 36 வருடங்கள் கழிந்தன. விருஷ்ணி குலத்தவர்கள் அனைவரும் ஒரு விழாவுக்காகப் பிரபாஸக்ஷேத்ரம் சென்றனர். அங்கு ஒரே பார்ட்டும் கூத்தும் கும்மாளமுமாக இருந்தனர். நன்றாகக் குடித்தும் விட்டனர். அப்போது ஒருவரோடொருவர் பேசும்போது வார்த்தைகள் தடித்துச் சண்டை மூண்டுவிட்டது. கடற்கரையில் வளர்ந்திருந்த கோரைப் புற்களைப் பிடுங்கி ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளத் தொடங்கினர். அங்கேதான் முனிவருடைய சாபம் பலிக்கத் தொடங்கியது.

கடலில் கரைக்கப்பட்ட உலக்கைத் தூள்தான் கோரைப் புற்களாக வளர்ந்திருந்தது. அவை பிடுங்கப்பட்டபோது, உலக்கைகளாகவே மாறிவிட்டன. குடிபோதையில் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு அனைவருமே இறந்து விட்டனர். இதைக் கண்ணனாலும் தடுக்க முடியவில்லை!

உலக்கையைப் பொடி செய்து கடலில் கரைத்தபோது, ஒரு சிறு துண்டு இரும்பு மட்டும் மீதமிருந்தது. அதையும் கடலில் எறிந்துவிட்டனர். அதை ஒரு மீன் விழுங்கியது. அந்த மீன் ஒரு வேடன் கையில் கிடைத்தது. மீனை (உணவுக்காக) அறுத்த வேடன் அந்தக் கூரான இரும்புத் துண்டைத் தன் அம்பின் முனையில் பொருத்திக் கொண்டான். கண்ணபிரான் ஒருநாள் ஒரு மரத்தடியில் சயனித்திருந்தபோது தூரத்திலிருந்து அதைப் பார்த்த வேடன், ஒரு மிருகம் என்று எண்ணி கண்ணன் கால்மீது விஷம் தோய்ந்த அம்பை எய்ய, அது காரணமாகவே கண்ணன் உயிர் பிரிந்தது. ஆக, கண்ணனையும் முனிவர் சாபம் விட்டுவைக்கவில்லை.

இப்படியாகக் குடிப்பழக்கத்தினால் ஒரு குலமே - அதுவும் கண்ணபிரானின் குலமே அழிந்தது என்கிற செய்திகள் மகாபாரதத்தின் கடைசியில் (மௌஸல பர்வத்தில்) உள்ளன.

- நன்றி: ஆனந்த விகடன்.





# 'நீலகிரி மாவட்டத்தில் காடுகள் வளர்ப்புத் திட்டம்!

**த**மிழ்நாட்டில் இயற்கை எழில் கொஞ்சும் மலைப்பகுதிகளால் அமைந்தது நீலகிரி மாவட்டம். இம் மாவட்டத்தில் பாய்ந்தோடும் நீரோடைகளும், வானளாவிய மரங்களும், பசுமைமாறா புல்வெளிகளும், கவின்மிகு சோலைகளும், சுவைமிகு பழமரங்களும் மூலிகைச் செடிகளும், காப்பி, தேயிலைத் தோட்டங்களும் வாசனைத் திரவியங்களும், சந்தனம், தேக்கு போன்ற விலை உயர்ந்த மரங்களும், துள்ளியோடும் மான்களும், பிளிரும் களிறுகளும், அகவும் மயில்கள் உட்பட பல்வகை உயிரினங்களும் பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை பூத்துக்குலுங்கும் குறிஞ்சி மலர்களும், பல்வகை மணம் வீசும் மலர்களும் மலர்ந்து அழகுக்கு அழகூட்டுவனவாய் கவின் மிகு வனப்பகுதிகளைக் காணலாம்.

இயற்கைத்தாய் நமக்களித்த வரப்பிரசாதம் வனப்பகுதிகளாகும். வனம் இல்லையேல் மரங்கள் இல்லை. மரங்கள் இல்லையேல் மழையில்லை. மழையில்லையேல் நீரில்லை; நீரின்றி அமையாது உலகு. ஆனால் மனிதன் இயற்கையை அழித்து தன்னையே அழித்துக் கொள்கிறான். மரங்களை வெட்டி-விலங்குகளை வேட்டையாடி காட்டை அழிக்க முற்படுகிறான். இதனால் நம் நாட்டின் வனப்பகுதி நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது.

இதனைக் கருத்திற்கொண்டு அரசு வனங்களைப் பாதுகாக்கப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அந்நடவடிக்கைகளில் ஒன்றுதான் காடு வளர்ப்புத் திட்டம்.

நீலகிரி மாவட்டத்தில் இப்பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் இப்பணி செவ்வனே நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ், வனத்துறையினர் ஆங்காங்கு மரக்கன்றுகள் நடுதல், புல்வெளிகள் அமைத்து மரக்கன்றுகளை விலங்குகள் அழிக்காமல் இருக்கப் பாதுகாப்பு வேலிகள் போடுதல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றனர்.

மக்கள் செல்லக்கூடிய பகுதிகளில் இதுபோன்ற பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மக்கள் செல்ல முடியாத வனப்பகுதிகளிலும் மரங்களை வளர்க்க அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதன் பலனே விமானத்தின் மூலம் விதை தூவும் பணியாகும்.

நீலகிரி வடக்கு வனக்கோட்ட மலைப்பகுதியில் ரூ.13 இலட்சம் செலவில் தற்போது விமானம் மூலம் விதைகள் 2,000 எக்டேரில் துவப்பட்டது.

நீலகிரி வடக்கு வனக்கோட்டத்தில், இவ்வாண்டு விமானம் மூலம் விதை தூவும் பணிக்காகப் பால் தட்டி பட்டி-மங்கலப்பட்டி- மாசி கோயில்- அரக்கடவுப்பட்டி-கூட்டுறவுப்பட்டி மற்றும் டவர் லைன் ஆகிய சரகங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இவை தெங்குமராஹாடா-மாயார் ஆற்று ஓரப்பகுதியாகும்.

நீலகிரி கிழக்குச் சரிவுக் காடுகள் வரை செல்லும் மேற்கண்ட பகுதிகளில் பெரும்பாலான இடங்களில் ஆட்கள் சென்று மரக்கன்றுகள் நடுவதரிது. எனவே, இவ்விடங்களில் விமானம் மூலம் விதை தூவி இயற்கை வளத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ் விதை தூவுதற்கு முன்னதாக இப் பகுதிகளில் தனி முயற்சி எடுத்து- தடுப்பு அணை கட்டுதல் நீளக்கால் வாய்கள் வெட்டுதல் போன்ற மண்ணரிப்பு வேலைகள் செய்யப் பட்டுள்ளன. விமானம் மூலம் தூவும் விதைகள் நல்லமுறையில் விரைவில் முளைக்க நிலம் தகுந்தவாறு கொத்தி தயார் செய்யப் பட்டுள்ளது. 14 வகை விதைகள் தூவப்பட்டன. தேக்கு, வாகை, புளி, எலந்தை, சந்தனம், வேம்பு, மூங்கில் உட்பட சுமார் 50 கோடி விதைகள் தூவப்பட்டன.

தற்போது நீலகிரி மாவட்டத்தில் நல்ல மழை பெய்து வருவதால் இந்த விதைகள் அனைத்தும் நன்றாக முளைக்கும் என்ற நிலையுள்ளது. மேலும் ஆட்கள் நடமாட்டம் இல்லாத இடமாக இருப்பதால் தூவும் விதைகள் அழிவு இல்லாமல் முளைத்து விரைவில் மரம் ஆகும். நல்ல மழை பெய்யும். இதனால் நீர் மட்டம் உயரும். வன உயிரினங்களும் பெருகும். சுற்றுப்புறச்சூழல் தூய்மை அடையும். வனவளம் பெருகும். அதனால் நாட்டு வளமும் பெருகும்.

விமானம் மூலம் விதை தூவும் நிகழ்ச்சியை நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செல்வி லீனாநாயர், இ.ஆ.ப., அவர்கள் அண்மையில் துவக்கி வைத்தார். மேலும் இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. பி.மகேந்திரன், மாவட்ட வன அலுவலர் (வடக்கு) திரு. வி. நாகராஜன், மாவட்ட வன அலுவலர் (தெற்கு) திரு. கிருஷ்ண குமார், கூலூர் கோட்ட அலுவலர் திரு. பிரபாகரன், நீலகிரி மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய நிர்வாக இயக்குநர் டாக்டர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்து கொண்டனர். ●

**மூ.நா. கிருஷ்ணமூர்த்தி**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி)**
**நீலகிரி மாவட்டம்**

## மாணவர் பக்கம்

# காலம் போற்றி வாழ்க!

சீனி. விஜயராணி



காலம் போற்றி வாழ்க;-நாளும்
கடமை யாற்றி வளர்க!
ஞாலம் மெச்சும் வெற்றி;-தானே
நாடும் உன்னைச் சுற்றி!

நாளை நாளை என்று,-மெல்ல
நகர்த்திக் காலம் தள்ளி
வேளை வரட்டும் என்போர்;-அவரே
வெட்டிச் சோறு தின்போர்!

அற்ப மான நொடிகள்;-உனக்கே
ஆகும் வெற்றிப் படிகள்!
அற்பு தங்கள் நிகழும்;-உன்னை
அவனி போற்றிப் புகழும்!

கல்விக் கேற்ற இளமை;-அதுவே
கலையில் தேக்கும் வளமை!
நல்ல பணிகள் நாடி - செய்க
நல்கும் நன்மை கோடி!

இமைக்கும் தாம தத்தில்-சரியும்
இயங்கும் கோள்கள் மொத்தம்!
அமைக்கும் உனது பணியை;-கூட
அந்தக் கதியில் கணிப்பாய்!





## உலக மொழிகளில் திருக்குறள்

வான் புகழ் வள்ளுவன் இயற்றிய திருக்குறளை உலகமே போற்றி வருகின்றது. அது உலகின் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 10 மொழிகளில் குறள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அதேபோல, ஆசிய மொழிகளில் 5, ஐரோப்பிய மொழிகளில் 11 என்று பட்டியல் போட்டுக் கொண்டே செல்லலாம். ஆங்கிலத்தில் மட்டும் 36 மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன.

## அறிவுச் சுடர்

1. யுரேஷியாவில் அடங்கியுள்ள நாடுகள் (கண்டங்கள்) எவை?

2. ஆந்திரத்தில் அமைந்துள்ள விண்வெளி ஆராய்ச்சி நிலையம் எங்கு உள்ளது?

3. இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள இயற்கைத் துறை முகங்கள் எத்தனை? அவையாவை?

4. உலகில் ஆழமான ஏரி எது?

5. சீக்கியர்களின் புனித நூல் எது? புனிதத் தலம் எது?

6. இந்தியாவின் மிகப் பெரிய உரத் தொழிற்சாலை எது?

7. எந்த நாட்டில் கிரிக்கெட் தேசிய விளையாட்டு?

8. கயானா (டச்சு) புதிய பெயர் எது?

9. "மூவருலா" என்னும் நூலை எழுதியவர் யார்?

10. இரத்தச் சிவப்பணுக்களைப் பற்றி ஆய்வில் பயன்படும் ஐசோடோப்பு எது?

### விடைகள்

1. யுரோப் (ஐரோப்பா), ஏஷியா (ஆசியா)
2. ஸ்ரீஹரிகோட்டா
3. ஐந்து.
   (i) கண்டலா
   (ii) பம்பாய்
   (iii) மர்மகோவா
   (iv) மங்களூர்
   (v) கொச்சி
4. பைகால்
5. (i) ஆதிகிரகந்தம்
   (ii) அமிர்தசரஸ்
6. சிந்தரி (பீஹார்)
7. ஆஸ்திரேலியா
8. சூரினாம்
9. ஒட்டக்கூத்தர்
10. ரேடியோ சோடியம்

ஜெ. நாராயணன்,
IX - D அரசினர் மேல்நிலைப் பள்ளி
வாலாசாப்பேட்டை
(வ.ஆ.அ.மா)- 632513



# குமரிமாவட்டம்:

# அத்தியாவசியத் தேவைக்குக் கடன் வசதி

விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை விற்பனைக்கூடங்களில் உள்ள ஊரகத் திட்டங்களில் இருப்பு வைத்துக்கொண்டு, அத்தியாவசியத் தேவைகளுக்குக் கடன் பெறும் வசதிகளைத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

கன்னியாகுமரி விற்பனைக்குழு, தனது கட்டுப்பாட்டில் உள்ள வடசேரி, திங்கள்சந்தை, தொடுவெட்டி, குலசேகரம் மற்றும் களியக்காவிளை ஆகிய இடங்களில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இந்த ஈட்டுக்கடன் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது.

அறுவடைக்காலங்களில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய நேரிடுகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு ஈட்டுக்கடன் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சரக்குகளை இருப்பு வைக்க, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ஊரகத் திட்டங்கள் விஞ்ஞானமுறையில் அமைக்கப்பட்டுள்ளன. இங்கே இருப்பு வைக்கப்படும் சரக்குகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன.

சரக்கின் மதிப்பில் 50 சதவிகிதம் வரை ஈட்டுகடன் வழங்கப்படுகிறது. முதல் 30 நாட்களுக்கு வட்டி இல்லை. அடுத்துள்ள நாட்களுக்கு 12 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுகிறது. அதிகபட்சம் ரூ.10,000 வரை கடன் வழங்கப்படுகிறது.

இதனை உழவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு விளக்கக் கூட்டங்களை நடத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் ஆளுகைக்கு உட்பட்ட புத்தேரி கிராமத்தில் அரசு பள்ளியில் 22.10.91-இல் விளக்கக் கூட்டம் நடத்தப்பட்டது.

கூட்டத்திற்கு உழவர்மன்ற அமைப்பாளர் திரு. ப.சரவணப் பெருமாள் அவர்கள் தலைமை வகித்தார். திரு. சி.நடேசன், வேளாண்மை அலுவலர் தரம் பிரிப்பு மையம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு. ஹெச்.எம். அப்துல்கரீம், செயலாளர் கன்னியாகுமரி விற்பனைக்குழு, திரு. ஆர்.பொன்னம்பலம், பிரச்சாரக்கண்காணிப்பாளர், கன்னியாகுமரி விற்பனைக்குழு, திரு. க. தருமர், கண்காணிப்பாளர் தொடுவட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் ஆகியோர் ஈட்டுக்கடன் குறித்து விளக்கஉரை ஆற்றினார்கள். திரு. பிள்ளையார் பிள்ளை, திரு. அம்பலவாணபிள்ளை ஆகியோர் ஈட்டுக்கடன் பெறுவதில் உள்ள தங்கள் அனுபவங்களை எடுத்துரைத்தார்கள். திரு. ஆர்.நயினார் அய்யாவு, கண்காணிப்பாளர் வடசேரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அவர்கள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் செயல்பாடு குறித்து உழவர்களுக்கு ஏற்பட்டுள்ள சந்தேகங்களுக்குத் தெளிவுரை வழங்கி நன்றி கூறினார்கள்.

—எச்.எம். அப்துல்கரீம்
செயலாளர்
கன்னியாகுமரி விற்பனைக்குழு
நாகர்கோவில்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

# எளிமையானவை! நேர்த்தியானவை!
# மேன்மை மிகுந்தவை!
# தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

*அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.*


தமிழரசு